சாமுவேலின் முதலாம் புத்தகம்

எல்க்கானாவும் அவனது குடும்பமும் சீலோவில் ஆராதித்தனர்

1 எப்பிராயீம் என்னும் மலைநாட்டில்
உள்ள ராமா என்னும் நகரில் எல்க்கானா
என்னும் பெயருள்ள மனிதன் இருந்தான்,
அவன் சூப் என்னும் குடும்பத்தைச் சேர்ந்த
வன். எல்க்கானா எரோகாமின் மகன்,
எரோகாம் எலிகூவின் மகன், எலிகூ
தோகுவின் மகன், தோகு சூப்பின் மகன்,
எப்பிராயீம் என்னும் கோத்திரத்திலிருந்து
வந்தவன்.
2 எல்க்கானாவிற்கு இரண்டு மனைவி
மார்கள் இருந்தனர். அவர்களில் ஒருத்தியின்
பெயர் அன்னாள், மற்றொருவள் பெயர்
பெனின்னாள். பெனின்னாளுக்கு பிள்ளை
கள் இருந்தனர். ஆனால் அன்னாளுக்கோ
பிள்ளைகள் இல்லை.
3 ஒவ்வொரு ஆண்டும் எல்க்கானா தனது
நகரமான ராமாவை விட்டு சீலோவுக்குப்
போவான். அங்கு அவன் சர்வ வல்லமை
யுள்ள கர்த்தரை தொழுதுகொண்டான்,
அங்கு கர்த்தருக்குப் பலிகளும் செலுத்தி
னான். சீலோவில் ஓப்னியும் பினெகாசும்
கர்த்தருடைய ஆசாரியர்களாகச் சேவை
செய்து வந்தனர். இவர்கள் ஏலியின்
மகன்கள். 4 ஒவ்வொரு முறையும் எல்க்கானா
பலிகளை செலுத்தும்போது, அதில் ஒரு
பங்கினை பெனின்னாளுக்கும், அவளது
பிள்ளைகளுக்கும் கொடுத்து வந்தான்.
5 எல்க்கானா அன்னாளுக்கும் இரட்டிப்பான
பங்கினை எப்போதும் கொடுத்து வந்தான்.
ஏனென்றால் அவளில் அவன் அன்பு
செலுத்தினான். கர்த்தர் அவளது கர்ப்பத்தை
அடைத்திருந்தார்.

பெனின்னாள் அன்னாளை துன்புறுத்தல்

6 பெனின்னாள் எப்பொழுதும் அன்னா
ளைத் துக்கப்படுத்தி அவள் துயருறுமாறு
செய்வாள். ஏனென்றால் அன்னாள்
குழந்தைப்பேறு இல்லாதவளாக இருந்தாள்.
7 இது ஒவ்வொரு ஆண்டும் நிகழ்ந்து வந்தது.
ஒவ்வொரு முறையும் அவர்களின் குடும்பம்
சீலோவிலுள்ள கர்த்தருடைய ஆலயத்திற்கு
போகும்போதும், பெனின்னாள் அன்னாளை
வேதனைப்படுத்துவாள். ஒரு நாள் எல்க்
கானா பலிகளைச் செலுத்திக் கொண்
டிருந்தான், அன்னாள் துக்கம் மீறி அழ
ஆரம்பித்தாள், அவள் அன்று எதையும்
உண்ணவில்லை. 8 அவளது கணவனான
எல்க்கானா அவளிடம், "அன்னாள்! ஏன்
நீ அழுகிறாய்? ஏன் உண்ணாமல் இருக்கி
றாய்? ஏன் துக்கமாய் இருக்கிறாய்? நீ
எனக்குரியவள், நான் உனது கணவன்.
நான் பத்து மகன்களைவிட உனக்கு மேலா
னவன் என்பதை சிந்திக்ககூடாதா"
என்றான்.

அன்னாளின் ஜெபம்

9 உணவை உண்டு குடித்த பின்,
அன்னாள் அமைதியாக எழுந்து கர்த்தரிடம்
ஜெபம் செய்யச் சென்றாள். கர்த்தருடைய
பரிசுத்த ஆலயத்தின்* கதவருகில் ஏலி
எனும் ஆசாரியன் ஒரு நாற்காலியில் உட்
கார்ந்து கொண்டிருந்தான், 10 அன்னாள்
மிகவும் துக்கமாக இருந்தபடியால் அவள்
கர்த்தரிடம் அழுதுகொண்டே வேண்டுதல்
செய்தாள். 11 அவள் தேவனிடம் ஒரு விசேஷ
வாக்குறுதியைக் கொடுத்தாள். அவள், "சர்வ
வல்லமையுள்ள கர்த்தாவே, நான் எவ்வளவு
துக்கத்தில் இருக்கிறேன் என்பதைப் பாரும்.
என்னை நினைவுகூறும்! என்னை மறவாதே
யும். நீர் எனக்கு ஒரு மகனைத் தந்தால்,
நான் அவனை உமக்கே தருவேன். அவன்
நசரேயனாக இருப்பான்; அவன் திராட்சை
ரசமோ அல்லது வெறிகொள்ளத் தக்கவை
களை அருந்தாமலும் இருப்பான். எவரும்
அவனது தலைமயிரை வெட்டாமல் இருப்
பார்கள்"* என்று வேண்டிக்கொண்டாள்.
12 இவ்வாறு அன்னாள் நீண்ட நேரம்
கர்த்தரிடம் ஜெபிக்கும்பொழுது அவளது
வாயையே ஏலி கவனித்துக் கொண்டி
ருந்தான். 13 அன்னாள் தன் இருதயத்தில்
ஜெபித்துக்கொண்டிருந்தாள். அவளது உதடு
கள் அசைந்தன, ஆனால் அவள் உரக்க
எதையும் சொல்லவில்லை. எனவே ஏலி,

பரிசுத்த ஆலயம் சீலோவிலிருந்த பரிசுத்தக் கூடாரம். இங்கே ஜனங்கள் கர்த்தரை தொழுது கொள்ள போவார்கள் அல்லது அவர்கள் பரிசுத்தக் கூடாரத்தை அமைத்திருந்த விசாலமான இடம்.

எவரும் ... வெட்டாமல் இருப்பார்கள் நசரேய ஜனங்கள், தேவனுக்கு ஒரு சிறந்த முறையில் ஊழியம் செய்வதாக வாக்குதத்தம் செய்தவர்கள். அதன்படி அவர்கள் தம் தலைமயிரை வெட்டிக் கொள்ளமாட்டார்கள். அவர்கள் திராட்சைரசத்தை குடிக்கமாட்டார்கள்.

அன்னாளைக் குடித்திருப்பவளாக எண்ணி
னான். 14ஏலி அன்னாளிடம், "நீ அதிகப்
படியாகக் குடித்திருக்கின்றாய்! இது குடியை
விடவேண்டிய நேரம்" என்றான்.
15அதற்கு அன்னாள், "ஐயா, நான்
திராட்சைரசமோ அல்லது மதுவையோ
குடிக்கவில்லை. நான் ஆழமான துயரத்
தில் இருக்கிறேன். நான் எனது துன்பங்களை
யெல்லாம் கர்த்தரிடம் சொல்லிக்கொண்டிருந்
தேன். 16மோசமான பெண் என்று என்னை
எண்ணவேண்டாம். நான் நீண்ட நேரமாக
பிரார்த்தனை செய்துகொண்டிருக்கிறேன்.
ஏனென்றால் எனக்கு அநேக தொல்லைகள்
உள்ளன மற்றும் நான் மிகவும் துக்கத்தில்
இருக்கிறேன்" என்றாள்.
17ஏலி அவளிடம், "சமாதானத்துடனே
போ. இஸ்ரவேலரின் தேவன் நீ கேட்டதை
யெல்லாம் உனக்குத் தருவாராக" என்றான்.
18அன்னாள், "உம்முடைய அடியாளுக்கு
உம் கண்களில் இரக்கத்தைக் காணட்டும்"
என்றாள். பிறகு அவள் அங்கிருந்து போய்
உணவருந்தினாள். அதற்குப்பின் அவள்
துக்கமாயிருக்கவில்லை.
19மறுநாள் அதிகாலையில் எல்க்கானா
வின் குடும்பம் எழுந்து, கர்த்தரைத் தொழுது
கொண்ட பிறகு ராமாவிலுள்ள தங்கள்
வீட்டிற்கு திரும்பிப் போனார்கள்.

சாமுவேலின் பிறப்பு

20எல்க்கானா தன் மனைவியான அன்னா
ளோடு பாலின உறவு கொண்டான், கர்த்தர்
அன்னாளை நினைவுக்கூர்ந்தார். அதே
காலம் அதற்கடுத்த ஆண்டில் அவள் கர்ப்ப
முற்று ஒரு மகனைப் பெற்றெடுத்தாள்.
அவள் தன் மகனுக்கு சாமுவேல் என்று
பெயரிட்டாள். அவள், "இவன் பெயர்
சாமுவேல், ஏனென்றால் நான் கர்த்தரிடம்
இவனைக் கேட்டேன்" என்றாள்.
21அந்த ஆண்டில் எல்க்கானா சீலோ
விற்குப் பலிகளைக் கொடுப்பதற்காகவும்
மற்றும் தேவனுக்குத் தந்த வாக்குறுதியை
நிறைவேற்றும்படியும் சென்றான். அவன்
தனது குடும்பத்தை தன்னோடு அழைத்துக்
கொண்டு சென்றிருந்தான். 22ஆனால்
அன்னாள் செல்லவில்லை. அவள் எல்க்கா
னாவிடம், "பிள்ளை வளர்ந்து திட உணவு
உண்ணும் வயதை அடையும்பொழுது, நான்
இவனைச் சீலோவிற்கு அழைத்துவருவேன்.
பிறகு அவனைக் கர்த்தருக்குத் தருவேன்.
அவன் நசரேயனாக* இருப்பான். அவன்
சீலோவிலேயே தங்கி இருப்பான்" என்றாள்.
23அன்னாளின் கணவனான எல்க்கானா
அவளிடம், "உனக்கு எது நல்லதென்று
தெரிகிறதோ அதைச் செய். பையன் பாலை
மறந்து உணவு உண்ணும் காலம்வரை நீ
வீட்டிலேயே தங்கியிரு. நீ சொன்னபடியே
கர்த்தர் உனக்கு செய்வாராக" என்றான்.
எனவே அன்னாள் தன் மகனை வளர்ப்ப
தற்காக வீட்டிலேயே இருந்தாள்.

சீலோவில் ஏலியிடம் சாமுவேலை அன்னாள் கொண்டுபோகிறாள்

24பிள்ளை வளர்ந்து உணவு உண்ண
ஆரம்பித்ததும் அன்னாள் அவனை அழைத்
துக்கொண்டு சீலோவிலுள்ள கர்த்தருடைய
ஆலயத்திற்குப் போனாள். தன்னோடு மூன்று
காளைகளையும், ஒரு மரக்கால் மாவையும்,
ஒரு துருத்தி திராட்சைரசத்தையும் கொண்டு
வந்தாள்.
25அவர்கள் கர்த்தருக்கு முன் சென்றார்கள்.
எல்க்கானா காளையைப் பலியாகக் கொன்
றான். அவன் முன்பு கர்த்தருக்கென்று
வழக்கமாகச் செய்வதுபோல் செய்தான்.
பின் அன்னாள் ஏலியிடம் பிள்ளையைக்
கொடுத்தாள். 26அன்னாள் ஏலியிடம்,
"என்னை மன்னித்துக்கொள்ளுங்கள் ஐயா,
கர்த்தரை நோக்கி ஜெபம் செய்தபடி உங்கள்
முன் நின்ற அதே பெண்தான் நான். நான்
உண்மையை சொல்கிறேன் என
இதன்மூலம் உறுதி கூறுகிறேன். 27நான்
இக்குழந்தைக்காக ஜெபம் செய்து
கொண்டேன், கர்த்தர் என் ஜெபத்திற்கு
பதில் அளித்தார். கர்த்தர் இந்தக் குழந்தையை
எனக்குத் தந்தார். 28இப்போது நான் இந்தக்
குழந்தையை கர்த்தருக்குத் தருகிறேன்.
அவன் தன் வாழ்நாள் முழுவதும் கர்த்த
ருக்குச் சேவை செய்வான்" என்றாள்.
பிறகு அன்னாள், அந்தப் பிள்ளையை
அங்கேயே விட்டுவிட்டு கர்த்தரைத்
தொழுதுகொண்டாள்.

அன்னாள் நன்றி சொன்னது (அன்னாளின் ஜெபம்)

2 அன்னாள் ஜெபம் பண்ணி,

"என் இதயம் கர்த்தருக்குள்
மகிழ்ச்சியாக இருக்கிறது!
நான் என் தேவனுக்குள் மிக்க
பலத்துடன் இருப்பதை
உணருகிறேன்!
என் எதிரிகளைக் கண்டு
நகைக்கிறேன்.
உமது இரட்சிப்பினாலே நான்
மகிழ்ச்சி அடைகிறேன்!
2 கர்த்தரைப்போல பரிசுத்தமான
வேறு தேவன் இல்லை.
உம்மைத் தவிர வேறு தேவன்
இல்லை!
நமது தேவனைப் போன்ற

நசரேயன் தேவனுக்கு ஒரு விசேஷ வாக்குதத்தம் செய்த ஒரு மனிதன். எபிரெய மொழியில் "பிரிக்கப்பட்டவன்" எனப் பொருள்படும்.

ஒரு கன்மலை* வேறில்லை.
3 இனி அகம்பாவத்தோடும்
தற்பெருமையோடும் பேசாதிருங்கள்!
ஏனென்றால் தேவனாகிய கர்த்தர்
எல்லாவற்றையும் அறிவார்,
செய்கைகள் அவராலே
நியாயந்தீர்க்கப்படும்.
4 வலிமையான வீரர்களின் வில்கள்
முறிகிறது!
பலவீனமானவர்கள் பெலன்
பெறுகிறார்கள்.
5 கடந்த காலத்தில் ஏராளமான
உணவுப் பொருட்களை
வைத்திருந்த ஜனங்கள் இப்போது
உணவுக்காகக் கஷ்டப்பட்டு
வேலை செய்யவேண்டும்.
ஆனால் கடந்த காலத்தில் பசியோடு
இருந்தவர்கள்,
எல்லாம் இனிமேல் பசியாயிரார்கள்.
முன்பு குழந்தை பேறு இல்லாமல்
இருந்த பெண் இப்போது ஏழு
குழந்தைகளைப் பெற்றிருக்கிறாள்!
ஆனால் முன்பு நிறைய
குழந்தைகளைப் பெற்ற பெண்
அக்குழந்தைகள் தம்மை விட்டு
விலகியதால் வருத்தமாயிருக்கிறாள்.
6 கர்த்தர் மரணத்தைக் கொண்டு
வருகிறவராகவும்
வாழ வைக்கிறவராகவும்
இருக்கின்றார்.
அவரே பாதாளத்தில் இறங்கவும்,
அதிலிருந்து ஏறவும் பண்ணுகிறவர்.
7 கர்த்தர் சிலரை ஏழையாக்குகிறார்,
அவரே இன்னும் சிலரைச்
செல்வந்தராக்குகிறார்.
கர்த்தர் சிலரைத் தாழ்த்துகிறார்,
மற்றவர்களை மேன்மையாக்குகிறார்.
8 கர்த்தர் ஏழை ஜனங்களை
புழுதியிலிருந்து உயிர்ப்பிக்கிறார்
மற்றும் அவர்களை
குப்பையிலிருந்து உயர்த்துகிறார்.
கர்த்தர் ஏழை ஜனங்களை
முக்கியமானவர்களாக்குகிறார்.
அவர்களை அவர் இளவரசர்களோடும்
மதிப்புக்குரிய விருந்தினர்களோடும்
அமர வைக்கிறார்.
கர்த்தர் உலகம் முழுவதையும்
படைத்தார்!
இந்த முழு உலகமும் அவருக்குரியது!
9 கர்த்தர் தமது பரிசுத்தவான்களின்
பாதங்களைப் பாதுகாக்கிறார்
அவர்களை அழிவினின்றும் காப்பார்.
ஆனால் தீயவர்கள் இருளிலே
அமைதியாவார்கள்.
அவர்களின் பெலன் அவர்களை
வெற்றியடையச் செய்யாது.
10 கர்த்தரை எதிர்ப்பவர்கள்
சிதறடிக்கப்படுவார்கள்.
உன்னதமான தேவன்
பரலோகத்திலிருந்து
தமது எதிரிகளுக்கு எதிராக
இடியாய் முழங்குவார்.
கர்த்தர் பூமியின் கடைசிபகுதியையும்
நியாயந்தீர்ப்பார்.
அவர் தமது அரசனுக்கு
வல்லமையை அளிப்பார்.
தாம் அபிஷேகம் பண்ணினவரின்
கொம்பை உயரப்பண்ணுவார்”
என்றாள்.

11 பிறகு எல்க்கானா ராமாவிலுள்ள தன்னு
டைய வீட்டிற்குத் திரும்பினான். ஆனால்
அந்தப் பிள்ளை சீலோவில் தங்கி ஆசாரி
யனாகிய ஏலிக்குக்கீழ் கர்த்தருக்கு முன்பாக
பணிவிடைச் செய்தான்.

ஏலியின் தீய மகன்கள்

12 ஏலியின் மகன்கள் எல்லாரும் தீயவர்
கள். அவர்கள் கர்த்தருக்கு பயப்படாதவர்
கள். 13 ஜனங்களிடம் ஆசாரியர்கள் எவ்வாறு
நடக்கவேண்டும் என்பது பற்றியும் கவலைப்
படாதவர்கள். ஒவ்வொரு முறையும் ஜனங்
கள் பலி செலுத்தும்போது, ஆசாரியர்கள்
இறைச்சியைக் கொதிக்கும் தண்ணீருள்ள
பாத்திரத்தில் போடவேண்டும். பிறகு ஆசாரி
யனின் வேலைக்காரன் மூன்று முனைகளை
உடைய பெரியமுள் கரண்டியைக் கொண்டு
வருவான். 14 பாத்திரத்தில் இருக்கிற இறைச்
சியை எடுக்க ஆசாரியரின் வேலைக்காரன்
இந்த ஆயுதத்தைத்தான் பயன்படுத்த
வேண்டும். பாத்திரத்தில் இருந்து அந்த
வேலைக்காரன் எடுத்துத் தரும் இறைச்சியை
மட்டுமே ஆசாரியன் எடுத்துக்கொள்ள
வேண்டும். சீலோவிற்கு பலிகளை கொடுக்க
வந்த இஸ்ரவேலர் அனைவருக்கும் ஆசாரி
யர்கள் செய்யவேண்டிய முறை இதுவே
ஆகும்.

15 ஆனால் ஏலியின் பிள்ளைகளோ
இப்படிச் செய்யவில்லை. பலிபீடத்தில்
கொழுப்பு எரிக்கப்படுமுன்னரே அவர்களின்
வேலைக்காரர்கள் பலிகொடுக்கும் ஜனங்
களிடம் சென்று, “பொறிப்பதற்காக ஆசாரிய
ருக்குக் கொஞ்சம் இறைச்சியைக் கொடுங்
கள். அவர், உங்களிடமிருந்து வேகவைத்த
இறைச்சியைப் பெறமாட்டார்” என்றுச்
சொல்வார்கள்.

16 பலியை கொடுக்கவந்த ஜனங்களோ,
“முதலில் கொழுப்பை எரியுங்கள்.* பிறகு

கன்மலை இது தேவனுக்கான நாமம். அவர் கோட்டை அல்லது பலமிக்க பாதுகாப்பான இடம் போன்றவர் என்பதை இது காட்டும்.

கொழுப்பை எரியுங்கள் மிருகத்தின் ஒரு பகுதியான இந்தக் கொழுப்பானது தேவனுக்கே உரியது. ஆசாரியர்கள் தேவனுக்கான அன்ப ளிப்பாக அந்தக் கொழுப்பை பலிபீடத்தில் எரிக்க வேண்டும்.

உங்களுக்கு வேண்டியதை எடுத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்வார்கள். இவ்வாறு நடந்தால் உடனே ஆசாரியனின் அந்த வேலைக்காரன், "இல்லை, அந்த இறைச்சியை இப்போதே கொடுங்கள். நீங்கள் அதனைக் கொடுக்காவிட்டால் அதனைப் பலவந்தமாக எடுத்துக்கொள்வேன்!" என்று சொல்வான்.
17இவ்வாறு ஒப்னியும் பினெகாசும் கர்த்தருக்கு கொடுக்கும் பலிக்கு மரியாதை தராமல் இருந்தார்கள். இது கர்த்தருக்கு விரோதமானமிக மோசமான பாவமாயிற்று!
18ஆனால் சாமுவேல் கர்த்தருக்குச் சேவை செய்தான். அவன் இளம் உதவியாளனாக ஆசாரியர்கள் அணிகின்ற சணல் நூல் ஏபோத்தை* அணிந்திருந்தான். 19ஒவ்வொரு
ஆண்டும் சாமுவேலின் தாய் அவனுக்காக ஒரு சின்ன சட்டையைத் தைப்பாள். அவள் தன் கணவனோடு சீலோவிற்கு பலிசெலுத்த வரும்போதெல்லாம் அதனைக் கொண்டு வந்து தருவாள்.
20ஏலி, எல்க்கானாவையும் அவனது மனைவியையும் ஆசீர்வதித்தான். அவன், "அன்னாள் மூலமாக கர்த்தர் மேலும் பல குழந்தைகளைத் தரட்டும். கர்த்தரிடம் ஜெபித் துக்கொண்டபடி, அவருக்கே அளிக்கப்பட்ட அன்னாளின் மகனுடைய இடத்தை இந்த பிள்ளைகள் பிறந்து நிரப்பட்டும்" என்றான். எல்க்கானாவும், அன்னாளும் வீட்டிற்குத்
திரும்பினார்கள். 21கர்த்தர் அன்னாளிடம்
கருணையாக இருந்தார். அவளுக்கு மேலும் மூன்று மகன்களும், இரண்டு மகள்களும் பிறந்தனர். சாமுவேல் பரிசுத்த இடத்தில் கர்த்தர் அருகிலேயே வளர்ந்து ஆளானான்.

ஏலி தனது தீய மகன்களைக் கட்டுப் படுத்த தவறுதல்

22ஏலிக்கு மிகவும் வயது ஆயிற்று. சீலோ விற்கு வரும் இஸ்ரவேலரிடம் தம் பிள்ளை கள் நடந்து கொள்வதைப்பற்றி, அவன் மீண்டும் மீண்டும் கேள்விப்பட்டான். அதோடு அவன் அவர்கள் ஆசரிப்புக் கூடாரத்தின் வாசலில் வேலை செய்த பெண்களோடுப் படுத்துக்கொள்வதாகவும் கேள்விப்பட்டான்.
23ஏலி தன் பிள்ளைகளிடம், "நீங்கள் செய்த கெட்டக் காரியங்களைப் பற்றி யெல்லாம், இங்குள்ளவர்கள் என்னிடம் கூறினார்கள். ஏன் இதுபோல் செய்கிறீர்கள்?
24இவ்வாறு செய்யாதீர்கள். கர்த்தருடைய பிள்ளைகள் உங்களைப்பற்றி தவறாகச்
சொல்லுகிறார்கள். 25ஒருவன் இன்னொருவ
னுக்கு எதிராகப் பாவம் செய்தால், தேவன் அவனுக்கு உதவலாம். ஆனால் ஒருவன் கர்த்தருக்கு எதிராகப் பாவம் செய்தால், யார் அவனுக்கு உதவமுடியும்?" என்று கேட்டான்.
ஆனால் ஏலியின் மகன்கள் அவன் கூறியதைக் கேட்க மறுத்துவிட்டனர். எனவே ஏலியின் பிள்ளைகளைக் கொல்ல கர்த்தர் தீர்மானித்தார்.
26சாமுவேல் வளர்ந்து வந்தான். அவன் தேவனுக்கும், ஜனங்களுக்கும் பிரியமா யிருந்தான்.

ஏலியின் குடும்பத்தைப் பற்றிய பயங்கரமான தீர்க்கதரிசனம்

27தேவனுடைய மனிதன் ஒருவன் ஏலி யிடம் வந்தான். அவன், "கர்த்தர் இவற்றைச் சொன்னார், 'உன் முற்பிதாக்கள் எகிப்தில் பார்வோனின் அடிமைகளாய் இருந்தார்கள். அந்த காலத்தில் நான் உன் முற் பிதாக்
களுக்குத் தோன்றினேன். 28நான் உன்
கோத்திரத்தை மற்ற எல்லா இஸ்ரவேல் கோத்திரங்களிலிருந்தும் தேர்ந்தெடுத்தேன். உனது சந்ததியை எனது ஆசாரியர்களாகத் தேர்ந்தெடுத்தேன். அவர்களை என் பலி பீடத்திற்குப் பலி செலுத்துகிறவர்களாகத் தேர்ந்தெடுத்தேன். அவர்களை நான் ஏபோத் அணியவும் நறுமணப் பொருட்களை எரிக்க வும் தேர்ந்தெடுத்தேன். இஸ்ரவேலர், எனக் குத் தரும் பலிகளிலிருந்து இறைச்சியை உங்கள் கோத்திரம் உண்ணும்படியும்
செய்தேன். 29இவ்வாறு இருக்க நீங்கள்
ஏன் எனது அன்பளிப்புகளையும், பலிப் பொருட்களையும் மதிப்பதில்லை? நீ என்னைவிட உன் மகன்களையே அதிகம் உயர்த்துகிறாய். இஸ்ரவேலர், இறைச்சியை எனக்காக கொண்டு வரும்போது, அதன் நல்ல பாகங்களையெல்லாம் தின்று நீங்கள் கொழுத்துப்போய் இருக்கிறீர்கள்.'
30"இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், உங்கள் தந்தையின் குடும்பமே, எல்லா காலத்திலும் சேவை செய்யும் என்று வாக்குறுதி கொடுத்திருந்தார். ஆனால் இப் போது கர்த்தர் சொல்கிறார், 'அது அவ் வாறு நடக்காது! என்னை கனம்பண்ணுகிற வர்களை நானும் கனம்பண்ணுவேன். என்னை அசட்டை செய்பவர்களுக்கு தீமை
ஏற்படும். 31உனது சந்ததிகளையெல்லாம்
அழிக்கின்ற காலம் வந்துவிட்டது. உன் குடும்பத்தில் உள்ள யாரும் முதிய வயது
வரை வாழ மாட்டார்கள். 32இஸ்ரவேல்
ஜனங்களுக்கு நன்மைகள் ஏற்படும், ஆனால் உன் வீட்டில் மட்டும் தீமை ஏற்படுவதைக் காண்பாய். உன் குடும்பத்தில் யாரும்
முதுமைவரை வாழமாட்டார்கள். 33நான்
ஒருவனை மாத்திரம் ஆசாரியனாக என் பலிபீடத்தில் சேவைசெய்யப் பாதுகாப்பேன். அவன் முதுமைவரை வாழ்வான். அவன் கண்பார்வை போகுமட்டும், சக்தியெல்லாம் ஓயுமட்டும் வாழ்வான். உன் சந்ததிகள்

ஏபோத் ஒருவன் ஆசாரியன் அல்லது ஆசாரி யனின் வேலைக்காரன் என்பதைக் காட்டுவதற் காக அணிந்துகொள்கிற சிறப்பான மேலாடை.

எல்லோரும் வாளால் மரித்துப்போவார்கள்.
34இவைகள் உண்மையில் நிறைவேறும்
என்பதற்கும் ஒரு அடையாளம் காட்டுவேன்.
உனது மகன்களான ஓப்னியும் பினெகாசும்
ஒரே நாளில் மரித்துப்போவார்கள். 35நான்
எனக்காக ஒரு உண்மையுள்ள ஆசாரி
யனைத் தேர்ந்தெடுத்துக்கொள்வேன். அவன்
எனக்குச் செவிகொடுத்து நான் சொல்லுகிற
படி செய்வான். நான் அந்த ஆசாரியனின்
குடும்பத்தைப் பலமுள்ளதாகச் செய்வேன்.
அவன் அபிஷேகம் செய்யப்பட்ட எனது
அரசரின் முன்னிலையில் எப்போதும்
சேவை செய்வான். 36பிறகு உன் குடும்பத்தில்
மீதியான எல்லோரும் வந்து அந்த ஆசாரி
யன் முன்பு பணிந்து, வணங்கி நிற்பார்கள்.
அவர்கள் ஒரு துண்டு ரொட்டிக்காகவும்,
சில்லரை காசுகளுக்காகவும் பிச்சை எடுப்
பார்கள். அப்போது அவர்கள், “தயவுசெய்து
எனக்கு ஆசாரியன் வேலை தாரும். அத
னால் நான் உண்ண உணவை பெறுவேன்”
என்று வேண்டுவார்கள்’” என்று கூறினான்.

தேவன் சாமுவேலை அழைக்கிறார்

3 சிறுவனான சாமுவேல், ஏலியின் கீழே
கர்த்தருக்குச் சேவை செய்து வந்தான்.
அந்த நாட்களில், கர்த்தர் ஜனங்களோடு
நேரடியாக அடிக்கடி பேசுவதில்லை. அங்கே
மிகக் குறைந்த தரிசனங்களே இருந்தன.
2ஏலியின் கண்கள் பலவீனமாகி ஏறக்கு
றைய அவன் குருடாகிவிட்டான். ஒரு
நாள் அவன் படுக்கையில் கிடந்தான்.
3சாமுவேல் தேவனுடைய பரிசுத்தப் பெட்டி*
இருக்கிற கர்த்தருடைய ஆலயத்தில் படுத்
திருந்தான். கர்த்தருடைய விளக்கானது
இன்னும் எரிந்துக் கொண்டிருந்தது. 4கர்த்தர்
சாமுவேலை அழைத்தார். சாமுவேலோ,
“நான் இங்கே இருக்கிறேன்” என்றான்.
5ஏலி தன்னை அழைப்பதாக சாமுவேல்
நினைத்துக்கொண்டான். எனவே சாமுவேல்
ஏலியின் அருகில் ஓடிச்சென்றான். “நான்
இங்கே இருக்கிறேன். ஏன் என்னை அழைத்
தீர்கள்” என்று கேட்டான்.

ஆனால் ஏலியோ, “நான் உன்னை
அழைக்கவில்லை. படுக்கைக்குத் திரும்பிப்
போ” என்றான்.

சாமுவேல் படுக்கைக்குத் திரும்பிப்
போனான். 6மீண்டும் கர்த்தர், “சாமுவேலே!”
என்று கூப்பிட்டார். மீண்டும் சாமுவேல்
ஏலியிடம் ஓடிப்போனான். அவனிடம், “நான்
இங்கே இருக்கிறேன். என்னை ஏன்
கூப்பிட்டீர்கள்?” என்று கேட்டான்.

ஏலியோ, “நான் உன்னை அழைக்க
வில்லை. படுக்கைக்குத் திரும்பிப் போ”
என்றான்.

7சாமுவேல் அதுவரை கர்த்தரைப்பற்றி
அறியாமல் இருந்தான். கர்த்தர் அதுவரை
அவனிடம் நேரடியாகப் பேசினதில்லை.*
8கர்த்தர் சாமுவேலை மூன்றாவது முறை
யாக அழைத்தார். மீண்டும் சாமுவேல்
எழுந்து ஏலியிடம் ஓடிப்போனான். “நான்
இங்கே இருக்கிறேன். என்னை ஏன்
அழைத்தீர்கள்” என்றான்.

பின்னர் ஏலி, சாமுவேலை அழைத்தது
கர்த்தர் என்பதை அறிந்துக்கொண்டான்.
9ஏலி சாமுவேலிடம், “படுக்கைக்குப் போ.
அவர் உன்னை மீண்டும் அழைத்தால்,
‘கர்த்தாவே, பேசும். நான் உமது தாசன்.
நான் கவனித்துக் கேட்டுக்கொண்டிருக்கி
றேன்’ என்று சொல்” என்றான்.

எனவே சாமுவேல் மீண்டும் படுக்கைக்
குத் திரும்பிப்போனான். 10கர்த்தர் வந்து
அங்கே நின்றார். அவர் முன்புபோலவே
செய்தார். அவர், “சாமுவேலே, சாமு
வேலே!” என்று அழைத்தார்.

சாமுவேலோ, “கர்த்தாவே பேசும். நான்
உமது தாசன், நான் கவனித்துக் கேட்டுக்
கொண்டிருக்கிறேன்” என்றான்.

11கர்த்தர் சாமுவேலிடம், “நான் இஸ்ர
வேலில் சில காரியங்களை விரைவில்
செய்வேன். அதைப்பற்றி கேள்விப்படுகிற
ஜனங்கள் அதிர்ச்சி அடைவார்கள். 12நான்
ஏலிக்கும் அவன் குடும்பத்திற்கும் எதிராகச்
செய்வேன் என்று சொன்னப்படியே ஒவ்
வொன்றையும் தொடக்கம் முதல் இறுதிவரை
செய்வேன். 13நான் ஏலியிடம் அவனது
குடும்பத்தை என்றென்றைக்கும் தண்டிக்கப்
போவதாகக் கூறியிருக்கிறேன். அவன்
மகன்கள் அவர்களாகவே சாபத்தை வர
வழைத்துக் கொண்டனர். அவர்கள்
தேவனுக்கு விரோதமாகக் கெட்டவற்றைப்
பேசியும் செய்தும் வந்தனர் என்பதை
ஏலி அறிந்திருந்தும், ஏலி அவர்களைக்
கட்டுப்படுத்தத் தவறிவிட்டான். 14அதனால்
தான் ஏலியின் குடும்பத்தார் செய்த பாவங்
கள் ஒருபோதும் பலிகளாலோ, தானியக்
காணிக்கையாலோ தீர்வதில்லை என்று
நான் ஆணையிட்டிருக்கிறேன்” என்றார்.
15விடியும்வரை சாமுவேல் படுக்கையி
லேயே படுத்திருந்தான். அதிகாலையிலேயே
எழுந்து கர்த்தருடைய ஆலய கதவைத்
திறந்தான். ஏலியிடம் கர்த்தருடைய தரி
சனத்தைப் பற்றிக்கூற சாமுவேல் பயந்தான்.
16ஆனால் ஏலியோ சாமுவேலிடம், “என்
மகனே சாமுவேல்!” என்று அழைத்தான்.
அதற்கு சாமுவேல், “ஐயா” என்றான்.
17ஏலி அவனிடம், “கர்த்தர் உன்னிடம்
என்ன சொன்னார்? அதனை என்னிடம்
மறைக்கவேண்டாம். தேவன் உன்னிடம்

தேவனுடைய ... பெட்டி தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டி. இந்தப் பெட்டியில் இஸ்ரவேலர் சீனாய் பாலைவனத்தில் இருந்த காலமுதல் பலபொருட்கள் இருந்தன.

கர்த்தர் ... பேசினதில்லை எழுத்தின் பிரகாரமாக, “கர்த்தருடைய வார்த்தை இன்னும் அவனுக்கு வெளிப்படுத் தப்படவில்லை.”

*சொன்னச் செய்தியை மறைத்தால் தேவன்
உன்னைத் தண்டிப்பார்" என்றான்.*
18*அதனால் சாமுவேல் ஏலியிடம் எல்லா
வற்றையும் கூறினான். அவன் ஏலியிடம்
எதையும் மறைத்து வைக்கவில்லை.*
*ஏலி, "அவர் கர்த்தர். அவருக்குச் சரி
யெனத் தோன்றுவதை அவர் செய்யட்டும்"
என்றான்.*
19*சாமுவேல் வளரும்போது கர்த்தர்
அவனோடேயே இருந்தார். சாமுவேலின்
எந்தச் செய்தியும் பொய்யாக நிரூபிக்க
கர்த்தர் அனுமதிக்கவில்லை.* 20*பிறகு இஸ்ர
வேல் ஜனங்கள் அனைவருக்கும் தாண்
முதல் பெயெர்செபா வரைக்கும் சாமுவேல்
உண்மையான கர்த்தருடைய தீர்க்கதரிசி
என்றறிந்தார்கள்.* 21*சீலோவில் தொடர்ந்து
கர்த்தர் சாமுவேலுக்கு தம்மை காண்பித்து
வந்தார், மற்றும் அங்கே தம்முடைய
வார்த்தையினாலேயே கர்த்தர் சாமு
வேலுக்குத் தம்மை வெளிப்படுத்தி வந்தார்.*
4 *சாமுவேலைப் பற்றியச் செய்தி
அனைத்து இஸ்ரவேலருக்கும் பரவியது.
ஏலி முதியவனானான். அவனது மகன்கள்
தொடர்ந்து கர்த்தருக்கு எதிராக தீயச்
செயல்களைச் செய்துவந்தனர்.*

பெலிஸ்தியர்கள் இஸ்ரவேலர்களை வெல்லுகின்றனர்

*அந்த காலத்தில், இஸ்ரவேலர் பெலிஸ்
தருக்கு எதிராகப் போர் செய்யப்
போனார்கள். இஸ்ரவேலர் எபெனேசர்
என்ற இடத்தில் முகாமிட்டனர். பெலிஸ்தர்
தங்கள் முகாம்களை ஆப்பெக்கில் அமைத்த
னர்.* 2*பெலிஸ்தர் இஸ்ரவேலரைத் தாக்கும்
பொருட்டுத் தயாரானார்கள். போர்த்
துவங்கியது.*
*பெலிஸ்தர் இஸ்ரவேலரைத் தோற்
கடித்தனர். இஸ்ரவேல் சேனையில் உள்ள*
4,000 *வீரர்களைப் பெலிஸ்தர் கொன்றனர்.*
3*இஸ்ரவேல் வீரர்கள் தங்கள் முகாம்களுக்குத்
திரும்பிவந்தனர். மூப்பர்கள், "கர்த்தர் ஏன்
பெலிஸ்தர் நம்மைத் தோற்கடிக்கும்படிச்
செய்தார்? சீலோவில் உள்ள நமது கர்த்த
ருடைய உடன்படிக்கைப் பெட்டியைக்
கொண்டுவருவோம். அதன்படி தேவன்
நம்மோடு கூட போர்க்களத்துக்கு வருவார்.
அவர் நம்மை எதிரிகளிடமிருந்துக் காப்
பாற்றுவார்" என்றனர்.*
4*எனவே ஜனங்கள் சீலோவிற்குச் சிலரை
அனுப்பினார்கள். அவர்கள் சர்வ வல்லமை
யுள்ள கர்த்தருடைய உடன்படிக்கைப்
பெட்டியைக் கொண்டுவந்தனர். அப்பெட்டி
யின் மேல் கேரூபின்கள் இருந்தார்கள்.
அவை கர்த்தர் உட்காரும் சிங்காசனம்
போல இருந்தது. ஏலியின் இரண்டு மகன்
களான ஓப்னியும் பினெகாசும் அப்பெட்டி
யோடு வந்தனர்.*
5*கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி
யானது முகாமுக்குள்ளே வந்ததும், இஸ்ர
வேல் ஜனங்கள் பலமாகச் சத்தமிட்டனர்.
அச்சத்தம் பூமியையே அதிரச் செய்தது.*
6*பெலிஸ்தர் இஸ்ரவேலர்களின் சத்தத்தைக்
கேட்டு, "ஏன் இஸ்ரவேல் முகாமில் இவ்
வாறு சத்தமிடுகிறார்கள்?" என்று கேட்
டனர்.*
*பின்னர் கர்த்தருடைய பரிசுத்தப் பெட்டி
முகாமிற்கு கொண்டு வரப்பட்டதை அறிந்
துக்கொண்டனர்.* 7*பெலிஸ்தர் அதனால்
அஞ்சினர். அவர்களோ, "தேவன் அவர்
களின் முகாமிற்கு வந்திருக்கிறார். நாம்
இக்கட்டில் இருக்கிறோம். இதற்கு முன்பு
இதுபோல் நடந்ததில்லை!* 8*நாங்கள் கவலைப்
படுகிறோம். வல்லமையான இந்தத் தெய்
வங்களிடமிருந்து நம்மை யார் காப்பாற்
றுவார்கள்? இந்தத் தெய்வங்கள் ஏற்கனவே
எகிப்தியர்களுக்கு நோயையும் துன்பங்களை
யும் கொடுத்தவர்கள்.* 9*பெலிஸ்தியர்களே,
தைரியமாக இருங்கள். ஆண்களைப் போன்
றுப் போரிடுங்கள். முற்காலத்தில் இஸ்ர
வேலர்கள் நமக்கு அடிமைகளாக இருந்தனர்.
நீங்கள் ஆண்களைப்போன்று சண்டையிடா
விட்டால் அவர்களுக்கு அடிமையாகி
விடுவீர்கள்!" என்றனர்.*
10*எனவே பெலிஸ்தர்கள் கடுமையாகச்
சண்டையிட்டு இஸ்ரவேலர்களைத் தோற்
கடித்தனர். ஒவ்வொரு இஸ்ரவேல் வீரனும்
தங்கள் முகாமிற்கு ஓடினார்கள். இது இஸ்ர
வேலுக்குப் படுதோல்வியாயிருந்தது.* 30,000
இஸ்ரவேல் வீரர்கள் கொல்லப்பட்டனர்.
11*பெலிஸ்தர் தேவனுடைய பரிசுத்தப் பெட்
டியை எடுத்துக்கொண்டு, ஓப்னியையும்
பினெகாசையும் கொன்றுவிட்டனர்.*
12*அந்த நாளில் பென்யமீனின் கோத்திரத்தி
லிருந்து ஒருவன் போர்க் களத்திலிருந்து
சீலோவிற்கு ஓடிப்போனான். அவன் தனது
ஆடையைக் கிழித்தெறிந்தான். தலையின்
மேல் புழுதியை அள்ளி போட்டுக்
கொண்டான். இவ்வாறு அவன் தன்
சோகத்தை வெளிகாட்டினான்.* 13*இந்த மனி
தன் சீலோவிற்கு வந்தபொழுது ஏலி நகர
வாசல்களுக்கு அருகில் ஒரு நாற்காலியில்
அமர்ந்திருந்தான். தேவனுடைய பரிசுத்தப்
பெட்டியைப்பற்றி ஏலி கவலைப்பட்டு,
கவனித்துக் காத்திருந்தான். பிறகு பென்ய
மீன் குடும்பத்தைச் சேர்ந்த மனிதன் சீலோ
வுக்கு வந்து அந்தக் கெட்டச் செய்தியைக்
கூறினான். நகரிலிருந்த ஜனங்கள் அனை
வரும் சத்தமாக அழத்துவங்கினார்கள்.*
1415*ஏலி* 98 *வயதுடையவன். அவன் குருடன்.
என்ன நடக்கிறது என்பதை அவனால்
காண முடியவில்லை. ஆனால் அவனால்
ஜனங்களின் உரத்த அழுகை சத்தத்தைக்
கேட்க முடிந்தது. ஏலி, "ஏன் இவர்கள்
இவ்வாறு சத்தமிடுகிறார்கள்?" என்று
கேட்டான்.*

பென்யமீன் குடும்பத்தைச் சேர்ந்தவன்
ஏலியிடம் ஓடிவந்து நடந்ததைக் கூறினான்.
16அவன், “நான் இப்போதுதான் போர்க்களத்
திலிருந்து ஓடி வந்தேன்” என்றான்.
ஏலி அவனிடம், “மகனே! என்ன நடந்
தது?” என்று கேட்டான்.
17அதற்கு அவன், “பெலிஸ்தர்களிட
மிருந்து இஸ்ரவேலர்கள் ஓடிப்போனார்கள்.
இஸ்ரவேல் படை ஏராளமான வீரர்களை
இழந்துவிட்டது. உமது இரு மகன்களும்
மரித்துப்போனார்கள். பெலிஸ்தர் தேவனு
டைய பரிசுத்தப் பெட்டியை எடுத்துக்
கொண்டனர்” என்றான்.
18பென்யமீன் குடும்பத்தைச் சேர்ந்தவன்
தேவனுடைய பரிசுத்தப் பெட்டியைப்பற்றிச்
சொன்னதும், ஏலி நாற்காலியிலிருந்து
வாசல் பக்கமாய் மல்லாக்க விழுந்து தன்
கழுத்தை முறித்துக்கொண்டான். அவன்
வயதானவனாகவும் சரீரம் பருமனாகவும்
இருந்ததால், மரித்துப்போனான். ஏலி இஸ்ர
வேல் ஜனங்களை 20 ஆண்டுகள்*
வழிநடத்தினான்.

மகிமை போய்விட்டது

19ஏலியின் மருமகளான பினெகாசின்
மனைவி அப்போது நிறைமாத கர்ப்பிணி
யாக இருந்தாள். அவள் குழந்தைப்
பெறுவதற்குரியக் காலம் அது. தேவனு
டைய பரிசுத்தப் பெட்டி பறிபோனதுப்
பற்றி அவள் கேள்விப்பட்டாள். அதோடு
அவள் தன் கணவனும் தன் மாமனாரும்
மரித்துப்போனதுப் பற்றியும் கேள்விப்
பட்டாள். உடனே அவளுக்கு பிரசவ வலி
ஆரம்பமாகிக் குழந்தையைப் பெற்றாள்.
20அவளது பிரசவத்திற்கு உதவிய
பெண்ணோ, “கவலைப்படாதே! நீ ஒரு
ஆண்மகனைப் பெற்றிருக்கிறாய்” என்றாள்.
ஆனால் ஏலியின் மருமகளோ அதைக்
கவனிக்கவில்லை, எவ்வித பதிலும் சொல்ல
வில்லை. 21அவள், அந்தப் பிள்ளைக்கு
இக்கபோத் என்றுப் பெயரிட்டாள், அதற்கு
பொருள் “இஸ்ரவேலரின் மகிமைப்
போயிற்று!” என்பதாகும். தேவனுடைய
பரிசுத்தப் பெட்டி பறிபோனது, கணவனும்
மாமனாரும் மரித்துப்போனார்கள், எனவே
அவள் இந்தப் பெயரை வைத்தாள். 22அவள்,
“இஸ்ரவேலரின் மகிமைப் போயிற்று”
ஏனென்றால் பெலிஸ்தர் தேவனுடைய
பரிசுத்தப் பெட்டியை பறித்துக்கொண்டனர்
என்றாள்.

பரிசுத்தப் பெட்டியினால் பெலிஸ்தர்களுக்குத் தொல்லை

5 பெலிஸ்தர் தேவனுடைய பரிசுத்தப்
பெட்டியை எபெனேசரிலிருந்து
அஸ்தோத் திற்குக் கொண்டுப் போனார்கள்.
2பெலிஸ்தர் தேவனுடைய பரிசுத்த
பெட்டியை தாகோனின் கோவிலுக்குள்
கொண்டுப்போய் தாகோனின் சிலைக்கு
அருகில் வைத்தனர். 3மறுநாள் காலை,
அஸ்தோத் ஜனங்கள் எழுந்ததும் தாகோனின்
சிலை முகம் குப்புற விழுந்து கிடப்பதைக்
கண்டனர். தாகோன் கர்த்தருடைய பெட்டிக்கு
முன்னால் விழுந்து கிடந்தது.
அஸ்தோத் ஜனங்கள் தாகோனின்
சிலையைப் பழைய இடத்தில் வைத்தனர்.
4ஆனால் மறுநாள் காலையில், மீண்டும்
தாகோனின் சிலை முகம் குப்புற விழுந்து
கிடப்பதைக் கண்டனர்! கர்த்தருடைய
பரிசுத்தப் பெட்டிக்கு முன்னால் தாகோன்
சிலை விழுந்து கிடந்தது. இந்த முறை
தாகோனின் தலையும், கைகளும் உடைந்து
கோவில் வாசற்படியிலே கிடந்தன.
தாகோனின் உடல் மாத்திரம் அப்படியே
கிடந்தது. 5அதனால்தான் இன்றும் கூட,
தாகோனின் பூசாரிகளும், அஸ்தோத்தில்
உள்ள தாகோனின் கோவிலுக்குள் நுழைகிற
ஒருவனும் கோவில் வாசற்படியை
மிதிப்பதில்லை.
6அஸ்தோத்து ஜனங்களுக்கும், அவர்களது
அக்கம் பக்கத்தினருக்கும் வாழ்க்கைச்
சிரமமாகும்படி கர்த்தர் செய்தார். கர்த்தர்
அவர்களுக்கு பல துன்பங்களைத் தந்தார்.
அவர்களை தோல் கட்டிகளினால்
வாதித்தார். அவர்களுக்கு சுண்டெலிகளை
யும் அனுப்பினார். அவை அவர்களின்
கப்பல்களுக்கும், நிலப்பகுதிகளுக்கும் பரவி
யது. நகர ஜனங்கள் அஞ்சினார்கள்.
7அஸ்தோத் ஜனங்கள் நடப்பதை எல்லாம்
கண்டனர். அவர்கள், “இஸ்ரவேலரின்
தேவனுடைய பரிசுத்தப் பெட்டியானது
இங்கே இருக்கக்கூடாது! அவர் நம்மையும்
நமது தெய்வமான தாகோனையும் தண்டித்
திருக்கிறார்” என்றனர்.
8அஸ்தோத் ஜனங்கள் பெலிஸ்தியரின் 5
ஆளுநர்களையும் வரவழைத்தனர். அவர்களி
டம், “இஸ்ரவேலின் தேவனுடைய பரிசுத்தப்
பெட்டியை நாம் என்னச் செய்யவேண்டும்?”
என்று கேட்டனர்.
ஆளுநர்களோ, “இஸ்ரவேலின் தேவனு
டைய பரிசுத்தப் பெட்டியை இங்கிருந்து
காத் பட்டணத்திற்கு எடுத்துப் போக
வேண்டும்” என்றனர். ஆகவே பெலிஸ்தர்கள்
தேவனுடைய பரிசுத்தப் பெட்டியை எடுத்
துச் சென்றனர்.
9ஆனால் தேவனுடைய பரிசுத்தப்
பெட்டியை காத் நகரம் வரைக்கும் பெலிஸ்
தர்கள் எடுத்துச் சென்றதும், காத் நகரை
கர்த்தர் தண்டித்தார். ஜனங்கள் மிகவும்

---

20 ஆண்டுகள் கிரேக்க மொழிபெயர்ப்பு மற்றும் யோசப்பஸின் எழுத்துக்களிலிருந்து இது காணப்பட்டாலும், எபிரெய மூலம் “அவன் 40 ஆண்டுகள் நியாயந்தீர்த்தான்” என கூறுகிறது.

கலக்கமுற்றனர். இளைஞர் முதியவர் என
அனைவருக்கும் தேவன் தொல்லைகளை
ஏற்படுத்தினார். தேவன் அங்குள்ளவர்களுக்
கும் தோல் கட்டிகளை தந்தார். 10எனவே,
பெலிஸ்தியர் தேவனுடைய பரிசுத்தப்
பெட்டியை எக்ரோனுக்கு அனுப்பினர்.

ஆனால் அங்குள்ள ஜனங்கள், தேவ
னுடைய பரிசுத்தப் பெட்டியைக் கண்டதும்,
முறையிட்டார்கள். "எங்களது எக்ரோன்
நகரத்திற்கு இஸ்ரவேலருடைய தேவனின்
பரிசுத்தப் பெட்டியை ஏன் கொண்டு வந்தீர்
கள்? நீங்கள் எங்களையும் எங்கள் ஜனங்
களையும் கொல்ல விரும்புகிறீர்களா?" எனக்
கேட்டனர். 11எக்ரோன் ஜனங்கள் பெலிஸ்
திய ஆளுநர்களைக் கூட்டி, "இஸ்ரவேல
ருடைய தேவனின் பெட்டி நம்மை கொன்
றுப் போடுவதற்கு முன் இதனை அதன்
பழைய இடத்திற்கே அனுப்பிவிடுவோம்!"
என்றனர்.

எக்ரோன் ஜனங்கள் மிகவும் பய
மடைந்தனர்! அங்குள்ள ஜனங்களை தேவன்
மிகவும் கஷ்டப்படுத்தினார். 12பலர் மரித்
தனர். மரிக்காதவர்களுக்கு தோல் கட்டி
இருந்தது. எக்ரோன் ஜனங்களின் கூக்குரல்
பரலோகம்வரை எட்டியது.

தேவனுடைய பரிசுத்தப் பெட்டி திருப்பி அனுப்பப்படுகிறது

6 பெலிஸ்தர் தம் நாட்டில் பரிசுத்தப்
பெட்டியை ஏழு மாதங்கள் வைத்திருந்
தனர். 2பெலிஸ்தர் தங்கள் பூசாரிகளையும்,
மந்திரவாதிகளையும் அழைத்து, "கர்த்த
ருடைய பெட்டியை என்னச் செய்யலாம்?
பெட்டியை எவ்வாறு திருப்பி அனுப்
பலாம்" என்றுக் கேட்டனர்.

3அதற்கு அவர்கள், "நீங்கள் இஸ்ர
வேலரின் தேவனுடைய பரிசுத்தப் பெட்
டியைத் திருப்பி அனுப்புவதானால் வெறு
மையாக அனுப்பவேண்டாம். அன்பளிப்
போடு அனுப்புங்கள். அப்போது உங்கள்
பாவங்களையும் இஸ்ரவேலின் தேவன்
எடுத்துப்போடுவார். பின் நீங்களும் குணம்
பெறுவீர்கள். நீங்களும் பரிசுத்தம் அடைவீர்
கள். இதனைச் செய்தால் தேவன் உங்களைத்
தண்டிப்பதையும் நிறுத்துவார்" என்றனர்.

4பெலிஸ்தர்கள், "நம்மை மன்னிப்பதற்காக
நாம் எத்தகைய காணிக்கைகளை இஸ்ர
வேலரின் தேவனுக்குக் கொடுக்கவேண்டும்?"
எனக் கேட்டனர்.

அதற்கு பூசாரிகளும், மந்திரவாதிகளும்
பதில் சொன்னார்கள், "ஒவ்வொரு நகரத்துக்
கும் ஒரு ஆளுநராக, 5 பெலிஸ்திய ஆளுநர்
கள் இருக்கிறார்கள். உங்களுக்கும் உங்கள்
ஆளுநர்களுக்கும் ஒரேவிதமானப் பிரச்சனை
தான். எனவே தங்கத்தால் 5 உருவங்களை
தோல் கட்டியின் சாயலிலும், 5 சுண்டெலி
சாயலிலும் செய்து அனுப்பவேண்டும்"
என்றனர். 5எனவே, உங்களை அழித்துக்
கொண்டிருக்கும் தோல்கட்டி மற்றும்
எலியின் உருவங்களை செய்யுங்கள்.
அத்தங்க உருவங்களை இஸ்ரவேல் தேவ
னுக்குக் காணிக்கையாக்குங்கள். பின் இஸ்ர
வேலின் தேவன், உங்களையும் உங்கள்
தெய்வங்களையும், உங்கள் நாட்டையும்
தண்டிப்பதைநிறுத்துவார். 6எகிப்தியர்களை
யும் பார்வோனையும் போன்று கடினமனம்
உடையவர்களாக இராதீர்கள். தேவன்
எகிப்தியர்களைத் தண்டித்தார். எனவேதான்
எகிப்தியர்கள் இஸ்ரவேலர்களை எகிப்தை
விட்டுப் போகும்படி அனுமதித்தனர்.

7"இப்போது நீங்கள் ஒரு புது வண்டியைச்
செய்யவேண்டும். நுகம்பூட்டாத இரண்டு
இளைய பசுக்களைப் பிடித்து வண்டியில்
கட்டவேண்டும். அவற்றின் கன்றுக்குட்டி
களை அவற்றின் பின் போகவிடாமல்
வீட்டில் கட்டவேண்டும்.* 8கர்த்தருடைய
பரிசுத்தப் பெட்டியை அவ்வண்டியில்
வைக்கவும். தங்க உருவங்களையும் சிலை
களையும் பெட்டியின் அருகில் பக்கத்தில்
பையில் வைக்கவும். இவை உங்கள்
பாவங்களை மன்னிக்கும் தேவனுக்கான
அன்பளிப்புகளாகும். வண்டியை நேரான
வழியில் போகவிடுங்கள். 9வண்டியைக்
கவனியுங்கள். அது நேராக இஸ்ரவேலரின்
சொந்த இடமான பெத்ஷிமேசுக்குப்
போனால், நமக்கு இந்த நோய்களைத்
தந்தவர் கர்த்தர் தான் என அறியலாம்.
ஒருவேளை பெத்ஷிமேசுக்கு அப்பசுக்கள்
நேராகச் செல்லவில்லை என்றால், இஸ்ர
வேலரின் தேவன் நம்மைத் தண்டிக்க
வில்லை, இந்த நோய் தற்செயலாக வந்தது
என்று அறிந்துகொள்ளலாம்" என்றனர்.

10பெலிஸ்தியர் பூசாரிகளும் மந்திர
வாதிகளும் சொன்னபடிச் செய்தனர்.
அப்போதுதான் கன்றுகளை ஈன்ற இரண்டு
பசுக்களைக் கண்டார்கள். அந்த இரண்டு
பசுக்களை வண்டியில் பூட்டி அதன் கன்று
குட்டிகளை வீட்டுத் தொழுவில் கட்டி
னார்கள். 11பின் பெலிஸ்தர் கர்த்தருடைய
பரிசுத்தப் பெட்டியை வண்டியில்
வைத்தனர். தங்க உருவங்களால் செய்யப்
பட்ட தோல்கட்டியையும், சுண்டெலிகளை
யும் அதன் பக்கத்தில் வைத்தனர். 12பசுக்கள்
நேராக பெத்ஷிமேசுக்குச் சென்றன. அவை
நேராகச் சாலையில் வலது பக்கமோ இடது
பக்கமோ திரும்பாமல் சென்றன. பெலிஸ்தர்
கள் தொடர்ந்து நகர எல்லைவரை பின்
சென்றனர்.

13பெத்ஷிமேசின் ஜனங்கள் தங்கள்
கோதுமையை பள்ளத்தாக்கிலே அறுவடை

அவற்றின் ... கட்டவேண்டும் பசுக்களானது தம் கன்றுக்குட்டிகளைக் கண்டுகொள்ள முடியாவிட்டால், தேவன் அவர்களை வழிநடத்திச் செல்வார் என்றும் அவர்களுடைய அன்பளிப்புகளை ஏற்றுக்கொள்வார் என்றும் பெலிஸ்தர்கள் நினைத்தார்கள்.

செய்து கொண்டிருந்தனர். அவர்கள்
பரிசுத்தப் பெட்டியைக் கண்டனர். அவர்கள்
பெட்டியை மீண்டும் பார்த்ததில் மிகவும்
மகிழ்ந்தனர். அதைப் பெற்றுக்கொள்ள
ஓடினார்கள். 14-15 பெத்ஷிமேசில் யோசுவாவின்
வயலுக்கு வண்டி வந்து பாறைக்கருகில்
நின்றது. ஜனங்கள் வண்டி மரங்களைப்
பிளந்தனர், பசுக்களைக் கொன்றுக் கர்த்த
ருக்கு பலியாக செலுத்தினார்கள்.

லேவியர்கள் கர்த்தருடைய பரிசுத்தப்
பெட்டியை எடுத்துச் சென்றனர். தங்க
உருவங்கள் இருந்தப் பையையும் எடுத்துக்
கொண்டனர். அவர்கள் அவற்றைப் பெரியப்
பாறைமீது வைத்தனர். அந்த நாளில் பெத்ஷி
மேசின் ஜனங்கள் கர்த்தருக்கு தகனபலிகளை
அளித்தனர்.

16 ஐந்து பெலிஸ்திய அரசர்களும் பெத்ஷி
மேசின் ஜனங்கள் செய்வதை எல்லாம்
கவனித்தனர். அன்றே அவர்கள் எக்ரோ
னுக்குத் திரும்பினார்கள்.

17 இவ்வாறு பெலிஸ்தர் தோல் கட்டிகளின்
தங்க உருவங்களை தம் பாவங்களுக்கு
பரிகாரமாக கர்த்தருக்குக் கொடுத்தனர்.
ஒவ்வொரு பெலிஸ்திய நகரத்திற்கும் ஒரு
உருவம் வீதம் கொடுத்தனர். அவை
அஸ்தோத்து, அஸ்கலோன், காத், காசா,
எக்ரோன் ஆகியவையாகும். 18 பெலிஸ்தர்
சுண்டெலியின் தங்க உருவங்களையும்
அனுப்பினார்கள். அவையும் நகர எண்ணிக்
கையைப் போலவே இருந்தன. இந்நகரங்
களைச் சுற்றிலும் சுவர்களும், நகரங்களைச்
சுற்றிலும் கிராமங்களும் இருந்தன.

பெத்ஷிமேசின் ஜனங்கள், கர்த்தருடைய
பரிசுத்தப் பெட்டியைப் பாறையின் மேல்
வைத்தனர். அப்பாறை இன்றும் யோசுவா
வின் வயலில் உள்ளது. 19 ஆனால் அவர்கள்
கர்த்தருடைய பரிசுத்தப் பெட்டியைப்
பார்த்த போது அங்கே ஆசாரியர்கள்
இல்லாமல் இருந்தனர். எனவே தேவன்
பெத்ஷிமேசில் 70 பேரை கொன்றார்.
பெத்ஷிமேசில் உள்ள ஜனங்கள்
இக்கொடுமையான தண்டனைக்காகக் கதறி
அழுதனர். 20 அவர்கள், "பரிசுத்தப்
பெட்டியைப் பராமரிக்கும் ஆசாரியன்
எங்கே இருக்கிறான்? இங்கிருந்து அந்த
பெட்டி எங்கே செல்லவேண்டும்?" என்றனர்.

21 கீரியாத்யாரீம் என்ற இடத்தில் ஒரு
ஆசாரியன் இருந்தான். அங்குள்ள ஜனங்
களுக்கு பெத்ஷிமேசின் ஜனங்கள் தூது
அனுப்பினார்கள். தூதுவர்கள், "பெலிஸ்தர்
கர்த்தருடைய பரிசுத்தப் பெட்டியைத்
திரும்பக் கொண்டு வந்துவிட்டனர். இதனை
உங்கள் நகரத்திற்கு எடுத்துச் செல்லுங்கள்"
என்றனர்.

7 கீரியாத்யாரீம் ஜனங்கள் வந்து கர்த்த
ருடைய பரிசுத்தப் பெட்டியை எடுத்துச்
சென்றனர். அவர்கள் அதனை பாறைமேல்
இருந்த அபினதாபின் வீட்டில் வைத்தனர்.
கர்த்தருடைய பெட்டியைக் காக்க அபினதா
பின் மகன் எலெயாசாருக்கு அவர்கள்
சிறப்பான சடங்குகளைச் செய்தார்கள்.
2 பெட்டி கீரியாத்யாரீமிலேயே 20 ஆண்டுகள்
இருந்தது.

இஸ்ரவேலர்களைக் கர்த்தர் காப்பாற்று கிறார்

இஸ்ரவேல் ஜனங்கள் மீண்டும் கர்த்தரைப்
பின்பற்ற தொடங்கினார்கள். 3 சாமுவேல்
அவர்களிடம், "நீங்கள் உண்மையிலேயே
கர்த்தரிடம் மனப்பூர்வமாக திரும்புவீர்கள்
என்றால் உங்களிடம் உள்ள அந்நிய தெய்
வங்களை தூர எறியுங்கள். அஸ்தரோத்
விக்கிரகங்களைத் தூக்கி எறியுங்கள். நீங்கள்
உங்களை முழுமையாக கர்த்தருக்கு ஒப்புக்
கொடுங்கள். நீங்கள் கர்த்தருக்கு மட்டுமே
சேவை செய்யவேண்டும்! பின்னரே கர்த்தர்
உங்களை பெலிஸ்தர்களிடமிருந்து காப்பாற்
றுவார்" என்றான்.

4 எனவே இஸ்ரவேலர் தமது பாகால்
மற்றும் அஸ்தரோத் சிலைகளைத் தூர
எறிந்தனர். கர்த்தருக்கு மட்டுமே சேவை
செய்தனர்.

5 சாமுவேல், "இஸ்ரவேலர் அனைவரும்
மிஸ்பாவில் கூடுங்கள். நான் உங்களுக்காக
கர்த்தரிடம் ஜெபம் செய்வேன்" என்றான்.

6 இஸ்ரவேலர் மிஸ்பாவில் கூடினார்கள்.
அவர்கள் தண்ணீரை கர்த்தருடைய சந்நிதி
யில் ஊற்றினார்கள். இவ்விதமாக உபவாசம்
இருந்தனர். அன்றைய நாளில் எந்தவகை
உணவும் உண்ணாமல், தங்கள் பாவங்
களுக்காக மனம் வருந்தி அதை
அறிக்கையிட்டனர், "நாங்கள் கர்த்தருக்கு
எதிராகப் பாவம் செய்தோம்" என்றனர்.
எனவே சாமுவேல் இஸ்ரவேலர்களின் நீதி
பதியாக மிஸ்பாவில் இருந்தான்.

7 பெலிஸ்தர், இஸ்ரவேலர் மிஸ்பாவில்
கூடுகின்றதைப்பற்றி அறிந்துகொண்டனர்.
பெலிஸ்தியர்களின் அரசர்கள் இஸ்ர
வேலருக்கு எதிராகப் போர் செய்யச்
சென்றனர். இதையறிந்து இஸ்ரவேலர்
பயந்தார்கள். 8 அவர்கள் சாமுவேலிடம்,
"எங்களுக்காக நமது தேவனாகிய கர்த்த
ரிடம் ஜெபம் செய்வதை நிறுத்தவேண்டாம்!
எங்களை பெலிஸ்தர்களிடமிருந்து காப்
பாற்றுமாறு கர்த்தரிடம் கேளுங்கள்!"
என்றனர்.

9 சாமுவேல் ஆட்டுக்குட்டியை எடுத்துக்
கொண்டான். அதனை முழுமையாக
கர்த்தருக்கு சர்வாங்க தகன பலியாகச்
செலுத்தினான். சாமுவேல் இஸ்ரவேலர்
களுக்காக கர்த்தரிடம் ஜெபம் செய்தான்.
கர்த்தர் அவனுடைய ஜெபத்திற்கு பதில்
சொன்னார். 10 சாமுவேல் தகனபலியைச்
செலுத்திக் கொண்டிருக்கும்போது, பெலிஸ்
தர்கள் இஸ்ரவேலர்களுடன் போரிட
வந்தனர். ஆனால் கர்த்தர் பெலிஸ்தியர்கள்

பக்கம் பெரிய இடி முழங்குமாறு செய்தார்.
இது பெலிஸ்தரைக் அச்சப்படுத்தியது,
மேலும் குழப்பியது. தலைவர்களால்
அவர்களைக் கட்டுப்படுத்த இயலவில்லை.
எனவே இஸ்ரவேலர்கள் அவர்களைப்
போரில் தோற்கடித்தனர். 11 இஸ்ரவேலர்கள்
மிஸ்பாவிலிருந்து பெலிஸ்தர்களை பெத்கார்
வரை துரத்தினார்கள். வழியெல்லாம்
பெலிஸ்தர்களைக் கொன்றனர்.

இஸ்ரவேலுக்கு சமாதானம் திரும்புகிறது

12 இதற்குப்பின், சாமுவேல் ஒரு சிறப்பான
கல்லை நிறுவினான். அது தேவனுடைய
உதவியை ஜனங்கள் நினைவு கூரும்படி
இருந்தது. இந்த கல் மிஸ்பாவிற்கும்
சேணுக்கும் இடையில் இருந்தது. அதற்கு
“எபெனேசர்” (உதவியின் கல்) என்று
பேரிட்டான். “இந்த இடம் வரும்வரை
கர்த்தர் நமக்கு உதவிச் செய்தார்” என்றான்.
13 பெலிஸ்தர்கள் தோற்கடிக்கப்பட்டனர்.
அவர்கள் மீண்டும் இஸ்ரவேலுக்குள் நுழைய
வில்லை. சாமுவேலின் மீதியான வாழ்வு
முடியுமட்டும் கர்த்தர் பெலிஸ்தியர்களுக்கு
எதிராக இருந்தார். 14 பெலிஸ்தர் ஏற்கனவே
இஸ்ரவேலர்களிடம் இருந்து எக்ரோன் முதல்
காத் வரை பல நகரங்களைக் கைப்பற்றி
இருந்தனர். அவற்றை இஸ்ரவேலர் திரும்பப்
பெற்றனர். அவற்றைச் சுற்றியுள்ள நகரங்க
ளையும் கைப்பற்றிக்கொண்டனர்.

இஸ்ரவேலர்களுக்கும் எமோரியருக்கும்
இடையில் சமாதானம் நிலவியது.

15 சாமுவேல் தம் வாழ்நாள் முழுவதும்
இஸ்ரவேலர்களை வழிநடத்திச் சென்றான்.
16 இஸ்ரவேல் ஜனங்களை நியாயம் விசா
ரித்துக்கொண்டு சாமுவேல் இடம்விட்டு இடம்
சென்றான். ஒவ்வொரு ஆண்டும்
சுற்றுப்பயணம் செய்து, அவன் பெத்தேல்,
கில்கால், மிஸ்பா போன்ற இடங்களில்
நியாயம் விசாரித்து வந்தான். 17 அவனது
வீடு ராமாவில் இருந்தது. எனவே எப்
போதும் அங்கேயே திரும்பி வருவான்.
இஸ்ரவேலர்களை அங்கிருந்தே ஆண்டு
கொண்டும் நியாயம் விசாரித்தும் வந்தான்.
சாமுவேல் ராமாவில் கர்த்தருக்காக ஒரு
பலிபீடம் கட்டினான்.

இஸ்ரவேலர் ஒரு அரசன் வேண்டும் என்று கேட்கிறார்கள்

8 சாமுவேல் முதுமையடைந்ததும், அவன்
தன் ஜனங்களை நியாயம் விசாரிக்க
ஏற்பாடு செய்தான். 2 அவனது மூத்த மகனின்
பெயர் யோவேல், இளையவனுக்குப் பெயர்
அபியா, அவர்கள் பெயெர்செபாவில் நீதி
பதிகளாக இருந்தனர். 3 ஆனால் சாமுவேல்
வாழ்ந்த விதத்தில் அவனது மகன்கள்
வாழவில்லை. அவர்கள் இரகசியமாகப்
பணம் பெற்றுக்கொண்டு நீதிமன்றங்களில்
தீர்ப்பை மாற்றினார்கள். அவர்கள்
ஜனங்களை நீதிமன்றத்திலே ஏமாற்றினார்
கள். 4 எனவே இஸ்ரவேலின் மூப்பர்கள்
கூடி, ராமாவிலே சாமுவேலை சந்திக்கும்
படிச் சென்றனர். 5 மூப்பர்கள் சாமுவேலிடம்,
“உங்களுக்கு வயதாகி விட்டது. உங்கள்
மகன்கள் சத்தியத்தின் வழியில் வாழ
வில்லை. அவர்கள் உங்களைப்போல்
இல்லை. இப்போது, மற்ற நாடுகளைப்
போன்று எங்களை ஆள்வதற்கு ஒரு
அரசனைத் தாருங்கள்” என்று கேட்டனர்.
6 எனவே மூப்பர்கள் தங்களை வழி
நடத்த ஒரு அரசனை வேண்டினார்கள்.
சாமுவேல் இதனை ஒரு கெட்ட திட்டம்
என எண்ணினான். எனவே சாமுவேல்
கர்த்தரிடம் ஜெபித்தான். 7 கர்த்தர் சாமுவேலி
டம், “ஜனங்கள் சொன்னதைப்போல் செய்ய
வும். அவர்கள் உன்னைத் தள்ளவில்லை.
என்னைத் தள்ளியுள்ளார்கள்! என்னை
அவர்களுடைய அரசனாக ஏற்றுக்கொள்ள
விருப்பமில்லை! 8 அவர்கள் எப்போதும்
செய்ததுபோலவே தொடர்ந்து செய்கிறார்
கள். நான் எகிப்திலிருந்து அவர்களை
வெளியே கொண்டுவந்தேன். ஆனால்
என்னை விட்டுவிட்டு மற்ற தெய்வங்களுக்
குச் சேவை செய்தனர். அவர்கள் அதையே
உனக்கும் செய்வார்கள். 9 எனவே அவர்கள்
சொன்னதைக் கவனித்து அவர்கள்
சொல்வது போல் செய்யவும். ஆனால்
அவர்களை எச்சரிக்கவும். ஒரு அரசன்
அவர்களுக்கு என்ன செய்வான் என்பதை
யும் கூறு! ஒரு அரசன் எவ்வாறு ஆள்வான்
என்பதையும் கூறு” என்றார்.

10 அவர்கள் சாமுவேலிடம் ஒரு அரசன்
வேண்டுமெனக் கேட்டிருந்தனர். எனவே
சாமுவேல் கர்த்தர் சொன்னவற்றை அவர்
களிடம் சொன்னான். 11 அவன் சொன்னது;
“உங்களை ஆள்வதற்கு ஒரு அரசன் வந்தால்,
அவன் செய்வது இதுதான்: அவன்
உங்களின் மகன்களை எடுத்துக்கொள்வான்.
அவர்களைத் தனக்குச் சேவை செய்யுமாறு
பலவந்தப்படுத்துவான். அவர்களை வீரர்கள்
ஆகுமாறு கட்டாயப்படுத்துவான். அவர்கள்
அவனது தேரிலிருந்து சண்டையிட
வேண்டும். அவனது படையில் குதிரை
வீரர்களாக வேண்டும். அவர்கள்காவல்காரர்
களாகி அரசனின் இரதத்துக்கு முன்னால்
செல்லவேண்டும். 12 அரசன் உங்கள் பிள்ளை
களை வீரர்களாகுமாறு வற்புறுத்துவான்.
சிலர் 1,000 பேருக்கான அதிகாரிகளாகவும்,
இன்னும் சிலர் 50 பேருக்கான அதிகாரிகளா
கவும் ஆவார்கள். அரசன் உங்கள் பிள்ளை
களைக் கட்டாயப்படுத்தி தம் வயல்களை
உழவும், அறுவடை செய்யவும் ஈடுபடுத்து
வான். அவன் உங்கள் பிள்ளைகளைக்
கட்டாயப்படுத்தி போருக்கான ஆயுதங்
களைச் செய்யச் சொல்வான்! அவர்களது
தேருக்கான பொருட்களைச் செய்யுமாறு
பலவந்தப்படுத்துவான்!

13 "அரசன் உங்கள் பெண் பிள்ளைகளை
எடுத்துக்கொள்வான். தனக்கான வாசனைப்
பொருட்களைச் செய்யச் சொல்வான். அவர்
களில் சிலரை அவனுக்காக சமைக்கவும்,
பலகாரம் சுடவும் பலவந்தப் படுத்துவான்.
14 "அரசன் உங்கள் செழிப்பான வயல்க
ளையும், திராட்சைத் தோட்டங்களையும்,
ஒலிவ மரங்களையும் எடுத்துக்கொள்வான்.
தன் அதிகாரிகளுக்கு அவற்றைக் கொடுப்
பான். 15 உங்கள் தானியங்களிலும் திராட்சை
யிலும் பத்தில் ஒரு பாகத்தை எடுத்துக்
கொள்வான். அவற்றைத் தன் அதிகாரி
களுக்குக் கொடுப்பான். 16 அரசன் உங்களி
லிருந்து வேலைக்காரரையும், வேலைக்காரி
களையும், தேர்ந்த வாலிபர்களையும்
எடுத்துக்கொள்வான். அவன் உங்கள் கழு
தைகளையும் எடுத்து தன் சொந்த உப
யோகத்துக்கு வைத்துக்கொள்வான். 17 உங்கள்
மந்தையில் பத்தில் ஒரு பாகத்தையும்
எடுத்துக்கொள்வான்.
"நீங்களே அரசர்களுக்கு அடிமை
யாவீர்கள். 18 காலம் வரும்போது நீங்கள்
தேர்ந்தெடுத்த அரசனால் கதறி அழுவீர்கள்.
அப்போது கர்த்தர் உங்களுக்குப் பதில்
சொல்லமாட்டார்" என்றான்.
19 ஆனால் ஜனங்கள் சாமுவேலுக்கு செவி
கொடுக்கவில்லை. அவர்கள், "இல்லை!
எங்களை ஆள ஒரு அரசன் வேண்டுமென
விரும்புகிறோம். 20 அப்போது நாங்கள் மற்ற
நாடுகளைப்போன்று இருப்போம். அரசன்
எங்களை வழிநடத்துவான். எங்களோடு
வந்து எங்களுக்காகப் போர் செய்வான்"
என்றனர்.
21 சாமுவேல் ஜனங்கள் சொன்னதைக்
கேட்டு கர்த்தரிடம் அவர்கள் வார்த்தை
களைத் திருப்பிச் சொன்னான். 22 கர்த்தரோ,
"அவர்கள் சொல்வதைக் கேள்! ஒரு
அரசனைக் ஏற்படுத்து" என்றார்.
பிறகு சாமுவேல் இஸ்ரவேல் ஜனங்
களிடம், "நல்லது! நீங்கள் புதிய அரசனை
அடைவீர்கள். இப்போது, நீங்கள்
அனைவரும் வீட்டுக்குத் திரும்பிச் செல்
லுங்கள்" என்றான்.

சவுல் தன் தந்தையின் கழுதைகளைத் தேடுகிறான்

9 பென்யமீன் கோத்திரத்தில் கீஸ் முக்கி
யமானவனாக இருந்தான். இவன்
அபியேலின் மகன். அபியேல் சேரோரின்
மகன். சேரோர் பெகோராத்தின் மகன்.
பெகோரோத் பென்யமீன் கோத்திரத்தி
லுருந்து வந்த அப்பியாவின் மகன்.
2 கீஸுக்குச் சவுல் என்ற மகன் இருந்தான்.
இவன் அழகான இளைஞன். இவனைப்போல்
அழகுள்ளவன் யாரும் இல்லை. இஸ்ரவேலில்
எல்லோரும் இவன் தோளுக்குக் கீழா
யிருக்கத்தக்க உயரம் இருந்தான்.
3 ஒரு நாள், கீஸின் கழுதைகள்
தொலைந்துப் போயின. எனவே அவன்
தன் மகன் சவுலிடம், "ஒரு வேலைக்காரனை
அழைத்துப்போய் கழுதைகளைத் தேடு"
என்றான். 4 சவுல் கழுதைகளைத் தேடிப்
போனான். அவன் எப்பிராயீம் மலைச்சரிவு
களிலும் சலிஷா பகுதிகளிலும் தேடினான்.
ஆனால் கண்டுபிடிக்க முடியவில்லை.
எனவே சாலீம் நாட்டுப் பக்கம் போனார்
கள். அங்கேயும் இல்லை. பிறகு பென்யமீன்
நாட்டுப் பக்கத்திலும் கண்டுபிடிக்க
முடியவில்லை.
5 இறுதியாக, சவுலும் வேலைக்காரனும்
சூப் நாட்டிற்கு வந்தனர். சவுல் தன்
வேலைக்காரனிடம், "நாம் திரும்பிப் போக
லாம். என் தந்தை இப்பொழுது கழுதைகளை
விட்டு நம்மைப்பற்றி கவலைப்பட ஆரம்பித்
திருப்பார்" என்றான்.
6 ஆனால் வேலைக்காரனோ, "ஒரு
தேவமனிதன்* இங்கே இருக்கிறார். ஜனங்கள்
அவரை மதிக்கின்றனர். அவர் சொல்வ
தெல்லாம் உண்மையாகிறது. எனவே, நாம்
நகரத்திற்குள் போவோம். நாம் அடுத்து
செல்லவேண்டிய இடத்தைப்பற்றி தேவமனி
தன் கூறக்கூடும்" என்றான்.
7 சவுல் தன் வேலைக்காரனிடம், "உறுதி
யாக, நாம் நகருக்குள் போவோம். ஆனால்
அவருக்கு எதைக் கொடுப்பது? தேவமனி
தனுக்கு கொடுக்க அன்பளிப்புகள் எதுவு
மில்லை. நம்மிடம் உணவு கூட இல்லையே?"
என்றான்.
8 மீண்டும் அந்த வேலைக்காரன், "பாருங்
கள், என்னிடம் கொஞ்சம் பணம் இருக்கி
றது. இதனைத் தேவமனிதனுக்கு கொடுப்
போம். பிறகு நாம் அடுத்துப் போக
வேண்டிய இடத்தைப்பற்றி அவர் சொல்
வார்" என்றான்.
9-11 சவுல் தனது வேலைக்காரனிடம், "நல்ல
யோசனை! நாம் போவோம்!" என்றான்.
எனவே, தேவமனிதன் தங்கி இருந்த நகருக்கு
அவர்கள் சென்றார்கள்.
சவுலும், வேலைக்காரனும் நகரை நோக்கி
மலைமீது ஏறிக்கொண்டிருந்தனர். சாலை
யில் அவர்கள் சில இளம் பெண்களைச்
சந்தித்தார்கள். அந்த இளம் பெண்கள்
தண்ணீர் எடுக்க வந்து கொண்டிருந்தார்கள்.
சவுலும், வேலைக்காரனும் அந்த இளம்
பெண்களிடம், "சீயர் இங்கு தான் இருக்கி
றாரா?" என்று கேட்டார்கள். (முற்காலத்தில்,
இஸ்ரவேலில் இருந்த ஜனங்கள் தீர்க்க
தரிசியை, 'சீயர்' என்று அழைத்தார்கள்.
எனவே, அவர்கள் தேவனிடம் ஏதேனும்
கேட்க வேண்டியிருந்தால், "நாம் சீயரிடம்
போகலாமா?" என்பார்கள்.)

தேவமனிதன் தீர்க்கதரிசி. ஜனங்களிடத்தில் பேசும்படி தேவனால் அனுப்பப்பட்டவன்.

[12]அந்த இளம் பெண்கள், "ஆம், சீயர்
இங்குதான் இருக்கிறார். அவர் சாலையில்
சற்று தூரத்தில் தங்கி இருக்கிறார். அவர்
இன்றுதான் ஊருக்கு வந்தார். சமாதான
பலிகளைச் செலுத்துவதற்காக இன்று சிலர்
அவரை ஆராதனை இடத்தில் சந்திக்கிறார்
கள். [13]ஊருக்குள் நீங்கள் விரைவாகச்
சென்றால், ஆராதனை செய்யுமிடத்தில் அவர்
உண்ணப்போகும் முன் அவரைச் சந்தித்து
விடலாம். அத்தீர்க்கதரிசி பலியை
ஆசீர்வதிப்பார். எனவே அவர் அங்கு
சேரும் முன்பு ஜனங்கள் உண்ணத்
தொடங்கமாட்டார்கள். எனவே, நீங்கள்
கொஞ்சம் விரைவாகச் சென்றால் அத்தீர்க்க
தரிசியைச் சந்திக்க முடியும்" என்றார்கள்.
[14]சவுலும் அவனது வேலைக்காரனும்
நகரை நோக்கி மலையில் ஏறத்தொடங்
கினார்கள். நகருக்குள் நுழையும் சமயத்தில்,
சாமுவேல் அவர்களை நோக்கி வந்தான்.
அப்பொழுதுதான் சாமுவேல் ஆராதனை
இடத்திற்கு போக நகரைவிட்டு வெளியே
வந்துக்கொண்டிருந்தான்.

[15]சவுல் வருவதற்கு ஒருநாள் முன்பு,
கர்த்தர் சாமுவேலிடம், [16]"நாளை இந்
நேரத்தில் உன்னிடம் ஒருவனை அனுப்பு
வேன். அவன் பென்யமீன் கோத்திரத்தில்
உள்ளவன். அவனை இஸ்ரவேல் ஜனங்
களின் புதிய தலைவனாக நீ அபிஷேகம்
செய். அவன் பெலிஸ்தர்களிடமிருந்து என்
ஜனங்களைக் காப்பாற்றுவான். நான்
என்னுடைய ஜனங்களின் துன்பத்தைப்
பார்த்திருக்கிறேன், அழுகையைக் கேட்டிருக்
கிறேன்" என்றார்.
[17]சாமுவேல் சவுலைப் பார்த்தான். அப்
போது கர்த்தர், "நான் சொன்னது இவனைப்
பற்றித்தான். இவனே எனது ஜனங்களை
ஆள்வான்" என்றார்.
[18]சவுல் வழி கேட்பதற்காகக் கதவண்டை
நின்றிருந்து சாமுவேலை நெருங்கி, "தயவு
செய்து சீயரின் வீடு எங்கே இருக்கிறதென்று
சொல்லுங்கள்?" என்று கேட்டான்.
[19]அதற்கு சாமுவேல், "நானே சீயர். நீ
எனக்கு முன்பாக ஆராதனை இடத்திற்கு
மேடையின்மேல் ஏறிப்போ! இன்று என்
னோடு சேர்ந்து நீயும் உனது வேலைக்
காரனும் சாப்பிடுங்கள். நான் உங்களை
நாளைக் காலையில்தான் போகவிடுவேன்.
உனது கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்
வேன். [20]மூன்று நாட்களுக்கு முன்னால்
இழந்த கழுதைகளைப்பற்றி கவலைப்பட
வேண்டாம். அவைக் கண்டுபிடிக்கப்பட்டது.
இப்போது அனைத்து இஸ்ரவேலரும்
உன்னை விரும்புகின்றனர்! அவர்கள் உன்
னையும் உன் குடும்பத்திலுள்ள அனைவரை
யும் விரும்புகின்றனர்" என்றான்.
[21]அதற்கு சவுல், "ஆனால் நான்
பென்யமீன் கோத்திரத்தைச் சேர்ந்தவன்,
இதுதான் இஸ்ரவேலில் மிகவும் சிறிய
கோத்திரம். இதில் எனது குடும்பந்தான்
பென்யமீன் கோத்திரத்திலே மிகவும் சிறியது.
இவ்வாறிருக்க இஸ்ரவேல் என்னை விரும்பு
வதாக எப்படி சொல்கிறீர்?" என்று
கேட்டான்.
[22]பிறகு சாமுவேல், சவுலையும் அவனது
வேலைக்காரனையும் அழைத்துகொண்டு
உணவு சாப்பிடும் பகுதிக்குப் போனான்.
ஏறக்குறைய 30 பேர் சேர்ந்து உணவு
உண்ணவும் பலியை பங்கிட்டுக்கொள்ளவும்
அழைக்கப்பட்டிருந்தனர். சாமுவேல், சவுலுக்
கும் அவனது வேலைக்காரனுக்கும்
மேஜையில் மிக முக்கியமான இடத்தைக்
கொடுத்தான். [23]சாமுவேல் சமையற்காரனி
டம், "நான் எடுத்து வைக்கச் சொன்ன
இறைச்சியின் ஒரு பகுதியைப் பரிமாறு"
என்றான்.
[24]சமையற்காரன் தொடைக்கறியைக்
கொண்டுவந்து மேஜையில் சவுலின் முன்
னால் வைத்தான். சாமுவேல், "உனக்கு
முன்பாக இருக்கும் இறைச்சியைச் சாப்பிடு.
இந்தச் சிறப்பான நேரத்தில் ஜனங்கள்
கூடியிருந்தாலும் இது உனக்காக பாதுகாத்து
வைக்கப்பட்டது" என்றான். எனவே சவுல்
அன்று சாமுவேலோடு சேர்ந்து அதனைச்
சாப்பிட்டான்.
[25]அவர்கள் உண்டு குடித்ததும் ஆராதனை
இடத்திலிருந்து கீழே இறங்கி மீண்டும்
நகரத்திற்குள் சென்றார்கள். சாமுவேல்
சவுலுக்காக ஒரு படுக்கையை மேல் வீட்டில்
அமைத்தான். சவுல் அதில் உறங்கினான்.
[26]மறுநாள், அதிகாலையில் சவுலை மேல்
வீட்டிற்கு அழைத்தான். "எழு, நான்
உன்னை உன் வழியிலே அனுப்புவேன்"
என்றான். அவனும் தயார் ஆகி சாமு
வேலோடு வீட்டைவிட்டு வெளியேறினான்.
[27]சவுலும் வேலைக்காரனும் சாமு
வேலோடு ஊரின் எல்லைக்குச் சென்றனர்.
சாமுவேல் சவுலிடம், "உனது வேலைக்
காரனை நமக்கு முன்னே போகச்சொல்.
நான் உனக்காக தேவனிடமிருந்து ஒரு
செய்தியை வைத்திருக்கிறேன்" என்றான்.
வேலைக்காரனும் முன் நடந்தான்.

சாமுவேல் சவுலை அபிஷேகம் செய்கிறான்

10 சாமுவேல் சிறப்புக்குரிய எண்ணை
இருக்கும் ஜாடியை எடுத்தான்.
அதனைச் சவுலின் தலையில் ஊற்றி,
முத்தமிட்டுச் சொன்னான், "கர்த்தர் உன்னை
இஸ்ரவேல் ஜனங்களின் தலைவனாக
அபிஷேகித்திருக்கிறார். கர்த்தருடைய ஜனங்
களை நீ கட்டுப்படுத்துவாய். அவர்களைச்
சுற்றியுள்ள எதிரிகளிடமிருந்து காப்பாற்று
வாய். கர்த்தர் உன்னை அவருடைய
ஜனங்களின் மேல் அரசனாக்கியுள்ளார். இது
உண்மை என்பதை நிரூபிக்க ஒரு

அடையாளம் உள்ளது. 2இன்று நீ என்னை
விட்டுப் போனதும் பென்யமீன் எல்லையில்
செல்சாவில் ராகேலின் கல்லறை அருகில்
இருவரைக் காண்பாய். அவர்கள் உன்னிடம்,
‘நீ தேடிப்போன கழுதைகள் கிடைத்தன.
உன் தந்தை கழுதைகளைப்பற்றிய கவலை
களை விட்டு விட்டார். இப்போது அவர்
உன்னைப் பற்றி கவலைப்படுகிறார். அவர்,
என் மகனுக்காக என்ன செய்வேன்?’
என்கிறார் என்பார்கள்” என்றான்.
3மேலும் சாமுவேல், ‘‘பின்பு தாபோரி
லுள்ள பெரிய சிந்தூர மரத்தடிவரை
போவாய் அங்கே மூன்று பேர் உன்னைச்
சந்திப்பார்கள். அவர்கள் பெத்தேலுக்கு
தேவனை தொழுதுகொள்ளச் செல்பவர்கள்.
அவர்களில் ஒருவன் மூன்று வெள்ளாட்டுக்
குட்டிகளையும், இன்னொருவன் மூன்று
அப்பங்களையும், மூன்றாமவன் ஒரு புட்டி
திராட்சைரசத்தையும் வைத்திருப்பார்கள்.
4அவர்கள் உனது நலனை விசாரிப்பார்கள்.
அவர்கள் இரண்டு அப்பங்களைத் தரு
வார்கள். நீ அவர்களிடம் அவற்றைப்
பெற்றுக்கொள்ள வேண்டும். 5பிறகு நீ
கிபியாத் எலோகிமுக்குப் போவாய். அங்கே
பெலிஸ்தரின் கோட்டை உண்டு. நீ நகரத்துக்
குள் போகும்போது, தீர்க்கதரிசிகளின்
கூட்டம் ஒன்று வெளியே வரும். அவர்கள்
ஆராதனை ஸ்தலத்திலிருந்து வருவார்கள்.
அவர்கள் தீர்க்கதரிசனம் சொல்வார்கள்.
அவர்கள் சுரமண்டலமும், தம்புரும், புல்
லாங்குழலும், இரட்டைவால் யாழும்
இசைப்பார்கள். 6அப்பொழுது கர்த்தருடைய
ஆவியானவர் மிகுந்த வல்லமையோடு உன்
மீது இறங்குவார். நீயும் அவர்களோடு
சேர்ந்து தீர்க்கதரிசனம் சொல்லி வேறு
மனிதன் ஆவாய். 7இவை ஆனதும், தேவன்
உன்னோடு இருப்பதால் சந்தர்ப்பத்திற்கு
ஏற்றபடி செய்ய ஆரம்பி.
8“நீ எனக்கு முன்னால் கில்காலுக்கு
இறங்கிப்போ. நான் பிறகு அங்கு வருவேன்.
நான் சர்வாங்க தகன பலிகளையும்
சமாதான பலிகளையும் செலுத்துவேன்.
ஆனால் நீ 7 நாட்கள் காத்திருக்க வேண்டும்.
பிறகு நீ செய்ய வேண்டியவற்றைப்பற்றி
நான் சொல்வேன்” என்றார்.

சவுல் தீர்க்கதரிசிகளைப் போல் ஆகிறான்

9சவுல் சாமுவேலை விட்டு போனபோது,
தேவன் சவுலின் வாழ்க்கையை மாற்றினார்.
அந்த நாளில் இந்த அடையாளங்கள்
எல்லாம் நடந்து முடிந்தன. 10சவுலும் அவ
னது வேலைக்காரனும் கிபியாத் எலோகிம்
மலைக்குச் சென்றனர். அங்கே, அவன்
தீர்க்கதரிசிகளின் குழுவைச் சந்தித்தான்.
தேவனுடைய ஆவியானவர் மிகுந்த வல்ல
மையோடு சவுலின் மேல் இறங்கினார்.
அவனும், தீர்க்கதரிசிகளுடன் தீர்க்கதரிசனம்
சொன்னான். 11அவனை முன்பே அறிந்
திருந்தவர்கள் அவன் தீர்க்கதரிசிகளோடு
சேர்ந்து தீர்க்கதரிசனம் சொல்வதைக் கண்ட
னர். அவர்கள், “கீஸின் மகனுக்கு என்ன
ஆயிற்று? சவுலும் ஒரு தீர்க்கதரிசியா?”
என்று பேசிக்கொண்டனர்.
12கிபியாத் ஏலோமில் வாழும் ஒருவன்,
“ஆமாம்! அவன்தான் அவர்களின் தலை
வன்” என்றான். அதனால் “சவுலும் தீர்க்க
தரிசிகளுள் ஒருவனோ?” என்பது மிகவும்
புகழ்வாய்ந்தப் பழமொழி ஆனது.

சவுல் வீட்டிற்க்கு திரும்புகிறான்

13சவுல் தீர்க்கதரிசனம் சொல்லி முடித்த
பின், தன் வீட்டிற்கு அருகிலுள்ள தொழுது
கொள்ளுகிற இடத்திற்கு வந்தான்.
14அப்போது சவுலின் சிறிய தகப்பன்
சவுலிடமும் அவனது வேலைக்காரனிடமும்,
“நீங்கள் எங்கே போயிருந்தீர்கள்?” எனக்
கேட்டான்.
“நாங்கள் கழுதைகளைத் தேடிப்
போனோம். கிடைக்காததால் சாமுவேலை
சந்திக்கச் சென்றோம்” என்றான்.
15“சாமுவேல் என்ன சொன்னார் என்று
தயவுசெய்து சொல்?” எனச் சவுலின் சிறிய
தகப்பன் கேட்டான்.
16அதற்கு சவுல், “சாமுவேல், கழுதைகள்
ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்டு விட்டன
என்று சொன்னார்” என்று பதிலுரைத்தான்.
அரசாட்சியைப்பற்றி சாமுவேல் கூறியதைப்
பற்றி சவுல் எதுவும் சொல்லவில்லை.

சவுலை அரசனாக சாமுவேல் அறிவிக்கிறான்

17சாமுவேல் இஸ்ரவேல் ஜனங்கள் அனை
வரிடமும் மிஸ்பாவில் கர்த்தரைச் சந்திக்க
கூடுமாறு கூறினான். 18சாமுவேல் இஸ்ர
வேலரைப் பார்த்து, “இஸ்ரவேலரின் தேவ
னாகிய கர்த்தர் கூறுகிறார், ‘நான் இஸ்ர
வேலரை எகிப்திற்கு வெளியே அழைத்து
வந்தேன். உங்களுக்குத் தீங்கு செய்ய முயன்ற
எகிப்தியர்களிடமிருந்தும் மற்ற அரசுக
ளிடமிருந்தும் நான் உங்களைக் காப்பாற்றி
னேன்’ என்றார். 19ஆனால் இன்று நீங்கள்
உங்கள் தேவனை ஒதுக்கிவிட்டீர்கள்,
உங்களது துன்பங்களிலிருந்தும் சிக்கல்களி
லிருந்தும் உங்கள் தேவன் காப்பாற்றினார்.
ஆனால் நீங்களோ, ‘எங்களை ஆள ஒரு
அரசன் வேண்டும்’ என்கிறீர்கள். இப்போது
நீங்கள் உங்கள் குடும்பத்தோடும் கோத்திரங்க
ளோடும் கர்த்தருக்கு முன்பு சேர்ந்து நில்
லுங்கள்” என்றான்.
20சாமுவேல் இஸ்ரவேலர்களின் எல்லா
கோத்திரங்களையும் கூட்டினான். பின் புதிய
அரசனைத் தேர்ந்தெடுத்தான். முதலில் பென்
யமீனின் கோத்திரத்தைத் தேர்ந்தெடுத்தான்.
21அவன் பென்யமீன் கோத்திரத்தின் ஒவ்
வொரு குடும்பங்களையும் கடந்துப்போகச்
சொல்லின பின்பு மாத்திரி குடும்பம்

தேர்ந்தெடுக்கப்பட்டது. அவர்களின் குடும்
பம் கடந்துபோகும்போது கீசின் மகனாகிய
சவுலும் தேர்ந்தெடுக்கப்பட்டான்.
ஆனால் ஜனங்கள் அவனைத் தேடிய
போது அவன் காணப்படவில்லை. 22 பிறகு
அவர்கள் கர்த்தரிடம், "அவன் இன்னும்
இங்கே வரவில்லையா?" எனக் கேட்டனர்.
அதற்குக் கர்த்தர், "சவுல் கிடங்கில்
பொருட்களுக்கு மறைவில் ஒளிந்துகொண்டி
ருக்கிறான்" என்றார்.
23 ஜனங்கள் ஓடிப்போய் அவனை
அழைத்துக்கொண்டு வந்தனர். அவன்
அவர்கள் மத்தியில் நின்றான். அவனது
தலை மற்றவர்களைவிட உயர்ந்திருந்தது.
24 சாமுவேல் அனைத்து ஜனங்களிடமும்,
"கர்த்தரால் தேர்ந்தெடுக்கப்பட்ட மனிதனைப்
பாருங்கள். அவனைப் போன்று சிறப்புடை
யவன் வேறுயாருமில்லை" என்றார். பிறகு
ஜனங்கள் "அரசனே நீடூழி வாழ்க!" என்று
குரலெழுப்பினார்கள்.
25 சாமுவேல் அரசாங்கத்தின் விதிகளை
ஜனங்களுக்கு விளக்கிக் கூறினான். அவன்
ஒரு புத்தகத்தில் அவ்விதிகளை எழுதினான்.
அந்த புத்தகத்தை கர்த்தருக்கு முன்பு வைத்
தான். பின் ஜனங்களை வீட்டிற்கு போகு
மாறு கூறினான்.
26 சவுலும் கிபியாவிலுள்ள தன் வீட்
டிற்குப் போனான். தேவன் சில வீரர்களின்
இதயத்தைத் தொட அவர்கள் அவனைப்
பின் தொடர்ந்துச் சென்றார்கள். 27 ஆனால்
சில கயவர்கள், "இவன் எவ்வாறு நம்மைக்
காப்பாற்றுவான்?" என்றனர். அவர்கள்
சவுலைப்பற்றி கெட்டவற்றைக் கூறி அவ
னுக்கு அன்பளிப்புக்களைக் கொடுக்க
மறுத்தனர். சவுல் ஒன்றும் கூறவில்லை.

நாகாஸ் எனும் அம்மோனிய அரசன்

நாகாஸ் அம்மோனிய அரசன், காத்
மற்றும் ரூபன் கோத்திரங்களை காயப்படுத்
திக் கொண்டிருந்தான். அவன் ஒவ்வொரு
ஆண்களின் வலது கண்ணை பிடுங்கி
யாரும் அவர்களுக்கு உதவி செய்யாதபடி
தடுத்தான். யோர்தான் நதி ஒரத்தில் வாழ்ந்த
இஸ்ரவேல் ஆண்களுக்கும் அப்படியே செய்
தான். எனவே 7,000 இஸ்ரவேலர்கள்
அம்மோனியரிடமிருந்து தப்பி யாபேஸ்
கீலேயாத்திற்கு வந்தனர்.

11 ஒரு மாதத்திற்குப்பின் நாகாஸ் தன்
சேனையோடு யாபேஸ் கீலேயாத்தின்
நகரை முற்றுகையிட்டான். யாபேஸ் ஜனங்
கள் நாகாஸை நோக்கி, "நீங்கள் எங்களோடு
ஒரு ஒப்பந்தத்தைச் செய்துக்கொண்டால்,
உங்களுக்குச் சேவை செய்வோம்" என்றனர்.
2 ஆனால் அம்மோனியனான நாகாஸ்,
"நான் ஒவ்வொரு மனிதனின் வலது
கண்ணையும் பிடுங்கிய பிறகுதான் ஒப்பந்தத்
தைச் செய்துகொள்வேன். அதுதான் எல்லா
இஸ்ரவேலரையும் அவமானப்படுத்தும்!"
என்றான்.
3 யாபேசின் தலைவர்கள் நாகாசிடம்,
"எங்களுக்கு 7 நாட்கள் அவகாசம் கொடுங்
கள். அனைத்து இஸ்ரவேலருக்கும் தூது
அனுப்புகிறோம். யாரும் உதவிக்கு வர
வில்லை என்றால், உங்களிடம் வந்துச்
சரணடைந்து விடுகிறோம்" என்று கூறி
னார்கள்.

சவுல் யாபேஸ் கீலேயாத்தைக் காப்பாற்று கிறான்

4 சவுல் வசித்த கிபியாவுக்கு தூதுவர்கள்
வந்தார்கள். அவர்கள் செய்தியை ஜனங்களி
டம் சொன்னார்கள். ஜனங்கள் மிகவும்
சத்தமாக அழுதார்கள், 5 அச்சமயம் சவுல்
தன் பசுக்களோடு வயல் வெளியில் இருந்
தான். அவன் உள்ளே வந்தபோது, அவர்
களின் கூக்குரலைக் கேட்டான். அவன்
அவர்களிடம், "ஏன் அழுகிறீர்கள்? உங்க
ளுக்கு என்ன நடந்தது?" என்று கேட்டான்.
அதற்கு அவர்கள் யாபேஸில் இருந்து
வந்த தூதுவர்கள் சொன்ன செய்தியைச்
சொன்னார்கள். 6 சவுல் அவர்கள் சொன்
னதைக் கேட்டான். பின் தேவனுடைய
ஆவியானவர் அவன் மீது மிகுந்த வல்லமை
யோடு இறங்கினார். அவன் சீறி எழுந்தான்.
7 அவன் இரண்டு பசுக்களைத் துண்டுத்
துண்டாக வெட்டி அத்துண்டுகளைத்
தூதுவர்களிடம் கொடுத்து அனுப்பினான்.
அவர்கள் அதனை இஸ்ரவேல் முழுவதும்
எடுத்துச் செல்லுமாறு கூறினான். இஸ்ர
வேல் ஜனங்களிடம்: "சவுலையும் சாமு
வேலையும் பின்பற்றி வாருங்கள். யாராவது
இதைக் கேட்டு கூடி வந்து உதவாவிட்டால்
அவர்களின் பசுவுக்கும் இப்படியே செய்யப்
படும்!" எனச் சொல்லி அனுப்பினான்.
கர்த்தரிடமிருந்து பெரும் பயம் ஜனங்கள்
மேல் வந்தது. அவர்கள் ஒன்று கூடினார்கள்.
8 சவுல் ஆண்களை பேசேக்கில் கூட்டினான்.
அவர்களில் இஸ்ரவேல் ஜனங்களிலிருந்து
3,00,000 பேரும், யூதாவின் ஜனங்களிலிருந்து
30,000 பேரும் கூடி இருந்தனர்.
9 சவுலும் அவனது படையும் யாபேசி
லிருந்து வந்த தூதர்களிடம், "நாளை
மதியத்தில் நீங்கள் காப்பாற்றப்படுவீர்கள்
என கீலேயாத்திலுள்ள யாபேசியர்களுக்குக்
கூறுங்கள்" என்றான்.
தூதுவர்கள் சவுலின் செய்தியை
யாபேசியர்களுக்குக் கூறினார்கள். அவர்கள
மிகவும் சந்தோஷப்பட்டனர். 10 பின் அவர்கள்
அம்மோனியனான நாகாசிடம், "நாளை
நாங்கள் உங்களிடம் வருவோம், அப்போது
உங்கள் விருப்பம்போல் செய்யலாம்" என்
றனர்.
11 மறுநாள் தனது வீரர்களைச் சவுல்
மூன்று குழுக்களாக பிரித்தான். சூரிய

உதயத்தின் போது, சவுலும் அவனது
வீரர்களும் அம்மோனிய கூடாரங்களுக்குள்
புகுந்து மதியத்திற்குள் அம்மோனியர்களைத்
தோற்கடித்தனர். இரண்டு பேராகிலும்
சேர்ந்து ஓடிப்போகாதபடி அவர்கள் பல
திசைகளிலும் சிதறிப் போனார்கள்.
12பின் ஜனங்கள் சாமுவேலிடம், "சவுலை
அரசன் ஆக்கவேண்டாம் எனக் கூறியவர்கள்
எங்கே? இழுத்து வாருங்கள், அவர்களைக்
கொல்வோம்!" என்றனர்.
13ஆனால் சவுலோ, "இல்லை இன்று
யாரையும் கொல்லக்கூடாது! கர்த்தர் இன்று
இஸ்ரவேலரைக் காப்பாற்றினார்!" என்றான்.
14பின்பு சாமுவேல் ஜனங்களிடம்,
"வாருங்கள், கில்காலுக்குப் போவோம்,
அங்கே சவுலை மீண்டும் அரசனாக்குவோம்"
என்றார்.
15அனைவரும் கில்காலுக்குப் போனார்
கள். அங்கே, கர்த்தருடைய முன்னிலையில்
ஜனங்கள் சவுலை அரசனாக்கினார்கள்.
கர்த்தருக்கு சமாதான பலிகளைக் கொடுத்த
னர். சவுலும் இஸ்ரவேலரும் அதனை
சிறப்பாகக் கொண்டாடினார்கள்.

சாமுவேல் இஸ்ரவேலரிடம் அரசனைப் பற்றி பேசுகிறான்

12 சாமுவேல் இஸ்ரவேலரிடம், "நீங்கள்
என்னிடம் எதை எதிர்ப்பார்த்தீர்
களோ அதனைச் செய்துவிட்டேன், உங்க
ளுக்கு ஒரு அரசனை நியமித்திருக்கிறேன்.
2இப்போது உங்களை வழிநடத்த ஒரு அரசன்
இருக்கிறான். எனக்கு முதுமையும் நரையும்
வந்துவிட்டது. ஆனால் என் மகன்கள்
உங்களுடன் இருக்கிறார்கள், நான் சிறு
வயது முதலே உங்களது தலைவனாக
இருந்திருக்கிறேன். 3நான் ஏதாவது தவறு
செய்திருந்தால் அதைக் கர்த்தரிடமும்,
கர்த்தரால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசனிட
மும் சொல்லவேண்டும். நான் ஏதாவது
உங்கள் பசுவையோ, கழுதையையோ திருடி
யிருக்கிறேனா? யாரையாவது புண்
படுத்தியோ, ஏமாற்றியோ இருக்கிறேனா?
நான் பணத்தையோ பாதரட்சையை லஞ்ச
மாக பெற்றிருக்கிறேனா? அப்படி ஏதாவது
செய்திருந்தால் நான் அதை சரி செய்துக்
கொள்வேன்" என்றான்.
4இஸ்ரவேலர்களோ, "இல்லை! நீங்கள்
எங்களுக்கு எப்போதும் தீமை செய்ய
வில்லை. எங்களை ஏமாற்றவோ, எங்கள்
பொருட்களை எந்தக் காலத்திலும் எடுத்துக்
கொள்ள வில்லை!" என்றனர்.
5சாமுவேல் அவர்களிடம், "கர்த்தரும்,
அரசரும் இன்று சாட்சிகளாக உள்ளனர்.
நீங்கள் சொன்னதை அவர்கள் கேட்
கிறார்கள். என்னிடம் தவறில்லை என்பதை
அவர்கள் அறிந்துகொண்டனர்" என்றான்.
"ஆமாம்! கர்த்தரே சாட்சி!" என்று ஜனங்கள்
சத்தமிட்டனர்.
6பின் சாமுவேல் ஜனங்களிடம், "இங்கே
நடந்ததை கர்த்தர் பார்த்திருக்கிறார். கர்த்தர்
தாமே மோசேயையும், ஆரோனையும் தேர்ந்
தெடுத்தவர். அவரே எகிப்திலிருந்து உங்கள்
முற்பிதாக்களை மீட்டுக் கொண்டவர். 7இப்
போது அங்கே நில்லுங்கள். உங்களுக்கும்,
உங்கள் முற்பிதாக்களுக்கும் கர்த்தர் செய்த
நன்மைகளைப்பற்றிச் சொல்வேன். 8யாக்
கோபு எகிப்துக்குப் போனார். பின்னர்
எகிப்தியர்கள் அவருடைய சந்ததிகளுக்கு
வாழ்க்கையை கடினமாக்கித் துன்புறுத்தி
னார்கள். கர்த்தரிடம் உதவிக்காக அழுதார்
கள். கர்த்தர் மோசேயையும் ஆரோனையும்
அனுப்பினார். அவர்கள் உங்கள் முற்பிதாக்
களை எகிப்திலிருந்துக் காப்பாற்றி இங்கே
வாழும் பொருட்டு அழைத்து வந்தனர்.
9"ஆனால் உங்கள் முற்பிதாக்கள் தமது
தேவனாகிய கர்த்தரை மறந்துவிட்டனர்.
எனவே கர்த்தர் அவர்களை சிசெராவிடம்
அடிமைகளாகுமாறு செய்தார். சிசெரா,
ஆத்சோர் என்னும் இடத்தில் இருந்த
படையின் சேனாதிபதி. பின்னர் கர்த்தர்
அவர்களை பெலிஸ்தரின் கையிலும்
மோவாப் அரசர்களிடம் அடிமையாக்கினார்.
உங்கள் முற்பிதாக்களுக்கு எதிராக அவர்கள்
எல்லோரும் சண்டையிட்டனர். 10ஆனால்,
உங்கள் முற்பிதாக்கள் கர்த்தரிடம் உதவி
கேட்டு அழுதார்கள். அவர்கள், 'நாங்கள்
பாவம் செய்துவிட்டோம். கர்த்தரை விட்டு
பொய்த் தெய்வங்களான பாலையும், (பாகா
லையும்) அஸ்த்ரோத்தையும் சேவித்தோம்.
இப்போது எங்களைப் பகைவர்களிடம்
இருந்து காப்பாற்றுங்கள். நாங்கள் உங்க
ளுக்குச் சேவை செய்கிறோம்' என்றனர்.

11"எனவே, கர்த்தர் எருபாகாலையும்,
(கிதியோன்) பேதானையும், யெப்தாவையும்,
சாமுவேலையும் அனுப்பினார். கர்த்தர்
உங்களைச் சுற்றியுள்ள பகைவர்களிட
மிருந்து காப்பாற்றினார். நீங்கள் பாது
காப்பாயுள்ளீர்கள். 12ஆனால், நாகாஸ் அரசன்
உங்களுக்கு எதிராகச் சண்டையிட வந்தான்.
நீங்கள், 'இல்லை! எங்களை ஆள ஒரு
அரசன் வேண்டும்!' என்றீர்கள்! தேவனாகிய
கர்த்தர் ஏற்கனவே உங்கள் அரசராக
இருந்தார்! எனினும் நீங்கள் கேட்டீர்கள்.
13இப்போது ஒரு அரசனைத் தேர்ந்
தெடுத்துள்ளீர்கள். கர்த்தர் அவரை உங்கள்
அரசனாக்கினார். 14கர்த்தருக்குப் பயந்து
அவரை மதிக்கவேண்டும். நீங்கள் அவருக்கு
சேவை செய்து அவரது கட்டளைகளுக்கு
கீழ்ப்படிய வேண்டும். அவருக்கு எதிராகப்
போராடக்கூடாது. நீங்களும் உங்கள்
அரசனும் உங்கள் தேவனாகிய கர்த்தரை
பின்பற்றவேண்டும். இவற்றைச் செய்தால்
தேவன் உங்களைக் காப்பார். 15ஆனால்,
நீங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படியாவிட்டால்,
அவரது கட்டளைகளுக்கு எதிராகப்

போரிட்டால் பின் அவர் உங்களுக்கு
எதிராவார். கர்த்தர் உங்களையும் உங்கள்
அரசனையும் அழிப்பார்!
16 “இப்பொழுது நீங்கள் அமைதலாயிருந்து
கர்த்தர் உங்கள் கண்களுக்கு முன் செய்யப்
போகும் பெரியக் காரியத்தைப் பாருங்கள்.
17 இப்போது கோதுமை அறுவடைக்காலம்.
நான் கர்த்தரிடம் ஜெபிப்பேன். இடியையும்
மழையையும் கேட்பேன். நீங்கள் அரசன்
வேண்டுமென்று கேட்டது கர்த்தருக்கு
விரோதமான காரியம் என்பதை அறிந்து
கொள்வீர்கள்” என்றான்.
18 எனவே, சாமுவேல் கர்த்தரிடம்
ஜெபித்தான். அன்றே கர்த்தர் இடியையும்
மழையையும் அனுப்பினார். ஜனங்கள்
கர்த்தருக்கும் சாமுவேலுக்கும் மிகவும்
பயந்தனர். 19 அனைத்து ஜனங்களும் சாமு
வேலிடம், “உம்முடைய அடியார்களாகிய
எங்களுக்காக உங்கள் தேவனாகிய கர்த்த
ரிடம் ஜெபியுங்கள், நாங்கள் அழிந்துவிட
விட்டு விடாதேயும்! நாங்கள் பலமுறை
பாவம் செய்திருக்கிறோம். இப்போது அரச
னைக் கேட்டு மேலும் பாவம்ச் செய்து
விட்டோம்” என்றனர்.
20 சாமுவேல் அவர்களிடம், “அஞ்சாதீர்கள்,
இது உண்மை! நீங்கள் எல்லா தீமைகளை
யும் செய்தீர்கள். ஆனால் கர்த்தரைப் பின்
பற்றுவதை நிறுத்தாதீர்கள். முழு மனதோடு
கர்த்தருக்குச் சேவை செய்யுங்கள். 21 விக்கிர
கங்கள் வெறும் சிலைகளே அவைகள்
உதவாது. அவற்றைத் தொழுதுகொள்ள
வேண்டாம். விக்கிரகங்கள் உங்களுக்கு
உதவாது! காப்பாற்றாது! அவைகள் ஒன்று
மில்லை.
22 “ஆனால், கர்த்தர் தம் ஜனங்களைக்
கைவிடமாட்டார். கர்த்தர் உங்களைத் தமது
சொந்த ஜனங்களாக ஆக்கிக்கொள்ள
விருப்பம் கொண்டார். எனவே, அவரது
பெரிய பெயரினிமித்தம் தம் ஜனங்களை
அவர் விட்டுவிட மாட்டார். 23 என்னைப்
பொறுத்தவரை உங்களுக்காக நான் ஜெபிப்
பதை என்றும் நிறுத்தமாட்டேன். நிறுத்தி
னால், கர்த்தருக்கு எதிராகப் பாவம் செய்த
வனாவேன். நல்வாழ்க்கைக்கான சரியான
வழியை போதித்துக்கொண்டே இருப்பேன்.
24 ஆனால், நீங்கள் கர்த்தரை கனம் பண்ண
வேண்டும். முழு இருதயத்துடன் அவருக்குச்
சேவை செய்யவேண்டும். அவர் செய்த
அதிசயமான காரியங்களை மறவாதீர்கள்!
25 நீங்கள் கடினப்பட்டு தீமை செய்தால்,
தேவன் உங்களையும் உங்கள் அரசனையும்
அழுக்கை துடப்பத்தால் நீக்குவதுப்போல்
எறிந்து விடுவார்” என்றான்.

சவுல் தன் முதல் தவறைச் செய்கிறான்

13 சவுல் அரசனாகி ஓராண்டு ஆயிற்று.
பின்பு, அவன் இஸ்ரவேலை இரண்டு
ஆண்டுகள் ஆண்ட பிறகு, 2 அவன் 3,000
பேரை இஸ்ரவேலில் தேர்ந்தெடுத்தான்.
மலைநாடான பெத்தேலில் உள்ள மிக்மாசில்
அவனோடு 2,000 பேர் இருந்தனர். 1,000
பேர் பென்யமீனில் உள்ள கிபியாவில்
யோனத்தானோடு இருந்தனர். சவுல் மீதி
உள்ளவர்களை வீட்டிற்கு அனுப்பினான்.
3 யோனத்தான் பெலிஸ்தர்களை
கேபாவில் தோற்கடித்தான். இதனை
பெலிஸ்தர் கேள்விப்பட்டு, “இஸ்ரவேலர்
புரட்சி செய்கின்றனர்” என்றார்கள்.
சவுல், “நடந்த நிகழ்ச்சியை எபிரெயர்
கேட்கட்டும்” என்று சொன்னான். எனவே
இஸ்ரவேல் நாடுகளில் எக்காளம் ஊதும்படி
சொன்னான். 4 இஸ்ரவேலர் அனைவரும்
செய்தியைக் கேட்டனர். அவர்கள், “சவுல்
பெலிஸ்தரின் தலைவனைக் கொன்றான்.
இப்போது உண்மையில் பெலிஸ்தர் இஸ்ர
வேலரை வெறுக்கிறார்கள்!” என்றனர்.
கில்காலில் கூடும்படி சவுல் இஸ்ரவேலரை
அழைத்தான். 5 பெலிஸ்தர்களும் இஸ்ர
வேலரை எதிர்த்துப் போரிட ஒன்று கூடி
னார்கள். அவர்களிடம் 30,000 இரதங்களும்
6,000 குதிரைவீரரோடும் இருந்தனர். கடற்
கரை மணலைப் போல் மிக்மாசிலே (பெத்தா
வேனுக்கு கிழக்கே மிக்மாஸ் இருந்தது.)
கூடினார்கள்.
6 இஸ்ரவேலர் தாம் தொல்லையில் சிக்
குண்டிருப்பதாக அறிந்தனர். வலைக்குள்
சிக்கியதாக அறிந்துக் குகைகளிலும் மலைப்
பிளவுகளிலும் ஒளிந்துக்கொள்ள ஓடினார்
கள். கிணறுகள், பாறைகள், நிலத்துவாரங்க
ளில் ஒளிந்தனர். 7 சிலர் யோர்தான் நதியைக்
கடந்து காத், கீலேயாத் போன்ற நிலங்
களுக்கு ஓடினார்கள். சவுல் கில்காலிலேயே
இருந்தான். படையில் உள்ளவர்கள் நடுங்கி
னார்கள்.
8 சாமுவேல் சவுலை கில்காலில் சந்திப்
பதாகக் கூறியிருந்தான். சவுல் 7 நாட்கள்
காத்திருந்தான். ஆனால், சாமுவேல் இன்னும்
கில்காலுக்கு வரவில்லை. வீரர்கள் சவுலை
விட்டு விலக ஆரம்பித்தனர். 9 ஆகையால்
சவுல், “தகன பலிகளையும் சமாதான
பலிகளையும் கொண்டு வாருங்கள்” என்று
கூறி தகன பலிகளைச் செலுத்தினான்.
10 அதைச் செய்து முடிக்கும் தருவாயில்
சாமுவேல் வந்தான். சவுல் அவனைச்
சந்திக்க முன் சென்றான்.
11 சாமுவேல், “என்ன செய்து கொண்
டிருந்தாய்?” என்று கேட்டான். அதற்கு
சவுல் “வீரர்கள் என்னை விட்டு விலகு
வதைப் பார்த்தேன். நீங்களும் சரியான
நேரத்தில் வரவில்லை. பெலிஸ்தர்கள் மிக்மா
சில் கூடிக்கொண்டிருந்தனர். 12 நான், ‘அவர்
கள் வந்து கில்காலில் என்னைத் தாக்கு
வார்கள்’ என எண்ணினேன். நான்
இதுவரை கர்த்தரிடம் உதவி கேட்கவில்லை!
எனவே தகனபலி செலுத்த என்னை நானே
கட்டாயப்படுத்திக் கொண்டேன்” என்றான்.

13சாமுவேலோ, “நீ முட்டாள்தனமாக
இதைச் செய்தாய்! நீ உனது தேவனாகிய
கர்த்தருக்குக் கீழ்ப்படியவில்லை. நீ தேவ
கட்டளைக்குக் கீழ்படிந்திருந்தால், அவர்
உன் குடும்பத்தை என்றென்றைக்கும்
இஸ்ரவேலை ஆளச் செய்திருப்பார். 14இப்
போது உனது அரசு தொடராது. கர்த்தர்
தனக்குக் கீழ்ப்படிகிறவனையே தேடிக்
கொண்டிருக்கிறார்! எனவே கர்த்தர் அந்த
மனிதனைத் தெரிந்துகொண்டார். கர்த்தர்
தம் ஜனங்களுக்காக அவனை தேர்ந்
தெடுப்பார். கர்த்தருடைய கட்டளைகளுக்கு
நீ கீழ்ப்படியவில்லை. எனவே புதிய தலை
வரை தேர்ந்தெடுத்தார்” என்றான். 15பின்
சாமுவேல் எழுந்து கில்காலை விட்டு
விலகினான்.

மிக்மாசில் போர்

சவுலும், மீதியாக இருந்த அவனது
சேனையும் கில்காலை விட்டு பென்யமீனில்
உள்ள கிபியாவிற்குச் சென்றனர், தன்னிடம்
உள்ளவர்களை எண்ணினான். அவர்கள் 600
பேர். 16சவுல், அவனது மகன் யோனத்
தான், வீரர்கள் அனைவரும் கிபியாவிற்குச்
சென்றனர்.

பெலிஸ்தர்கள் மிக்மாசில் முகாமிட்டிருந்த
னர். 17அவர்கள் அப்பகுதியில் வசித்து
வந்த இஸ்ரவேலரைத் தண்டிக்கத் தீர்மானித்த
னர். எனவே, அவர்களது சிறந்த வீரர்கள்
இஸ்ரவேலர்களைத்தாக்கினார்கள். அவர்கள்
மூன்றாகப் பிரிந்து ஒரு குழு வடக்கே
சூகாலின் அருகிலுள்ள ஒப்ரா வழியிலும்,
18இரண்டாவது குழு தென் கிழக்கே
பெத்தொரோன் சாலையிலும் சென்றது.
மூன்றாவது படை வனாந்தரத்தை நோக்கிப்
போகும் செபோயீமின் பள்ளத்தாக்குக்கு
எதிரான வழியில் சென்றது.

19இஸ்ரவேலர்கள் யாருக்கும் இரும்பு
ஆயுதங்களைச் செய்யத் தெரியாது. இஸ்ர
வேலில் இரும்புக் கொல்லர்கள் யாரும்
இல்லை. பெலிஸ்தர்கள்அவர்களுக்கு ஆயுதம்
செய்யக் கற்றுக் கொடுக்கவில்லை. அவர்கள்
கத்தி, வாள், ஈட்டிகளை செய்துவிடக்
கூடாதே என்று அஞ்சினார்கள். 20பெலிஸ்தர்
மட்டுமே தங்கள் ஆயுதங்களைக் கூர்படுத்த
அறிந்திருந்தனர். இஸ்ரவேலர் தங்கள்
கடப்பாரை, மண்வெட்டி, முக்கூருள்ள
வேலாயுதங்கள், கோடரி, தாற்றுக்கோல்
போன்றவற்றை கூர்மையாக்க பெலிஸ்தரிடம்
சென்றனர். 21பெலிஸ்தர்களின் கொல்லர்கள்
கடப்பாரை, மண்வெட்டியை கூர்மைப்
படுத்த 1/3, 1/6 சேக்கல் வெள்ளியை வசூ
லித்தனர். 22எனவே, போரிடும் நாளில்
சவுலோடு சென்ற இஸ்ரவேலர்களின்
கையில் வாளோ அல்லது கேடயமோ
எதுவும் இல்லை. சவுலிடமும் அவன்
மகன் யோனத்தானிடமும் மட்டுமே ஆயுதங்
கள் இருந்தன.

23ஒரு பெலிஸ்தர் சேனை மிக்மாசியிலி
ருந்து போகிற மலைப்பாதை மட்டும்
காத்துக் கொண்டிருந்தது.

யோனத்தான் பெலிஸ்தர்களைத் தாக்குகிறான்

14 அன்று தன் ஆயுதங்களைத் தூக்கிவந்த
இளைஞனோடு சவுலின் மகனாகிய
யோனத்தான் பேசினான், “பள்ளத்தாக்கின்
இன்னொரு பக்கத்தில் உள்ள பெலிஸ்தர்
களின் முகாமிற்கு போவோம்” என்றான்.
தந்தையிடம் சொல்லாமல் போனான்.

2சவுல் மலையோரத்தில் மிக்ரோனில் ஒரு
மாதுளை மரத்தின் கீழ் உட்கார்ந்திருந்தான்.
அதனருகில் போரடிக்கிற களம் இருந்தது.
அவனோடு 600 பேர் இருந்தனர். 3அந்நாட்க
ளில் அகியா என்ற ஒருவன் இருந்தான்.
இப்போது அகியா ஆசாரியனாயிருந்தான்.
அகியா ஏபோத்தைத் தரித்து ஆசாரிய
ஊழியம் செய்துவந்தான். அகியா என்பவன்
இக்கபோத்தின் சகோதரனான அகிதூபின்
மகன். இக்கபோத் பினெகாசின் மகன்.
பினெகாசு ஏலியின் மகன். சீலோவில்
முன்பு ஏலி ஆசாரியனாக இருந்தான்.
யோனத்தான் தனியாக விட்டுப் போயி
ருந்ததை யாரும் அறியவில்லை.

4அவன் சென்ற வழியில் இரு பக்கமும்
போசே, சேனே எனும் இரு பெரும்
பாறைகள் இருந்தன. இந்தக் கணவாய்
வழியாகச் செல்ல யோனத்தான் திட்ட
மிட்டான். 5இந்தப் பாறைகளில் ஒன்று
மிக்மாசை நோக்கியும் இன்னொன்று கிபி
யாவை நோக்கியும் இருந்தன.

6யோனத்தான் தன்னுடைய ஆயுதங்
களைச் சுமந்து வந்த இளம் உதவி
யாளனிடம், “வா, நாம் அந்நியரின்
முகாமுக்குப் போவோம். அவர்களைத் தோற்
கடிக்க ஒருவேளை கர்த்தர் நமக்கு உதவ
லாம்! கர்த்தரை யாராலும் தடுக்கமுடியாது.
நமது எண்ணிக்கை அதிகமோ அல்லது
குறைவோ அது காரியமல்ல” என்றான்.

7அதற்கு ஆயுதங்களை சுமந்து வந்த
இளம் உதவியாளன், “உங்களுக்குச் சரி
யென்று தோன்றுவதைச் செய்யுங்கள். நான்
எப்போதும் உங்களோடு இருப்பேன்”
என்றான்.

8அப்பொழுது யோனத்தான், “சரி
போவோம், பள்ளத்தாக்கைக் கடந்து பெலிஸ்
தர்களின் எல்லைக்குள் செல்வோம். நம்மைப்
அவர்கள் பார்க்கும்படி செய்வோம். 9அவர்
கள், ‘நாங்கள் வரும்வரை அங்கேயே
நில்லுங்கள்’ என்றால் நாம் அங்கேயே
நிற்போம். மேலே செல்ல மாட்டோம்.
10ஆனால் அவர்கள், ‘இங்கே வாருங்கள்’
என்றால் போவோம். ஏனென்றால் கர்த்தர்
நாம் அவர்களைத் தோற்கடிக்க அனு

மதிக்கிறார் என்பதற்கு இது தேவனுடைய
அடையாளமாகும்” என்றான்.
11பெலிஸ்தர் பார்வையில் படுமாறு
யோனத்தானும், இளம் உதவியாளனும் நடந்
தனர். அவர்களோ, “பார்! இஸ்ரவேலர்கள்
துவாரங்களில் ஒளிந்திருந்து வெளியே
வருகிறார்கள்” என்றனர். 12கோட்டைக்கு
மேலிருந்த பெலிஸ்தர், “இங்கே வாருங்கள்.
உங்களுக்குப் பாடம் கற்பிக்கிறோம்!” என
அவர்களை நோக்கிக் கூவினர்.
யோனத்தான் தன் உதவியாளிடம்,
“மலைக்கு என்னைப் பின் தொடர்ந்து
வா. கர்த்தர் பெலிஸ்தர்களை தோற்கடிக்க
அடையாளம் காட்டினார்!” என்றான்.
13-14யோனத்தான் தன் கைகளாலும்,
கால்களாலும் பற்றியபடி மலைமீது ஏறி
னான். உதவியாளன் பின்னால் ஏறினான்.
அவர்கள் இருவரும் பெலிஸ்தர்களைத்
தாக்கி, முதலில் 20 பேரை கொன்றனர்.
முன்னால் வருகின்றவர்களை யோனத்
தானும், பின்னால் வருகிறவரை உதவியாள
னும் கொன்றனர்.
15வயலிலும், கோட்டையிலும், முகாமி
லும் உள்ள வீரர்கள் இவர்களைக் கண்டு
பயந்தனர்! பூமி அதிர்ந்தது. இதைக் கண்டு
மிகுந்த தைரியமுள்ள வீரர்களும் மேன்
மேலும் பயந்தனர்.
16பென்யமீன் நாட்டில் கிபியாவிலே
சவுலின் காவல்காரர்கள் பெலிஸ்தர் பல்
வேறு திசைகளில் ஓடிக்கொண்டிருப்பதைக்
கண்டனர். 17சவுல், “நம்மவர்களை எண்ணிக்
கணக்கிடுங்கள். முகாமிற்கு வெளியே யார்
போனது என்று தெரியவேண்டும்” என்
றான்.
அவர்கள் ஆட்களின் தொகையைக்
கணக்கிட்டனர், யோனத்தானும் அவனது
உதவியாளனும் காணவில்லை.
18சவுல் அகீயாவிடம், “கர்த்தருடைய
பரிசுத்தப் பெட்டியை கொண்டுவா!” என்
றான். (அப்போது கர்த்தருடைய பரிசுத்தப்
பெட்டி அவர்களோடுதான் இருந்தது.) 19சவுல்
ஆசாரியனாகிய அகீயாவிடம் பேசிக்
கொண்டே தேவனுடைய ஆலோசனைக்குக்
காத்திருந்தான். பெலிஸ்தர்களின் முகாமில்
கூச்சலும் குழப்பமும் மிகுந்தன. இதனால்
சவுல் பொறுமையை இழந்து, ஆசாரிய
னாகிய அகீயாவிடம், “இது போதும்!
உன் கைகளைத் தளர்த்தி ஜெபத்தை
நிறுத்து!” என்றான்.
20சவுல் தன் படையைச் சேர்த்துக்
கொண்டு சண்டையிடச் சென்றான். பெலிஸ்
தர்கள் குழப்பமுற்று தங்களுக்குள் வாளால்
மோதிக்கொண்டனர்! 21ஏற்கனவே சில
எபிரெயர் பெலிஸ்தியருக்கு அடிமை
வேலை செய்துகொண்டிருந்தனர்! அவர்
களும் இப்போது இஸ்ரவேல் மற்றும் சவுல்
யோனத்தானோடு சேர்ந்தனர். 22எப்பிராயீம்
மலைப் பகுதியில் ஒளிந்திருந்த இஸ்ரவேலர்
பெலிஸ்தரின் தோல்வியைக் கேள்விப்பட்டு
அவர்களும் சேர்ந்து துரத்தினார்கள்.
23எனவே, கர்த்தர் அன்று இஸ்ரவேலரை
காப்பாற்றினார். அச்சண்டை பெத்தா
வேனைக் கடந்தது. சவுலிடம் இப்போது
10,000 வீரர்களும் முழுபடையும் இருந்தனர்.
மலைநாட்டில் உள்ள அனைத்து நகரங்க
ளுக்கும் இந்தப் போர் பரவியது.

சவுல் இன்னொரு தவறு செய்கிறான்

24அன்று சவுல் ஒரு பெரிய தவறு
செய்தான். இஸ்ரவேலர் களைப்பாகவும் பசி
யோடும் இருந்தனர். அவர்களிடம்,
“மாலைக்கு முன் யாராவது உண்டாலோ,
பகைவரை வெல்லுமுன் யாராவது உண்
டாலோ தண்டிக்கப்படுவார்கள்!” என்று
ஆணையிட்டிருந்தான். எனவே யாரும்
அன்று உண்ணாமல் இருந்தனர்.
25-26சிலர் போர் செய்த வண்ணம் காட்டுப்
பகுதிக்குப் போனபோது தேன் கூடுகளைக்
கண்டும் ஆணைக்குப் பயந்து உண்ண
வில்லை. 27ஆனால் யோனத்தானுக்கு
அவற்றைப்பற்றி எந்த விஷயமும் தெரியாது.
உண்ணாமலிருக்க ஜனங்கள் நிர்ப்பந்திக்கப்
பட்டதைப்பற்றி அவன் எதுவும் அறிந்தி
ருக்கவில்லை. யோனத்தானின் கையில் ஒரு
கோல் இருந்தது. கோலின் ஒரு முனையைத்
தேன் கூட்டில் நுழைத்து வெளியே எடுத்து,
அத்தேனைப் பருகினான். பருகி முடிந்ததும்
மிகவும் தெம்பாக இருப்பதாக உணர்ந்தான்.
28ஒரு வீரன், “உமது தந்தை ஒரு சிறப்
பான ஆணைச் செய்யும்படி எல்லா
வீரர்களையும் நிர்ப்பந்தித்திருக்கிறார். யாரே
னும் ஒருவர் இன்றையதினம் உண்டால்
தண்டிக்கப்படுவதாகக் கூறியுள்ளார்! எவரும்
உண்ணவில்லை. அதனால்தான் எல்லாரும்
சோர்வாக உள்ளனர்” என்றான்.
29யோனத்தானோ, “என் தந்தை ஏராள
மான துன்பங்களை நாட்டுக்குத் தந்துள்ளார்!
கொஞ்சம் தேன் உண்டதும் எனக்கு எவ்
வளவு உற்சாகமாக இருக்கிறது என்பதை
நீயே பார்! 30பகைவரிடமிருந்து எடுத்த
உணவை உண்டிருந்தால் நாம் மேலும்
உற்சாகமாக இருந்திருக்க முடியும். நாம்
இன்னும் அதிக பெலிஸ்தர்களைக் கொன்றி
ருக்கலாம்!” என்றான்.
31அன்று இஸ்ரவேலர்கள் பெலிஸ்தர்
களைத் தோற்கடித்து, அவர்களை மிக்மாஸ்
முதல் ஆயலோன் வரை துரத்தினபடியால்
களைப்பாகவும், பசியாகவும் இருந்தனர்.
32அவர்கள் ஆடுகளையும், கன்றுகுட்டிகளை
யும் பெலிஸ்தர்களிடமிருந்து கைப்பற்றி
கொன்று தின்றனர். அம்மிருகங்களின்
இரத்தம் இன்னும் உறைந்திருந்தது!
33ஒருவன் சவுலிடம், “பாருங்கள்! ஜனங்
கள் கர்த்தருக்கு எதிராகப் பாவம்
செய்துவிட்டனர். அவர்கள் இறைச்சியை

அதில் இரத்தம் இருக்கும்போது தின்று
கொண்டிருக்கின்றனர்!" என்றான்.
சவுலோ, "நீங்கள் பாவம் செய்திருக்கிறீர்
கள்! இப்போது இங்கே பெரிய கல்லை
உருட்டிக் கொண்டு வாருங்கள்" என்றான்.
34மேலும், "ஜனங்களிடம் போங்கள், இரத்தத்
தோடு இருப்பதைச் சாப்பிடுவதால் கர்த்த
ருக்கு எதிராகப் பாவம் செய்து விட்டீர்கள்.
தங்கள் மாட்டையும் ஆட்டையும் என்
முன் கொண்டுவர வேண்டும் எனச்
சொல்லுங்கள். இங்குதான் அவர்கள் ஆடு
களையும், மாடுகளையும் கொல்ல வேண்டும்.
கர்த்தருக்கு எதிராகப் பாவம் செய்ய
வேண்டாம். இரத்தம் உறைந்திருக்கிற
இறைச்சியை உண்ண வேண்டாம்" என்
றான்.

அன்று இரவு ஒவ்வொருவனும் தங்கள்
மிருகங்களைக் கொண்டுவந்து அங்கே
கொன்றனர். 35பின் சவுல் அங்கே கர்த்தருக்
காக பலிபீடம் கட்டினான். சவுல் தானாகவே
கர்த்தருக்காக அப்பலிபீடத்தைக் கட்டத்
தொடங்கினான்!

36சவுல், "இன்று இரவு பெலிஸ்தர்களுக்கும்
பின்னால் போய் அவர்களைக் கொன்று
அவர்களுடையதை எடுத்து வருவோம்!"
என்று சொன்னான்.

படையினர், "உங்களுக்குச் சரி என்று
படுவதைச் செய்யுங்கள்" என்று சொன்
னார்கள்.

ஆனால் ஆசாரியனோ, "தேவனைக் கேட்
போம்" என்றான்.

37எனவே சவுல் தேவனிடம், "பெலிஸ்தர்
களைத் துரத்திப் போகலாமா? அவர்களைத்
தோற்கடிக்கவிடுவீரா?" என்று கேட்டான்.
ஆனால் தேவன் அன்று சவுலுக்கு பதில்
சொல்லவில்லை.

38எனவே, "எல்லாத் தலைவர்களையும்
கூப்பிடுங்கள்! இன்று பாவம் செய்தது
யாரெனப் பார்ப்போம். 39நான் இஸ்ரவேலை
காக்கும் கர்த்தருடைய பேரில் சத்தியம்
செய்திருக்கிறேன், என் மகனே பாவம்
செய்தாலும் சாகடிக்கப்படுவான்" என்றான்.
யாரும் பதில் சொல்லவில்லை.

40பின்பு அவன், "நீங்கள் அந்தப்பக்கம்
நில்லுங்கள். நானும் என் மகனும்
இந்தப்பக்கம் நிற்போம்" என்றான்.

வீரர்களும், "உங்கள் விருப்பம் ஐயா!"
என்றனர்.

41அப்பொழுது சவுல், "இஸ்ரவேலரின்
தேவனாகிய கர்த்தாவே, உமது தொண்ட
னுக்கு இன்று ஏன் பதில் சொல்லவில்லை?
நானோ அல்லது என் மகனோ பாவம்
செய்திருந்தால், ஊரீம்மைத் தாரும். உம்
முடைய இஸ்ரவேல் ஜனங்கள் பாவம்
செய்திருந்தால் தும்மீம்மைத் தாரும்" என்று
ஜெபித்தான்.

சவுலும் யோனத்தானும் தேர்ந்தெடுக்கப்
பட்டனர். ஜனங்கள் தப்பினார்கள். 42சவுல்
"மீண்டும் சீட்டைப்போட்டு, பாவி நானா
என் மகனா" என்று கேட்டான். யோனத்
தான் மேல் சீட்டு விழுந்தது.
43சவுல் மகனிடம், "சொல் என்ன பாவம்
செய்தாய்?" என்று கேட்டான்.

அதற்கு யோனத்தான், "நான் என்
கோலின் நுனியில் இருந்த கொஞ்சம் தேனை
சுவைத்தேன். அதற்காக நான் மரிக்க
வேண்டுமா?" என்று கேட்டான்.

44ஆனால் சவுல், "என் சத்தியத்தை
நான் காப்பாற்றாவிட்டால் தேவன் என்
னைத் தண்டிப்பார்! நீ மரிக்கத்தான்
வேண்டும்" என்றான்.

45ஆனால் வீரர்களோ, "இன்று யோனத்
தான் இஸ்ரவேலருக்குப் பெரிய வெற்றியைத்
தந்தான். அவன் மரிக்கக்கூடாது! ஜீவனுள்ள
தேவனுடைய நாமத்தில் நாங்களும் சத்தியம்
செய்கிறோம். யோனத்தானின் தலையி
லிருந்து யாரும் ஒரு மயிரையேனும் அகற்ற
முடியாது! தேவன் இன்று அவனுக்குப்
பெலிஸ்தர்களை வெல்ல உதவினார்!"
என்றனர். எனவே யோனத்தானை ஜனங்கள்
காப்பாற்றினார்கள். அவன் கொல்லப்பட
வில்லை.

46சவுல் பெலிஸ்தர்களைத் துரத்தாததால்
அவர்கள் தங்கள் சொந்த இடங்களுக்குப்
போனார்கள்.

சவுல் இஸ்ரவேலரின் பகைவரோடு போரிடுகிறான்

47சவுல் இஸ்ரவேலர்களை முழுமையாகக்
கட்டுப்படுத்தி அவர்களின் அரசனானான்.
மோவாப், அம்மோனியர், ஏதோம் எனும்
சோபா அரசன், பெலிஸ்தர்களை சவுல்
வென்றான். சவுல் எங்கெல்லாம் சென்
றானோ அங்கெல்லாம் இஸ்ரவேலரின்
பகைவர்களையெல்லாம் வென்றான். 48சவுல்
மிகத்தைரியமானவன். இஸ்ரவேலை கைப்
பற்ற முயன்ற அனைத்து பகைவரையும்
வென்றான். மேலும் அமலேக்கியரையும்
தோற்கடித்தான்!

49யோனத்தான், இஸ்வி, மல்கிசூவா ஆகி
யோர் சவுலின் மகன்கள். மூத்தமகள் மேராப்,
இளையவள் மீகாள். 50சவுலின் மனைவி
பெயர் அகினோவாம். அவள் அகிமாசின்
மகள்.

அவனது தளபதியின் பெயர் அப்னேர்,
இவன் சவுலின் சித்தப்பா நேரின் மகன்.
51கீஸ் சவுலின் தந்தை. அப்னேரின் தந்தை
யான நேர் ஆபியேலின் மகன்.

52சவுல் தன் ஆயுள் முழுவதும் பெலிஸ்த
ரோடு போரிட்டான். தைரியமும் வீரமும்
உள்ள யாரைப் பார்த்தாலும் அவனை
அழைத்து வீரர்களின் சேனையில் சேர்த்து
விடுவான். அவர்கள் அரசனுக்கு அருகாமை
யில் இருந்து அரசனை காப்பாற்றுவர்.

சவுல் அமலேக்கியரை அழித்துப் போடுகிறான்

15 ஒருநாள் சாமுவேல், சவுலிடம்,
“உன்னை அபிஷேகித்து அவருடைய
ஜனங்கள் இஸ்ரவேலருக்கு அரசனாக்கும்படி
கர்த்தர் என்னை அனுப்பினார். இப்போது
கர்த்தருடைய செய்தியைக் கேள். 2 சர்வ
வல்லமையுள்ள கர்த்தர், ‘இஸ்ரவேலர்கள்
எகிப்தை விட்டு வரும்போது கானானுக்குப்
போகாமல் அமலேக்கியர்கள் தடுத்தனர்.
அவர்கள் செய்தவற்றை நான் பார்த்தேன்.
3 இப்போது அவர்களோடு போரிடு, அவர்
களையும் அவர்கள் உடமையையும் முழு
வதுமாக அழி, எதையும் உயிரோடு
விடாதே; ஆண்கள், பெண்கள், சிறுவர்கள்,
கைக்குழந்தைகள், பசுக்கள், ஆடுகள்,
ஒட்டகங்கள், கழுதைகள் எதையும் விடாதே’
என்கிறார்” என்றான்.
4 சவுல் தன் படையை தெலாயிமில்
கூட்டினான். 2,00,000 காலாட்படையும் யூதா
விலுள்ள 10,000 சேனையாட்களும் இருந்த
னர். 5 பிறகு சவுல் அமலேக்கு நகருக்குப்
போய் பள்ளத்தாக்கில் காத்திருந்தான்.
6 அங்கு கேனியரிடம், “அமலேக்கியரை
விட்டுப்போங்கள். நான் உங்களை அழிக்க
மாட்டேன். இஸ்ரவேலர் எகிப்திலிருந்து
வெளியேறும்போது நீங்கள் கருணை
காட்டினீர்கள்” என்றான். எனவே கேனியர்
அமலேக்கியரை விட்டு வெளியேறினார்கள்.
7 சவுல் அமலேக்கியரைத் தோற்கடித்தான்.
அவர்களை, ஆவிலாவில் இருந்து சூர்வரை
துரத்தியடித்தான். 8 ஆகாக் அமலேக்கியரின்
அரசன். சவுல், அவனை உயிருடன் பிடித்
தான். மற்றவர்களைக் கொன்றான். 9 எல்லா
வற்றையும் அழிக்க சவுலும் வீரர்களும்
தயங்கினார்கள். ஆகாக் என்பவனை
உயிருடன் விட்டனர். மேலும் கொழுத்த
பசுக்களையும் நல்ல ஆடுகளையும் சிறந்த
பொருட்களையும் கூட அழிக்காமல் விட்டு
விட்டனர். பயனுள்ள எல்லாவற்றையும்
வைத்துக் கொண்டனர். அவற்றை அழிக்க
அவர்கள் விரும்பவில்லை. பயனற்ற
வற்றையே அவர்கள் அழித்தார்கள்.

சவுலின் பாவத்தைப்பற்றி சாமுவேல் சொன்னது

10 பிறகு சாமுவேல், கர்த்தரிடமிருந்து ஒரு
செய்தியைப் பெற்றான். 11 அதற்கு கர்த்தர்,
“சவுல் என்னைப் பின்பற்றுவதை விட்டு
விட்டான், அவனை அரசனாக்கியதற்காக
வருந்துகிறேன். நான் சொல்வதை அவன்
செய்வதில்லை” என்றார். சாமுவேலும்
கோபங்கொண்டு இரவு முழுவதும் அழுது
கர்த்தரை நினைத்து ஜெபம் செய்தான்.
12 சாமுவேல் அடுத்தநாள் அதிகாலையில்
எழுந்து சவுலைச் சந்திக்கச் சென்றான்.
ஆனால் ஜனங்கள் அவனிடம், “கர்மேல்
என்ற பேருள்ள யூதேயாவின் நகருக்கு
சவுல் போயிருக்கிறான். அங்கே தன்னை
பெருமைப்படுத்தும் நினைவு கல்லை
எழுப்புகிறான். அவன் பல இடங்களை
சுற்றிவிட்டு கில்காலுக்கு வருவான்”
என்றனர்.

எனவே சாமுவேல் அவனிருக்கும் இடத்
துக்கே சென்று சவுலைத் தேடிப்பிடித்தான்.
சவுல் அப்போதுதான் கர்த்தருக்கு அமலேக்கி
யரிடம் இருந்து எடுத்த முதல் பாகங்களை
தகனபலி செலுத்திக்கொண்டிருந்தான்.
13 சவுல் சாமுவேலை வரவேற்றான், “கர்த்தர்
உம்மை ஆசீர்வதிக்கிறார்! கர்த்தருடைய
கட்டளைகளை நிறைவேற்றினேன்” என்
றான்.
14 ஆனால் சாமுவேலோ, “அப்படியானால்
நான் கேட்ட சத்தம் எத்தகையது? ஆடுகளின்
சத்தத்தையும், மாடுகளின் சத்தத்தையும் நான்
எதற்காகக் கேட்டேன்?” என்று கேட்டான்.
15 அதற்கு சவுல், “இவை அமலேக்கியரிட
மிருந்து வீரர்கள் எடுத்தவை. உமது தேவ
னாகிய கர்த்தருக்கு பலியிடும் பொருட்டு
சிறந்த ஆடுகளையும், மாடுகளையும் பிடித்து
வந்தனர். மற்றபடி நாங்கள் அனைத்தையும்
அழித்துவிட்டோம்” என்றான்.
16 சாமுவேலோ, “நிறுத்து! நேற்று இரவு
கர்த்தர் சொன்னதை நான் சொல்லட்டுமா”
எனச் சவுலிடம் கேட்டான்.

சவுல், “நல்லது சொல்லுங்கள்” என்றான்.
17 சாமுவேல், “முக்கியமானவன் இல்லை
என்று கடந்த காலத்தில் நீ உன்னை
நினைத்திருந்தாய். பின்பு இஸ்ரவேல் ஜனங்
களின் தலைவன் ஆனாய். கர்த்தர் உன்னை
அரசனாக்கினார். 18 கர்த்தர் உன்னை
சிறப்பான கடமை நிறைவேற்ற அனுப்பி
னார். கர்த்தர் சொன்னார், ‘போய் அமலேக்
கியரை முழுமையாக அழி! அவர்கள்
தீயவர்கள். எல்லோரும் கொல்லப்படும்வரை
போரிடு!’ என்றார். 19 ஆனால் நீ கர்த்தருக்கு
கீழ்ப்படியவில்லை! ஏன்? தீயவை என்று
கர்த்தர் எதை ஒதுக்கினாரோ அவற்றைச்
சேகரித்துக்கொள்ள நீ விரும்பிவிட்டாய்!”
என்றான்.
20 சவுலோ, “கர்த்தருக்கு நான் கீழ்படிந்
தேன். அவர் சொன்ன இடத்திற்குப்
போனேன். அமலேக்கியரை எல்லாம் அழித்
தேன்! அவர்களின் அரசன் ஆகாக்கை
மட்டுமே கொண்டு வந்தேன். 21 வீரர்கள்
நல்ல ஆட்டையும், மாட்டையும் கொண்டு
வந்தனர். அவை கில்காலில் உள்ள உமது
தேவனாகிய கர்த்தருக்கு பலியிட காத்தி
ருக்கின்றன!” என்றான்.
22 ஆனால் சாமுவேல், “கர்த்தருக்குப் பிடித்
தமானது எது? தகனபலியா? அன்பளிப்பா?
அல்லது கர்த்தருடைய கட்டளைக்குக்
கீழ்ப்படிவதா? கர்த்தருக்குக் கீழ்ப்படிவது
தான் அனைத்திலும் சிறந்தது. 23 கீழ்ப்படிய
மறுப்பது தவறு. அது பில்லிசூனியத்திற்கு
இணையான பெரும் பாவம். நீ கீழ்ப்படிய

மறுப்பது பிடிவாதமாக பிற விக்கிரகங்களை
தொழுதுக்கொள்வதற்கு சமம் ஆகும். நீ
கர்த்தருக்குக் கீழ்ப்படிய மறுத்தாய். அதனால்
கர்த்தர் உன்னை அரசனாக ஏற்றுக்கொள்ள
மறுக்கிறார்” என்றான்.
24அதற்கு சவுல், “நான் பாவம்
செய்துவிட்டேன். நான் கர்த்தருடைய
கட்டளைக்குக் கீழ்ப்படியவில்லை, நீர்
சொன்னதையும் செய்யவில்லை. ஜனங்
களுக்கு பயந்தேன், அவர்கள் சொன்னபடி
செய்தேன். 25இப்போது கெஞ்சுகிறேன், என்
பாவத்தை மன்னியுங்கள். என்னுடன் மீண்
டும் வாருங்கள் எனவே கர்த்தரை நான்
தொழுதுகொள்வேன்” என்றான்.
26ஆனால் சாமுவேலோ, “நான் உன்
னோடு வரமாட்டேன். நீ கர்த்தருடைய
கட்டளையை ஒதுக்கி விட்டாய், இப்போது
கர்த்தர் உன்னை அரசனாக ஏற்றுக்கொள்ள
மறுக்கிறார்” என்றான்.
27சாமுவேல் திரும்பியபோது சவுல்
அவரது சால்வை நுனியைப் பிடித்தான்,
அது கிழிந்தது. 28சாமுவேலோ, “என் சால்
வையைக் கிழித்துவிட்டாய். இதுபோல
இன்று கர்த்தர் உன்னிடமிருந்து இஸ்ர
வேலின் இராஜ்யத்தைக் கிழிப்பார். உன்
நண்பன் ஒருவனுக்கு கர்த்தர் அரசைக்
கொடுப்பார். அவன் உன்னைவிட நல்லவ
னாக இருப்பான். 29கர்த்தரே இஸ்ரவேலரின்
தேவன், கர்த்தர் என்றென்றும் ஜீவிப்பவர்.
கர்த்தர் பொய் சொல்லவோ மனதை
மாற்றவோ மாட்டார். அவர் மனிதனைப்
போன்று மனதை மாற்றுபவர் அல்ல”
என்றான்.
30சவுலோ, “சரி நான் பாவம் செய்தேன்!
எனினும் என்னுடன் திரும்பி வாருங்கள்.
இஸ்ரவேலின் தலைவர்கள் மற்றும் ஜனங்
களின் முன்னால் எனக்கு மரியாதைக்
காட்டுங்கள். என்னுடன் திரும்பி வாருங்கள்.
உங்கள் தேவனாகிய கர்த்தரை நான்
தொழுதுகொள்வேன்” என்றான். 31சாமு
வேல் சவுலோடு திரும்பிப் போனான்,
சவுல் கர்த்தரை தொழுதுகொண்டான்.
32“அமலேக்கியரின் அரசனான ஆகாகை
என்னிடம் கொண்டு வா” என்றான்
சாமுவேல்.

ஆகாக் சாமுவேலிடம் வந்தான். அவன்
சங்கிலியால் கட்டப்பட்டிருந்தான். “நிச்சயம்
நம்மை இவர் கொல்லமாட்டார்” என்று
ஆகாக் எண்ணினான்.
33ஆனால் சாமுவேலோ, “உனது வாள்
குழந்தைகளை தாயிடமிருந்து எடுத்துக்
கொண்டது. எனவே இப்போது உன்
தாய் பிள்ளையற்றவள் ஆவாள்” எனக்கூறி
அவன் ஆகாகை கில்காலில் கர்த்தருக்கு
முன்பாக துண்டுகளாக வெட்டிப் போட்
டான்.
34பிறகு சாமுவேல் ராமாவிற்குத்
திரும்பிப் போனான். சவுல் கிபியாவிலுள்ள
தன் வீட்டிற்குப் போனான். 35இதற்குப் பின்
சாமுவேல் தன் வாழ்நாளில் சவுலைப்
பார்க்கவில்லை. சவுலுக்காக வருத்தப்
பட்டான். சவுலை அரசனாக்கியதற்குக்
கர்த்தரும் வருத்தப்பட்டார்.

சாமுவேல் பெத்லேகேம் போகிறான்

16 கர்த்தர் சாமுவேலிடம், “நீ எவ்வளவு
காலம் சவுலுக்காக வருந்துவாய்?
நான் அரச பதவியிலிருந்து புறக்கணித்த
பின்னும் வருந்துகிறாயே, உனது கொம்பை
எண்ணையால் நிரப்பு. பெத்லேகேமிற்குச்
செல். உன்னை ஈசாயினிடம் அனுப்புகி
றேன். அவன் அங்கே இருக்கிறான். அவனது
மகன்களில் ஒருவனே புதிய அரசனாக நான்
தெரிந்தெடுத்திருக்கிறேன்” என்றார்.
2சாமுவேலோ, “நான் போனால், அதனை
சவுல் அறிவான். என்னைக் கொல்ல முயல்
வான்” என்றான்.

கர்த்தர், “பெத்லேகேமிற்கு ஒரு இளம்
கன்றுக்குட்டியை எடுத்துக்கொண்டு போ,
‘கர்த்தருக்கு பலி கொடுக்க வந்திருக்கிறேன்’
என்று சொல். 3ஈசாயையும் பலிக்கு அழைத்
தனுப்பு. பிறகு செய்ய வேண்டியது என்ன
என்பதைக் காட்டுவேன். நான் காட்டு
கிறவனை அரசனாக அபிஷேகம் செய்”
என்றார்.
4சாமுவேல் கர்த்தர் சொன்னபடி செய்
தான். சாமுவேல் பெத்லேகேம் சென்றதும்
அங்குள்ள மூப்பர்கள் நடுங்கினார்கள். அவர்
கள் சாமுவேலைச் சந்தித்து, “சமாதானத்
தோடு வந்துள்ளீரா?” என்று கேட்டனர்.
5அதற்கு சாமுவேல், “ஆமாம், நான்
சமாதானத்தோடு வருகிறேன். நான்
கர்த்தருக்கு பலிகொடுக்க வந்துள்ளேன். உங்
களை ஆயத்தப் படுத்திக்கொண்டு, என்
னோடு பலி செலுத்த வாருங்கள்” என்றான்.
சாமுவேல் ஈசாயையும் அவனது மகன்
களையும் ஆயத்தம் செய்துப் பலியில்
பங்குகொள்ள அழைத்தான்.
6அவர்கள் சாமுவேலிடம் வந்து சேர்ந்த
தும் எலியாபைப் பார்த்தான். சாமுவேல்,
“நிச்சயமாக இவன் தான் கர்த்தரால் தேர்ந்
தெடுக்கப்பட்டவன்!” என எண்ணினான்.
7ஆனால் கர்த்தர் சாமுவேலிடம், “எலி
யாப் உயரமானவன், அழகானவன். ஆனால்
அப்படி சிந்திக்க வேண்டாம். ஜனங்கள்
பார்க்கிறபடி தேவன் கவனிக்கிறதில்லை.
ஜனங்கள் ஒருவனை வெளித்தோற்றத்தைப்
பார்க்கிறார்கள், கர்த்தரோ அவன் இருதயத்
தைப் பார்க்கிறார். எலியாப் சரியானவன்
அல்ல” என்றார்.
8பிறகு ஈசாய் இரண்டாவது மகனான,
அபினதாபை அழைத்தான். அவன் சாமுவே
லினருகில் நடந்து வந்தபோது சாமுவேல்
பார்த்து, “இல்லை, கர்த்தர் இவனைத்
தேர்ந்தெடுக்கவில்லை” எனக் கூறினான்.

9 பிறகு ஈசாய் இன்னொரு மகனான
சம்மாவை அழைத்தான். அவனைப் பார்த்து,
“கர்த்தர் இவனையும் தேர்ந்தெடுக்கவில்லை”
என்றான்.
10 ஈசாய் 7 மகன்களையும் காட்டினான்.
சாமுவேல் ஈசாயிடம், “இவர்களில் யாரை
யும் கர்த்தர் தேர்ந்தெடுக்கவில்லை” என்
றான்.
11 சாமுவேல், “உன் பிள்ளைகள் இத்
தனைப் பேர்தானா?” எனக் கேட்டான்.

அதற்கு ஈசாய், “இல்லை, கடைசி மகன்
ஆடு மேய்க்கப்போயிருக்கிறான்” என்றான்.

சாமுவேலோ, “அவனை அழைத்து வா.
அவன் வரும்வரை நாம் சாப்பிடக்கூடாது”
என்றான்.
12 ஈசாய் ஒருவனை அனுப்பி தன் இளைய
மகனை அழைப்பித்தான். இந்த மகன் அழ
காய் சிவந்த மயிரோடு* நல்ல சௌந்தரிய
தோற்றமுடையவனாக இருந்தான்.

கர்த்தர் சாமுவேலிடம், “எழுந்து
அவனை அபிஷேகம் செய், இவன்தான்”
என்றார்.
13 சாமுவேல் எண்ணெய் நிரப்பிய
கொம்பை எடுத்து, சிறப்பு எண்ணெயை
ஈசாயின் கடைசி மகன்மேல் அவனுடைய
சகோதரரின் முன்னிலையில் ஊற்றினான்.
கர்த்தருடைய ஆவியானவர் அன்று முதல்
தாவீது மீது பெரும் வல்லமையோடு வந்தார்.
சாமுவேல் ராமாவிலுள்ள தன் வீட்டிற்குத்
திரும்பினான்.

சவுலை ஒரு கெட்ட ஆவி துன்புறுத்துகிறது

14 கர்த்தருடைய ஆவியானவர் சவுலை
விட்டு விலகினார், கர்த்தர் ஒரு கெட்ட
ஆவியை சவுலுக்கு அனுப்பினார். அது
மிகத் தொல்லை கொடுத்தது. 15 சவுலின்
வேலைக்காரர்களோ, “தேவனிடமிருந்து
கெட்ட ஆவி ஒன்று உங்களைத் தொந்தரவு
செய்கிறது. 16 ஆணையிடுங்கள், நாங்கள்
சுரமண்டலம் வாசிக்கும் ஒருவனைத் தேடிப்
பிடிப்போம். ஒரு வேளை கர்த்தரிடமிருந்து
கெட்ட ஆவி உங்கள் மீது வருமானால்,
உமக்காக அவன் இசை மீட்டுவான். அப்
போது நீங்கள் நலம் பெறுவீர்கள்” என்றனர்.
17 எனவே சவுல், “நன்றாக இசை
மீட்டுபவனைக் கண்டுபிடித்து அழைத்து
வாருங்கள்” என்றான். 18 ஒரு வேலையாள்,
“ஈசாய் என்று ஒருவன் பெத்லேகேமில்
இருக்கிறான். அவனது மகனுக்கு நன்றாக
சுரமண்டலம் வாசிக்கத் தெரியும். தைரி
யமாக நன்றாக சண்டை இடுவான். அழகான
வனும் சுறுசுறுப்பானவனும் கூட, மேலும்
கர்த்தர் அவனுடன் இருக்கிறார்” என்றான்.
19 எனவே சவுலின் ஆட்கள் ஈசாயிடம்
சென்றனர். அவர்கள் ஈசாயிடம், “ஆட்டைக்
காக்கிற உன் மகன் தாவீதை என்னிடம்
அனுப்புங்கள்” என்று சொன்னார்கள்.
20 எனவே ஈசாய் சில அன்பளிப்புகளாக
கழுதை, அப்பம், திராட்சைரசம், இளம்
வெள்ளாட்டுக்குட்டி ஆகியவற்றை தாவீ
துக்குக் கொடுத்து சவுலிடம் அனுப்பினான்.
21 தாவீது சவுல் முன்பு போய் நின்றான்.
சவுலுக்கு தாவீதை மிகவும் பிடித்தது.
அவன் சவுலின் ஆயுதங்களைச் சுமக்கும்
உதவியாளனானான். 22 அவன் ஈசாய்க்கு,
“நான் தாவீதை மிகவும் விரும்புகிறேன்.
அவன் என்னோடு இருந்து எனக்குச்
சேவை புரியட்டும்” என்ற செய்தி சொல்லி
அனுப்பினான்.
23 எப்பொழுதாவது தேவனிடத்திலிருந்து
சவுல் மேல் கெட்ட ஆவி வந்தால்,
தாவீது தன் சுரமண்டலத்தை மீட்டுவான்.
அப்போது அந்த கெட்ட ஆவி சவுலை
விட்டு போய்விடும், சவுலும் நலம் பெறு
வான்.

இஸ்ரவேலருக்கு கோலியாத்தின் சவால்

17 பெலிஸ்தர் போரிடும் பொருட்டு
படையாட்களைக் கூட்டினார்கள்.
அவர்கள் யூதாவிலுள்ள சோக்கோவில் கூடி
னார்கள். அவர்கள் கூடிய எபேஸ்தம்மீம்
எனும் இடம் சோக்கோவுக்கும் அசெக்கா
வுக்கும் இடையில் இருந்தது.
2 சவுலும் இஸ்ரவேல் வீரர்களும் ஒன்று
கூடினார்கள். இவர்களின் முகாம் ஏலாவி
லிருந்தது. வீரர்கள் சண்டையிடத் தயாராக
இருந்தனர். 3 பெலிஸ்தியர் மலையின்மேல்
இருந்தனர். அடுத்த மலையில் இஸ்ரவேலர்
இருந்தனர். இடையில் பள்ளத்தாக்கு இருந்
தது.
4 பெலிஸ்தியரிடம் கோலியாத் என்னும்
வீரன் இருந்தான். அவன் காத் என்னும்
ஊரினன், 9 அடி உயரமாக* இருந்தான்.
5 ஒரு வெண்கல கிரீடமும், போர்க்கவசமும்
தரித்திருந்தான். அது 5,000 சேக்கல் வெண்
கலம் எடையுள்ளதாயிருந்தது. 6 அவன்
கால்களில் வெண்கல கவசத்தையும், தோள்
களில் வெண்கல கேடகத்தையும் அணிந்
திருந்தான். 7 அவனது ஈட்டியின் பிடி
நெசவுக்காரரின் படைமரம் போல் இருக்கும்.
ஈட்டியின் அலகு 600 சேக்கல் இரும்பு
எடையுள்ளதாக இருந்தது. கோலியாத்தின்
கேடயம் சுமந்த வீரன், அவனுக்கு முன்னால்
நடப்பான்.

சிவந்த மயிர் சிவந்த மேனியோடு, என்று பொருள். எபிரெய மொழியில் ‘சிவந்தவன்’ என்பதாகும்.

9 அடி உயரம் 6 முழம் 1 ஜாணளவாகும். எனினும் ஜோசப்பஸின் கிரேக்க ஏட்டின் படியும் கும்ரானின் ஒரு எபிரெய மொழி பெயர்ப்பின்படியும் அவன் 4 முழம் 1 ஜாண் உயரமாக இருந்தான், அதாவது 6 அடி 9 அங்குல உயரம்.

8தினந்தோறும் அவன் வெளியே வந்து
இஸ்ரவேலரைப் பார்த்து, சத்தமாக சண்
டைக்கு சவால் விடுவான். அவன், “உங்க
ளுடைய எல்லா வீரர்களும் போருக்குத்
தயாராக ஏன் அணிவகுத்து நிற்கிறீர்கள்?
நீங்கள் அனைவரும் சவுலின் வேலைக்
காரர்கள். நான் பெலிஸ்தன். யாரேனும்
ஒருவனைத் தேர்ந்தெடுத்து என்னோடு
சண்டையிட அனுப்புங்கள். 9அவன் என்
னைக் கொன்றுவிட்டால் நாங்கள் (பெலிஸ்
தர்) அனைவரும் உங்களது அடிமை. நான்
அவனைக் கொன்று விட்டால் நீங்கள்
எங்கள் அடிமை! நீங்கள் எங்களுக்குச்
சேவை செய்யவேண்டும்” என்றான்.
10மேலும் அவன், “நான் இன்று இஸ்ர
வேல் சேனையை கேலிச்செய்தேன்! உங்க
ளில் ஒருவனுக்குத் தைரியமிருந்தால் என்
னிடம் அனுப்பி சண்டையிட்டுப் பாருங்
கள்!” என்றான்.
11சவுலும் அவனது வீரர்களும் கோலியாத்
சொன்னதைக் கேட்டு மிகவும் நடுங்கி
னார்கள்.

தாவீது போர் முனைக்குச் செல்கிறான்

12தாவீது ஈசாயின் மகன், யூதாவிலுள்ள
பெத்லேகேமில் எப்பிராத்தா குடும்பத்தைச்
சேர்ந்தவன். ஈசாயிக்கு 8 மகன்கள். சவுலின்
காலத்தில் ஈசாய் முதிர்வயதாக இருந்தான்.
13ஈசாயின் 3 பெரிய மகன்கள் சவுலுடன்
போருக்குச் சென்றிருந்தனர். எலியாப் முதல்
மகன். அபினதாப் இரண்டாவது மகன்.
சம்மா மூன்றாவது மகன். 14தாவீது கடைசி
மகன். பெரிய மூன்று மகன்களும் சவுலின்
படையில் இருந்தனர். 15தாவீது சவுலை
விட்டு விலகி அவ்வப்போது பெத்லேகேமில்
தன் தந்தையின் ஆடுகளைக் மேய்க்கப்
போவான்.
16கோலியாத் தினமும் காலையில் வந்து
இவ்வாறு 40 நாட்கள் இஸ்ரவேல் சேனை
யைக் கேலிச் செய்தான்.
17ஒருநாள் ஈசாய் தாவீதிடம், “கூடையில்
வறுத்த பயிரையும், 10 அப்பங்களையும்
கொண்டு போய் முகாமில் உள்ள உன்
சகோதரர்களுக்குக் கொடு. 18இந்த 10
பாலாடைக் கட்டிகளையும் உன் சகோதரர்
குழுவின் 1,000 வீரருக்கு அதிபதியினிடம்
கொடு. உன் சகோதரர்கள் எப்படி இருக்கி
றார்கள் என்றும் பார். அவர்கள் நலமுடன்
இருக்கிறார்கள் என்பதற்கு அடையாளமாக
ஏதேனும் வாங்கி வா! 19ஏலா பள்ளத்தாக்கில்
உன் சகோதரர்கள் சவுலின் சேனையில்
பெலிஸ்தருக்கு எதிராகச் சண்டையிட்டுக்
கொண்டிருக்கின்றனர்” என்றான்.
20அதிகாலையில் தாவீது வேறு ஒரு
மேய்ப்பவனிடம் ஆடுகளை ஒப்படைத்தான்.
தாவீது உணவை எடுத்துக்கொண்டு ஈசாய்
சொன்னபடி புறப்பட்டான். தாவீது தனது
வண்டியை முகாமுக்குச் செலுத்தினான்.
தாவீது வந்து சேர்ந்தபோது வீரர்கள் தங்கள்
போர்புரியும் நிலைக்குச் சென்று கொண்டி
ருந்தனர். வீரர்கள் தங்கள் போர் முழக்கங்
களை எழுப்பத் துவங்கினார்கள். 21இஸ்ர
வேலரும் பெலிஸ்தியரும் அணிவகுத்து
போருக்குத் தயாரானார்கள்.
22தாவீது தான் கொண்டு போனதை,
பொருட்களின் காப்பாளனிடம் கொடுத்தான்.
பின் இஸ்ரவேல் வீரர்களின் அணிக்கு
ஓடி, தன் சகோதரர்களைக் குறித்து விசாரித்
தான். 23தன் சகோதரர்களோடு பேச ஆரம்பித்
தான்.
அப்போது, கோலியாத் பெலிஸ்தர் முகா
மிலிருந்து வெளியே வந்து, வழக்கம்போல
கேலிச் செய்தான். அவன் சொன்னதை
யெல்லாம் தாவீது கேட்டான். 24அவனைக்
கண்டு இஸ்ரவேலர் பயந்து ஓடிப்
போனார்கள். அவர்களுக்கு அவன் மீது
பெரிய பயமிருந்தது.
25இஸ்ரவேலர், “கோலியாத் வெளியில்
வந்து இஸ்ரவேலரை மீண்டும் மீண்டும்
கேலிக்குள்ளாக்குகினதைப் பார்த்தீர்களா!
அவனை யார் கொன்றாலும் சவுல் அரசன்
அவனுக்கு நிறையப் பணம் கொடுத்து,
தனது மகளை அவனுக்கு மணம் செய்து
கொடுப்பான். சவுல் அவனது குடும்பத்திற்கு
இஸ்ரவேலின் மத்தியில் சுதந்திரம் அளிப்
பான்” என்றார்கள்.
26தாவீதோ அவர்களிடம், “அவன் என்ன
சொல்லுவது? அவனைக் கொன்று இஸ்ர
வேலில் இருந்து அவமானத்தை களைபவ
னுக்கு விருது என்ன வேண்டிகிடக்கிறது?
இஸ்ரவேலர் இந்த நிந்தையைச் சுமக்க
வேண்டுமா? இத்தனைக்கும் யார் இந்த
கோலியாத்? இவன் யாரோ அந்நியன்.*
சாதாரண பெலிஸ்தியன். ஜீவனுள்ள தேவனு
டைய சேனைக்கு எதிராகப் பேச அவன்
எப்படி நினைக்கலாம்?” என்று கேட்டான்.
27அதற்கு இஸ்ரவேலன், கோலியாத்தைக்
கொன்றால் கிடைக்கும் மேன்மையைப் பற்றி
சொன்னான். 28தாவீதின் மூத்த அண்ணனான
எலியாப் தனது தம்பி, வீரர்களிடம்
சொன்னதைக் கேட்டு கோபத்தோடு, “இங்கு
ஏன் வந்தாய்? ஆடுகளைக் காட்டில் யாரிடம்
விட்டு வந்தாய்? நீ எதற்காக இங்கு
வந்தாய் என்று எனக்குத் தெரியும்! உனக்கு
சொல்லப்பட்டதைச் செய்ய உனக்கு
விருப்பம் இல்லை. யுத்தத்தை வேடிக்கை
பார்க்கவே நீ இங்கு வந்தாய்!” என்றான்.
29அதற்கு தாவீது, “நான் இப்போது
என்ன செய்துவிட்டேன்? நான் ஒரு தவறும்
செய்யவில்லை! வெறுமனே பேசிக்
கொண்டிருந்தேன்” என்றான். 30தாவீது
வேறு சிலரிடம் அதே கேள்விகளைத்

அந்நியன் இஸ்ரவேலரின் முறைப்படி விருத்த சேதனம் (ஆண்டவரும் இஸ்ரவேலரும் செய்து கொள்ளும் உடன்படிக்கையின் முறை) செய்யாதவன்.

திரும்ப கேட்டான். அவர்களும் அதே பதில்
சொன்னார்கள்.
31தாவீது சொல்வதைச் சிலர் கேட்டு
அவனைச் சவுலிடம் அழைத்துச் சென்
றார்கள். 32தாவீது சவுலிடம், “கோலியாத்
துக்காக யாரும் நடுங்க வேண்டாம். நான்
உங்கள் சேவகன். நான் போய் அவனோடு
போரிடுகிறேன்!” என்றான்.
33“உன்னால் வெளியே போய் அந்த
பெலிஸ்தியனாகிய கோலியாத்துடன் சண்
டைபோட முடியாது. நீ ஒரு படை வீரன்
அல்ல! அவனோ சிறுவயது முதல்
போரிட்டு வருகிறான்” என்றான்.
34ஆனால் தாவீது சவுலிடம், “நான்
ஒரு இடையன், ஆடுகளை மேய்த்து வருப
வன். இரு தடவை ஒரு சிங்கமும்,
மற்றொருதடவை கரடியும் ஆடுகளைத்
தூக்கியபோது, 35அவற்றைக் கொன்று
அவற்றின் வாயிலிருந்து ஆட்டை மீட்டேன்.
அவை என்மேல் பாய்ந்தன. எனினும்
அவற்றின் வாயின் அடிப்பகுதியைப்
பிடித்து கிழித்துக் கொன்றேன். 36சிங்கத்தை
யும் கரடியையும் கொன்ற என்னால், இந்த
அந்நியனையும் விலங்குகளைப்போல்
கொல்லமுடியும்! அவன் ஜீவனுள்ள தேவ
னுடைய சேனையைக் கேலிச் செய்ததால்
அவன் கொல்லப்படுவான். 37கர்த்தர்
என்னைச் சிங்கம் மற்றும் கரடியிடமிருந்து
காப்பாற்றியது போலவே பெலிஸ்தனிட
மிருந்தும் என்னைக் காப்பாற்றுவார்” என்
றான்.
சவுல் தாவீதிடம், “கர்த்தர் உன்னோடு
இருப்பாராக, நீ போ” என்றான். 38சவுல்
தன் சொந்த ஆடையை தாவீதுக்கு அணி
வித்தான். தலையில் வெண்கல தலைச்
சிராவை, பிற யுத்த சீருடையும் போடு
வித்தான். 39தாவீது வாளை எடுத்துக்
கட்டிக்கொண்டு நடந்து பார்த்தான். சவுலின்
சீருடையை அணிந்து பார்த்தான், ஆனால்
அவ்வளவு பாரமான யுத்த சீருடை
அணிந்துகொள்ளும் பயிற்சி அவனுக்கு
இருக்கவில்லை.
தாவீது சவுலிடம், “இவற்றை அணிந்து
என்னால் சண்டை போட முடியாது.
அணிந்து பழக்கமில்லை” என்றான். எனவே
தாவீது எல்லாவற்றையும் கழற்றினான். 40தன்
கைத்தடியை எடுத்துக்கொண்டு 5 கூழாங்கற்
கள் கிடைக்குமா என்று பார்க்கச் சென்
றான். தேடியெடுத்த 5 கூழாங்கற்களையும்
தான் வைத்திருந்த இடையர் தோல் பையில்
போட்டுக் கொண்டான், கையில் வில்
கவணை வைத்துக்கொண்டான். பிறகு
கோலியாத்தை நோக்கி நடந்தான்.

தாவீது கோலியாத்தைக் கொல்கிறான்

41கோலியாத் மெதுவாக நடந்து தாவீதை
நெருங்கினான். கேடகத்தை ஏந்திய உதவி
யாள் முன்னே நடந்தான், 42கோலியாத்
தாவீதைப் பார்த்து, அவன் யுத்த பயிற்சி
இல்லாத சிவந்த முகத்தையுடைய இளைஞன்
என்று கண்டு நகைத்தான். 43“ஏன் இந்த
கைத்தடி? ஒரு நாயை விரட்டுவது போல்
நீ என்னை விரட்டப் போகிறாயா?” என்று
கோலியாத் கேட்டான். அதற்கு பின்
கோலியாத் தன் தெய்வங்களின் பெயரைச்
சொல்லி தாவீதை நிந்தித்தான். 44கோலியாத்
தாவீதிடம், “இங்கே வா, உனது உடலை
பறவைகளுக்கும், காட்டு மிருகங்களுக்கும்
இரையாகப் போடுகிறேன்!” என்றான்.
45தாவீது அவனிடம், “நீ உனது பட்டயம்,
ஈட்டியைப் பிடித்துகொண்டு வந்துள்ளாய்.
நானோ இஸ்ரவேல் சேனைகளின் தேவ
னாகிய சர்வ வல்லமையுள்ள கர்த்தருடை
நாமத்தில் வந்துள்ளேன், அவரைத் தூஷித்து
நீ நிந்தித்தாய். 46இன்று உன்னைத் தோற்
கடிக்க கர்த்தர் எனக்கு உதவுவார். இன்று
உன் தலையை வெட்டி உன் உடலை
பறவைகளுக்கும், காட்டு மிருகங்களுக்கும்
இரையாக்குவேன். மற்ற பெலிஸ்தரையும்
இவ்வாறே செய்வோம்! அப்போது இஸ்ர
வேலில் தேவன் ஒருவர் இருக்கிறார் என்று
உலகம் அறிந்துக்கொள்ளும்! 47ஜனங்களை
மீட்கும்படி கர்த்தருக்குப் பட்டயமும் ஈட்டி
யும் தேவையில்லை என்பதை இங்குள்ளவர்
களும் அறிவார்கள். யுத்தம் கர்த்தருடையது!
பெலிஸ்தியர்களாகிய உங்களெல்லாரையும்
வெல்ல கர்த்தர் உதவுவார்” என்றான்.

48கோலியாத் தாவீதை தாக்கும்படி சீறி
எழுந்து நெருங்கி வந்தான். தாவீதும்
நெருங்கி ஓடி, 49தனது தோல் பையிலிருந்து
கூழாங்கல்லை எடுத்து கவணில் வைத்து
சுழற்றி வீசினான். அது கோலியாத்தின்
நெற்றியில் இரு கண்களுக்கும் நடுவில்
பட்டது. அவன் நெற்றிக்குள் அது புகவே
அவன் முகங்குப்புற விழுந்தான்.
50இவ்வாறு தாவீது கோலியாத்தை ஒரே
கவண் கல்லால் சாகடித்தான். தாவீதிடம்
பட்டயம் இருக்கவில்லை, 51அதனால்
ஓடிப்போய் அந்த பெலிஸ்தியன் அருகில்
நின்று, கோலியாத்தின் பட்டயத்தை அவ
னது உறையில் இருந்து உருவி அதைக்
கொண்டே அவனது தலையை சீவினான்.
இவ்விதமாகத்தான் தாவீது பெலிஸ்தியனான
கோலியாத்தை கொன்றான்.
மற்ற பெலிஸ்தியர் தங்களது மாவீரன்
மரித்ததைப் பார்த்து பின்வாங்கி ஓடினார்
கள். 52இஸ்ரவேல் வீரர் அவர்களைத் துரத்தி,
காத் மற்றும் எக்ரோன் எல்லைவரை
விரட்டினார்கள். சாராயீமின் சாலை
யோரங்களில் காத் மற்றும் எக்ரோன்
வரை பலரைக் கொன்று குவித்தனர்.
53பின்னர் பெலிஸ்தியரின் முகாமிற்குள்
சென்று பொருட்களை எடுத்து வந்தனர்.
54தாவீது கோலியாத்தின் தலையை
எருசலேமிற்கு எடுத்துச் சென்றான். கோலி

யாத்தின் ஆயுதங்களைத் தன் சொந்தக் கூடாரத்தில் வைத்தான்.

சவுல் தாவீதுக்கு அஞ்சத் தொடங்கு கிறான்

55தாவீது சண்டைக்குப் போவதைப் பார்த்தான். சவுல் தன் தளபதியான அப் னேரிடம், "இவனது தந்தை யார்?" எனக் கேட்டான்.

அப்னேரும், "எனக்குத் தெரியாது ஐயா" என்றான்.

56சவுலோ, "இவனது தந்தையைப்பற்றி தெரிந்து வா" என்றான்.

57தாவீது கோலியாத்தைக் கொன்றுவிட்டு திரும்பும்போது அப்னேர் அவனைச் சவு லிடம் அழைத்து வந்தான். தாவீது இன்னும் கோலியாத்தின் தலையைப் பிடித்துக் கொண்டிருந்தான்.

58சவுல் அவனிடம், "உன் தந்தை யார்?" எனக் கேட்டான்.

அதற்கு தாவீது, "நான் உங்கள் வேலைக் காரனான, பெத்லேகேமில் உள்ள ஈசாயின் மகன்" என்றான்.

தாவீதும் யோனத்தானும் நெருங்கிய நண்பர்களாகிறார்கள்

18 சவுல் தாவீதோடு பேசி முடிந்ததும், யோனத்தானும் தாவீதும் நெருங்கிய நண்பர்களானார்கள். அவன் தன்னைப் போலவே தாவீதையும் நேசித்தான்.

2சவுல் அன்று முதல் தாவீதை தன்னோடு வைத்துக்கொண்டான். அவனைத் தன் தந்தையிடம் திரும்பிச்செல்ல அனுமதிக்க வில்லை.

3யோனத்தான் தாவீதை அதிகம் நேசித்து அவனோடு ஒரு ஒப்பந்தம் செய்து கொண்
டான். 4யோனத்தான் தான் அணிந்திருந்த மேலாடையை கழற்றி தாவீதுக்குக் கொடுத் தான். அவன் தன் சீருடையையும் கழற்றி தாவீதுக்குக் கொடுத்தான். மேலும் தனது வில், பட்டயம் மற்றும் கச்சையையும் கூட தாவீதுக்கே கொடுத்தான்.

தாவீதின் வெற்றிகளைச் சவுல் கவனிக்கிறான்

5பல யுத்தங்களுக்கு தாவீதை சவுல் அனுப்பினான். தாவீதும் மிகப் பெரிய வெற்றிகளை அடைந்தான். பின்பு அவனை படை வீரருக்கு தலைவன் ஆக்கினான், சவுலின் தளபதிகள் உட்பட அனைவரும்
இதை ஏற்றுக்கொண்டனர்! 6தாவீது பெலிஸ்
தியர்களோடு சண்டையிட வெளியேறி னான். போரிலிருந்து வெற்றி பெற்று திரும்பியபோது, இஸ்ரவேலின் ஒவ்வொரு நகரப் பெண்மணிகளும் தாவீதைப் பாராட்ட வந்தனர். சிரித்து நடனமாடி மேளமும் யாழும் வாசித்தனர். சவுல் எதிரில் இதனைச்
செய்தனர். 7பெண்கள்,

"சவுல் ஆயிரம் பகைவர்களை
கொன்றிருக்கிறான்.
ஆனால் தாவீதோ பதினாயிரம்
பகைவர்களை கொன்றான்!"
என்று பாடினார்கள்!

8இதனால் சவுல் கோபம் அடைந்தான். பெண்கள் சொன்னதை நினைத்து விசனப்
பட்டான். 9அன்று முதல் தாவீதை நெருக்க மாகப் பின்தொடர ஆரம்பித்தான்.

தாவீதைக் கண்டு சவுல் பயப்படுகிறான்

10மறுநாள், தேவனிடமிருந்து ஒரு கெட்ட ஆவி சவுலை ஆட்கொண்டது. தாவீது வழக்கம்போல் சுரமண்டலத்தை எடுத்து மீட்டிக்கொண்டிருக்கும்போது, சவுல் தன் வீட்டில் தீர்க்கதரிசனம் சொல்லிக்கொண்டி
ருந்தான். 11சவுலிடம் ஈட்டி இருந்தது. சவுல்,
"சுவரோடு சேர்த்து தாவீதைக் குத்திக் கொன்றுவிடலாம்" என எண்ணினான். அதன்படியே இரண்டு முறை ஈட்டியை வீசினான். ஆனால் இரண்டு முறையும் தாவீது தப்பிவிட்டான்.

12தாவீதோடு கர்த்தர் இருந்தார். சவுலிட மிருந்து கர்த்தர் விலகிவிட்டார். எனவே
சவுல் தாவீதைக் கண்டு பயந்தான். 13தன்னிட
மிருந்து வெகுதொலைவான இடத்துக்குத் தாவீதை சவுல் அனுப்பினான். 1,000 வீரர்க ளுக்கு அதிகாரியாக தாவீதை ஆக்கினான். வீரர்களை போருக்கு வழிநடத்துகிறவனாயி
ருந்தான். 14கர்த்தர் தாவீதோடு இருந்ததால்
எல்லா யுத்தங்களிலும் வென்றான். 15சவுல்
தாவீதின் வெற்றிகளைக் கண்டபோது அவனுக்கு மேலும் மேலும் பயம் வந்தது.

16ஆனால் யூதாவிலும் இஸ்ரவேலிலும் உள்ளவர்கள் தாவீதை நேசித்தனர். போரில் தங்களுக்காகப் போராடுவதால் அனைவரும் தாவீதை நேசித்தனர்.

தாவீதுக்கு தன் மகளை திருமணம் செய்துவைக்க சவுல் விரும்புகிறான்

17ஆனால், சவுல் தாவீதைக் கொல்ல விரும்பி தந்திரமான ஒரு வழியை யோசித் தான். அவன், "என் மூத்த மகள் மேராப்பை உனக்கு மணமுடித்துத் தருவேன், பின் நீ வலிமை மிக்க வீரனாகலாம். என் மகன் போல இருக்கலாம்! பிறகு நீ போய் கர்த்தருடைய யுத்தங்களை நடத்தலாம்!" என்றான். மேலும் சவுல், "இவனை நான் கொல்லாமல், எனக்காக பெலிஸ்தியர்களால் கொல்லச் செய்வேன்" என்று எண்ணி னான்.

18தாவீதோ, "நான் பெரிய குடும்பத்தவ னும் அல்ல! முக்கியமானவனும் அல்ல! என்னால் அரசனின் மகளை மணந்து கொள்ள முடியாது!" என்றான்.

[19]எனவே மேராப் தாவீதை மணக்க
வேண்டிய காலம் வந்தபோது, அவளை
மேகோலத்தியனாகிய ஆதரியேலுக்கு மண
முடித்துக் கொடுத்தான்.
[20]சவுலின் அடுத்த மகள் மீகாள் தாவீதை
நேசித்தாள். இவ்விஷயத்தைப்பற்றி சவுலிடம்
ஜனங்கள் சொன்னார்கள். இது சவுலுக்கு
மகிழ்ச்சி தந்தது. [21]எனவே, "மீகாளைப்
பயன்படுத்தி தாவீதைச் சூழ்ச்சிக்குட்படுத்த
வேண்டும். அவள் அவனை மணக்கட்டும்.
பிறகு அவன் பெலிஸ்தர்களால் கொல்லப்
படுவான்" என்று நினைத்த சவுல் இரண்
டாம் தடவையாக, "இன்று என் மகளை
மணமுடிக்கலாம்" என்றான்.
[22]சவுல் தன் அதிகாரிகளுக்கு கட்டளை
யிட்டு, "தனியாக தாவீதிடம் கூறுங்கள்,
'பார், அரசனும் உன்னை விரும்புகிறான்.
அவரது அதிகாரிகளும் உன்னை விரும்பு
கின்றனர். நீ அவனுடைய மகளை மணக்க
வேண்டும்' என்று சொல்லுங்கள்" என்றான்.
[23]அதிகாரிகள் இதை அவனிடம் கூற,
அவனோ, "அரசனுக்கு மருமகனாவது
அவ்வளவு எளிதா? அரசனின் மகளுக்குத்
தருகிற அளவிற்கு என்னிடம் செல்வ
மில்லை! நான் சாதாரண ஏழை" என்றான்.
[24]தாவீது சொன்னதைச் சவுலிடம்
அதிகாரிகள் சொன்னார்கள். [25]சவுல் அவர்
களிடம், "'அரசன் உன்னிடம் பணத்தை
எதிர்பார்க்கவில்லை பணத்திற்கு பதிலாக
100 பெலிஸ்தியர்களின் நுனித்தோல் போ
தும்' எனக் தாவீதிடம் கூறுங்கள்" என்றான்.
இதுதான் சவுலின் சூழ்ச்சி. பெலிஸ்தியர்கள்
தாவீதை நிச்சயம் கொல்வார்கள் என சவுல்
நம்பியிருந்தான்.
[26]அதிகாரிகள் தாவீதிடம் இதனைக் கூறி
னார்கள். அரசனின் மருமகனாக வாய்ப்புக்
கிடைத்ததற்காய் மகிழ்ச்சியடைந்தான்.
[27]எனவே தாவீதும் அவனது வீரர்களும்
உடனே பெலிஸ்தியர்களோடு சண்டைக்குப்
போய் 200 பெலிஸ்தியரைக் கொன்று,
அவர்களின் நுனித்தோலை வெட்டி
கொண்டுவந்து சமர்ப்பித்தான். அரசனின்
மரு மகனாக விரும்பினபடியால் தாவீது
இதைச் செய்தான்.
தன் மகள் மீகாளை தாவீது மணந்துக்
கொள்ள சவுல் அனுமதித்தான். [28]தாவீதோடு
கர்த்தர் இருப்பதைச் சவுல் அறிந்துக்
கொண்டான். அதோடு அவனது மகள் மீகாள்
தாவீதை நேசித்தாள் என்பதையும்
அறிந்துக்கொண்டான். [29]எனவே சவுலுக்கு
தாவீது மீது மேலும் பயம் வந்தது. அவ
னைத் தனது எதிரியாக எப்போதும்
எண்ணி வந்தான்.
[30]பெலிஸ்திய தளபதிகள் தொடர்ந்து
இஸ்ரவேலருக்கு எதிராக சண்டையிட்டனர்.
ஆனால், ஒவ்வொரு முறையும் தாவீது
அவர்களைத் தோற்கடித்தான். தாவீது மிகச்
சிறந்த அதிகாரி என்று புகழ் பெற்றான்.

யோனத்தான் தாவீதுக்கு உதவுகிறான்

19 சவுல் தன் அதிகாரிகளிடமும் யோனத்
தானிடமும் தாவீதைக் கொல்லுமாறு
கூறினான். ஆனால் யோனத்தான் தாவீதை
அதிகமாக விரும்பினான். [2-3]எனவே
யோனத்தான் தாவீதை எச்சரித்து, "கவன
மாக இரு. சவுல் உன்னைக் கொல்லப்
பார்க்கிறார். இன்று காலை, வயலில்
ஒளிந்துகொள். நான் என் தந்தையோடு
அங்கு வந்து பேசுவதை கேட்டுக்கொள்"
என்றான்.
[4]யோனத்தான் தனது தந்தை சவுலிடம்
சம்பாஷித்தான். தாவீதைப் பற்றி நல்ல
வற்றை அவன் எடுத்து கூறினான். அவன்,
"நீங்கள் ஒரு அரசன், தாவீது ஒரு சேவகன்,
அவன் உங்களுக்கு எதிராக எதுவும்
செய்யமாட்டான். எனவே அவனுக்கு எதி
ராக எதுவும் செய்யாதீர்கள், அவன் உங்க
ளுக்கு நன்மையே செய்வான். [5]அவன்
கோலியாத்தைக் கொல்ல தன் உயிரையே
பணயம் வைத்தான். கர்த்தர் இஸ்ர
வேலுக்காக பெரிய வெற்றியைத் தந்தார்,
நீங்கள் பார்த்து மகிழ்ந்தீர்கள், அவன்
அப்பாவி! அவனைக் கொல்ல காரணமே
இல்லை" என்றான்.
[6]யோனத்தான் சொல்வதை சவுல் கேட்டு,
"கர்த்தர் ஜீவிப்பது உண்மை, தாவீது
கொல்லப்பட மாட்டான்" என்றான்.
[7]எனவே, யோனத்தான் தாவீதை
அழைத்து நடந்த எல்லாவற்றையும் சொன்
னான். பிறகு தாவீதை சவுலிடம் அழைத்து
வந்தான். ஆகையால் முன்பு போலவே
தாவீதைச் சவுலோடேயே இருக்கச் செய்
தான்.

சவுல் தாவீதை மீண்டும் கொல்ல முயற்சிக்கிறான்

[8]மறுபடியும் போர் தொடங்கியது. தாவீது
புறப்பட்டு சென்று பெலிஸ்தியரோடு போர்
செய்தான். பெலிஸ்தியரை தாவீது தோற்
கடித்தான், அங்கிருந்து அவர்கள் ஓடிப்
போனார்கள். [9]சவுல் வீட்டில் இருக்கும்
போது, கர்த்தரிடமிருந்து ஒரு தீய ஆவி
அவன் மீது வந்தது. அவன் தனது கையில்
ஈட்டி ஒன்றை வைத்திருந்தான். தாவீது
சுரமண்டலம் வாசித்துக்கொண்டிருந்தான்.
[10]சவுல் ஈட்டியால் அவனைச் சுவரோடு
சேர்த்து குத்திக் கொல்லப் பார்த்தான்.
ஆனால் தாவீது அப்புறம் குதித்துத் தப்பி
னான். சவுல் தன் ஈட்டியைச் சுவரில்
பதிய குத்தினான். தாவீது அன்றிரவு
தப்பிவிட்டான்.
[11]தாவீதின் வீட்டுக்கு சவுல் ஆட்களை
அனுப்பினான். அவர்கள் தாவீதின்
வீட்டைக் கண்காணித்தார்கள். அன்றிரவு
முழுக்க அவர்கள் அங்கேயே தங்கி இருந்தார்
கள். அதிகாலையில் தாவீதைக் கொல்ல
அவர்கள் திட்டமிட்டார்கள். தாவீதின்

மனைவியான மீகாள் அவனை எச்சரித்து,
"இந்த இரவே இங்கே இருந்து தப்பி ஓடி,
உன் உயிரைக் காப்பாற்றிக்கொள். இல்லை
யென்றால் நாளை கொல்லப்படுவீர்" என்று
சொன்னாள். 12அவள் அவனை ஜன்னல்
வழியாக இறக்கிவிட, அவன் தப்பினான்.
13மீகாள் கட்டில் மேல் ஒரு சிலையை
வைத்து, தலைமாட்டில் வெள்ளாட்டுத்
தோலை போட்டு ஆடையால் மூடி
வைத்தாள்.

14தாவீதைக் கைது செய்து அழைத்து
வரும்படி சவுல் ஆட்களை அனுப்பினான்.
மீகாள் அவர்களிடம், 'தாவீது நோயுற்றி
ருக்கிறான்' என்று சொன்னாள்.

15தூதுவர்கள் சவுலிடம் சங்கதியைச்
சொன்னார்கள். ஆனால் அவர்களை மீண்
டும் சவுல் திருப்பி அனுப்பினான். அவர்
களிடம், "தாவீதை என்னிடம் அழைத்து
வாருங்கள். முடிந்தால் அவன் படுத்துக்
கிடக்கும் கட்டிலோடு அவனைத் தூக்கி
வாருங்கள், அவனை நான் கொல்வேன்"
என்றான்.

16தாவீதின் வீட்டுக்குத் தூதுவர்கள்
சென்றார்கள். தாவீதைத் தூக்கிவர வீட்டுக்
குள் நுழைந்தார்கள். ஆனால் படுக்கையில்
வெறும் சிலையைத்தான் பார்த்தார்கள்.
ஆட்டு மயிர் அதன் போர்வையாக இருக்க
கண்டனர்.

17சவுல், மீகாளிடம், "ஏன் என்னிடம்
நீ தந்திரம் செய்கிறாய்? நீ எனது எதிரியை
தப்பிக்கவிட்டாய்!" என்று கேட்டான்.

அவள், "தாவீது தப்பிக்க நான் உதவி
செய்யாவிட்டால் அவர் என்னை கொன்று
விடுவதாகச் சொன்னார்!" என்றாள்.

தாவீது ராமாவில் உள்ள முகாமிற்குப் போதல்

18தாவீது தப்பித்து ராமாவில் தங்கியிருந்த
சாமுவேலிடம் போனான். தனக்குச் சவுல்
செய்தக் காரியங்கள் அனைத்தையும் சாமு
வேலிடம் சொன்னான். பிறகு இருவரும்
தீர்க்கதரிசிகள் தங்கி இருக்கிற முகாம்
களுக்குச் சென்றனர். தாவீது அங்கேயே
தங்கினான்.

19ராமாவில் உள்ள முகாமில் தாவீது
இருக்கும் செய்தியைப்பற்றி சவுல் கேள்விப்
பட்டான். 20தாவீதை கைது செய்து
அழைத்து வர சேவகர்களை அனுப்பினான்.
அவர்கள் வந்து தீர்க்கதரிசனம் சொல்கிற
தீர்க்கதரிசிகளின் குழு மத்தியில் சாமுவேல்
குழுத்தலைவனாக நிற்பதைக் கண்டனர்.
அப்போது சேவகர்மேல் தேவனுடைய ஆவி
யானவர் இறங்க அவர்களும் தீர்க்கதரிசனம்
சொன்னார்கள்.

21இதை அறிந்த சவுல், வேறு சேவகர்
களை அனுப்பினான். அவர்களும் அங்கு
போய் தீர்க்கதரிசனம் சொல்ல, மூன்றாவது
குழுவை அனுப்பினான். அவர்களும் தீர்க்க
தரிசனம் சொன்னார்கள். 22சவுலும் ராமா
வுக்குப் போய் சேக்குவிலுள்ள கிணற்றரு
சில் நின்று, "சாமுவேலும் தாவீதும் எங்கே?"
என்று கேட்டான்.

ஜனங்கள், "ராமாவின் முகாமில் உள்ள
னர்" என்று சொன்னார்கள்.

23அவனும் ராமாவுக்கு அருகில் உள்ள
முகாம்களுக்குப் போனான். அவன்மேலும்
தேவனுடைய ஆவியானவர் இறங்கவே அவ
னும் தீர்க்கதரிசனம் சொல்ல ஆரம்பித்தான்.
முகாமிற்குச் செல்லும் வரை அப்படிச்
சொல்லிக்கொண்டே சென்றான். 24சவுலும்
தன் ஆடைகளைக் கழற்றிப் போட்டு சாமு
வேலுக்கு முன்பாக தீர்க்கதரிசனம் சொல்லி
இரவும் பகலும் ஆடையில்லாமல் கிடந்தான்.

எனவேதான், "சவுலும் தீர்க்கதரிசிகளில்
ஒருவனா?" என்று ஜனங்கள் கூறுகின்றனர்.

தாவீதும் யோனத்தானும் ஒரு ஒப்பந்தம் செய்கிறார்கள்

20 ராமாவிற்கு அருகில் உள்ள முகாம்
களில் இருந்து தாவீது தப்பி ஓடி
யோனத்தானிடம் வந்தான். தாவீது, "உன்
தந்தை என்னைக் கொல்ல தேடுகிறாரே.
நான் என்ன தவறு செய்தேன்? நான்
அவருக்குச் செய்த துரோகம் என்ன?"
என்று கேட்டான்.

2அதற்கு யோனத்தான், "அது உண்மை
யாக இருக்க முடியாது! என் தந்தை
உன்னைக் கொல்ல முயலவில்லை. என்
னிடம் சொல்லாமல் எந்தக் காரியத்தையும்
என் தந்தை செய்வதில்லை. அது சின்ன
காரியமோ, பெரிய காரியமோ எதுவாக
இருந்தாலும் சரி. உன்னைக் கொல்லும்
திட்டத்தை என்னிடமிருந்து அவர் ஏன்
மறைத்தார்? இல்லை, இது உண்மையன்று!"
என்றான்.

3ஆனால் தாவீது, "உன் கண்களில்
எனக்கு தயை கிடைத்தது. இதை உன்
தந்தை அறிவார். அதனால், என்னிடமுள்ள
நட்பினிமித்தம் நீ சஞ்சலம் அடையாதபடிக்கு
இதை உன்னிடம் மறைத்தார், கர்த்தர்
ஜீவித்திருக்க நீயும் ஜீவித்திருக்கிற உண்மை
படி கூறுகிறேன். நான் மரணத்தை நெருங்கிக்
கொண்டிருக்கிறேன்!" என்று பதிலளித்தான்.
4யோனத்தான் அப்போது, "நீ சொல்லுகிற
படி நான் செய்வேன்" என்றான்.

5தாவீது, "கவனி, நாளை அமாவாசை
விருந்து,* நான் அரச பந்தியில் சாப்பிட
வேண்டும். ஆனால் மாலை வரை
ஒளிந்திருக்க எனக்கு உத்தரவு வேண்டும்!
6உன் தந்தை கேட்டால், 'தன் ஊராகிய
பெத்லேகேமில் ஆண்டுக்கு ஒரு தடவை

அமாவாசை விருந்து இது யூதர்களின் மாதத்தின் முதல் நாள். இது ஓய்வுக்கும் ஆராதனைக்கும் உரிய சிறப்பான நாள். அன்று ஜனங்கள் ஒன்று கூடி, லேவி. 7:16-21ல் விளக்கியப்படி காணிக்கைகளைப் பகிர்ந்துகொள்வார்கள்.

மாதப் பலிச் செலுத்துவதால் அதில் கலந்துக்
கொள்ள தன் குடும்பத்தோடு போயிருப்
பதாகச் சொல்.’ 7 அதற்கு அவர், ‘நல்லது’
என்றால் எனக்குச் சமாதானம். அவருக்கு
எரிச்சல் வந்தால், அவரால் ஆபத்து என்று
அர்த்தம். 8 எனவே தயவுச் செய்யவேண்டும்.
என்னோடு கர்த்தருக்கு முன்னால் ஒப்பந்தம்
செய்துள்ளாய். என் மீது தவறு என்றால்
என்னைக் கொல். என்னை உன் தந்தை
யிடம் மட்டும் அழைத்துப் போகாமல்
இருக்க வேண்டும்!” என வேண்டினான்.
9 அதற்கு யோனத்தான், “அந்த நிலை
உனக்கு ஏற்படாமல் இருப்பதாக! என்
தந்தையால் உனக்கு ஆபத்து என்றால்
நான் சொல்லாமல் இருப்பேனா?” என்று
கேட்டான்.
10 ஆனால் தாவீது, “உன் தந்தைக்
கடுமையான உத்தரவு போட்டால் எனக்கு
அதை யார் சொல்வது?” என்று கேட்டான்.
11 அதற்கு யோனத்தான், “வா ஊருக்கு
வெளியே வயலுக்குப்போவோம்” என்றான்.
இருவரும் வெளியே போனார்கள்.
12 யோனத்தான், “இஸ்ரவேலரின் தேவ
னாகிய கர்த்தருடைய முன்னிலையில் வாக்
களிக்கிறேன், நான் நாளையோ மறுநாளோ
என் தந்தையின் மனதை அறிந்து விடுவேன்.
அவர் உன்மேல் தயவாக இருந்தாலும்,
தீங்கு செய்யும் எண்ணமாக இருந்தாலும்
3 நாட்களுக்குள் அறிவிப்பேன். 13 ஒருவேளை,
எனது தந்தை உனக்குத் தீமை செய்யத்
துடித்துக் கொண்டிருந்தால் அதையும் அறி
விப்பேன். அதோடு அமைதியாக நீ ஒதுங்கி
விட உதவுகிறேன். நான் உனக்கு உண்மை
யைச் சொல்லாவிட்டால் கர்த்தர் எனக்கு
அதற்கு நிகராகவும் அதிகமாகவும் துன்பம்
தரட்டும்! கர்த்தர் உன் தந்தையோடு
இருந்தது போலவே உன்னோடும் இருப்
பாராக. 14 மேலும் நான் உயிரோடு இருக்கும்
வரை என்மீது கருணையோடு இரு. 15 நான்
மரித்தப் பிறகும் என் குடும்பத்தின்
மேலுள்ள கருணையை நிறுத்தாமல் இரு.
உன் பகைவரையெல்லாம் கர்த்தர் பூமியில்
இருந்து அழிப்பார். 16 யோனத்தான் பெயர்
தாவீதின் குடும்பத்திலிருந்து எடுத்துப்
போடாமல் இருப்பதாக. தாவீதின் பகைவர்
களை கர்த்தர் தண்டிப்பாராக” என்று
தாவீதின் குடும்பத்தோடு ஒப்பந்தம் செய்துக்
கொண்டான்.
17 யோனத்தான் தாவீதிடம், அவனது
அன்பு பற்றிய வாக்குறுதியைத் திருப்பிச்
சொல்லும்படி கேட்டான். ஏனென்றால்,
அவன் தன்னைத்தானே எவ்வளவு நேசித்
தானோ அவ்வளவு அதிகமாய் தாவீதையும்
நேசித்தான்.
18 யோனத்தான் தாவீதிடம், “நாளை
அமாவாசை விருந்து. நீ உட்கார வேண்டிய
இடம் காலியாயிருப்பதால் உன்னைக்
குறித்து விசாரிக்கப்படும். 19 இந்த சிக்கல்
முதலில் ஆரம்பித்தபோது நீ ஒளிந்திருந்த
இடத்திற்குப் போ. அங்கேயே காத்திரு.
20 மூன்றாவது நாள், ஏஸேல் எனும்
கல்லருகில் காத்திரு, பிறகு மூன்றாம் நாளில்
ஒரு இலக்கைக் குறிவைத்து எய்வதுபோல்.
நான் அங்கு போய் அதன் பக்கமாக
மூன்று அம்புகளை எய்வேன். 21 ஒரு பிள்
ளையை அம்பைத் தேடி வருமாறு அனுப்
புவேன். நான் அவனிடம், ‘அதிக தூரம்
போனாய் அம்புகள் என் அருகில் உள்ளன’
என்று சொன்னால் வந்துவிடு. அப்போது
ஒன்றும் இல்லை, உனக்கு சமாதானம்.
இதைக் கர்த்தருடைய அன்பால் கூறுகிறேன்!
22 ஏதாவது தொந்தரவு இருந்தால் அவனிடம்,
‘அம்புகள் ரொம்ப தூரத்தில் கிடக்கிறது,
எடுத்து வா’ என்று சத்தமிடுவேன். உடனே
நீ விலகவேண்டும். கர்த்தர் உன்னை தூர
அனுப்பிகொண்டிருக்கிறார் என்று அர்த்தம்.
23 அப்போது நமக்கு இடையேயுள்ள
ஒப்பந்தத்தை மறவாமல் இரு. கர்த்தர் தாமே
நமக்கு எப்போதும் சாட்சியாக இருப்பார்!”
என்றான்.
24 பிறகு தாவீது வயலில் ஒளிந்துக்
கொண்டான்.

விருந்தில் சவுலின் போக்கு

அமாவாசை விருந்துக்கு சமயம் வந்தது,
அரசன் உணவுண்ண உட்கார்ந்தான்.
25 அரசன் வழக்கம்போல் சுவரை அடுத்து
உட்கார்ந்தான். யோனத்தான் எதிரே
இருந்தான். அப்னேர் சவுலுக்கடுத்து இருந்
தான். தாவீதின் இடம் வெறுமையாய்
இருந்தது. 26 சவுல் எதுவும் சொல்லவில்லை.
அவன், “தாவீதிற்கு ஏதேனும் நடந்து
அதனால் தீட்டாக இருப்பான்” என்று
எண்ணிக் கொண்டான்.
27 மாதத்தின் இரண்டாம் நாளான மறுநாள்
மீண்டும் தாவீதின் இடம் வெறுமையாய்
இருந்தது. சவுல் தன் மகனிடம், “எதற்காக
ஈசாயின் மகன் நேற்றும் இன்றும்
அமாவாசை விருந்துஉண்ண வரவில்லை?”
என்று கேட்டான்.
28 யோனத்தான், “தாவீது தன்னை
பெத்லேகேமுக்குப் போக அனுமதிக்கும்படி
கேட்டுக் கொண்டான். 29 அதனால் என்னி
டம், ‘என்னைப் போகவிடு. எங்கள்
குடும்பத்திற்குப் பெத்லேகேமில் ஒரு பலி
யைச் செலுத்தவேண்டியுள்ளது. எனது
சகோதரன் அங்கே இருக்கும்படி எனக்கு
கட்டளையிட்டிருக்கிறார். இப்பொழுது நான்
உனது நண்பனானால், நான் போய் என்
சகோதர்களைப் பார்க்க அனுமதி தா!’
என்று கேட்டான். அதனால் தாவீது அரச
னுடைய பந்திக்கு வரவில்லை” என்று
பதிலுரைத்தான்.
30 சவுல் யோனத்தான் மீது கோபமுற்று,
“அடிபணிய மறுத்த கலகக்காரப் பெண்
ணின் மகன் நீ, நீயும் அவளைப்போல்

இருக்கிறாய், நீ தாவீதின் பக்கத்தில் உள்
ளாய். நீ உனக்கும் உன் தாய்க்கும் அவ
மானத்தைத் தந்தாய்! 31ஈசாயின் மகன்
இருக்கும்வரை நீ அரசனாக முடியாது.
உனக்கு அரசும் கிடைக்காது. இப்போது
தாவீதைக் கொண்டு வா! அவன் ஒரு
மரித்தவன்” என்றான்.
32யோனத்தான் அவனிடம், “தாவீது ஏன்
கொல்லப்பட வேண்டும்? அவனது தவறு
யாது?” எனக் கேட்டான்.
33ஆனால் சவுல் ஈட்டியை அவன் மீது
எறிந்து கொல்லப் பார்த்தான். எனவே
யோனத்தான் தனது தந்தை தாவீதைக்
கொன்றுவிட பெரிதும் விரும்புகிறான் என்
பதை அறிந்தான். 34அவன் தந்தை மீது
கோபங்கொண்டுப் பந்தியிலிருந்து விலகிக்
கொண்டான். விருந்தின் இரண்டாம் நாளில்
யோனத்தான் உணவுண்ண மறுத்தான்.
தனது தந்தை தன்னை அவமானப் படுத்தி
யதாலும் தாவீதை கொல்லவிரும்பியதாலும்
யோனத்தான் கோபமடைந்தான்.

தாவீதும் யோனத்தானும் விடை பெறுகின்றனர்

35மறுநாள் காலை யோனத்தான் வய
லுக்குப் போனான். அவர்கள் ஏற்கனவே
திட்டமிட்ட இடத்தில் தாவீதைச் சந்திக்க
தன்னோடு ஒரு சிறுவனை அழைத்துப்
போனான். 36அவன் சிறுவனிடம், “நான்
எறிகிற அம்பைத் தேடி கண்டுபிடித்து
வா” என்றான். பையனின் தலைக்கு மேலாக
எறிந்த அம்பை அவன் தேடிப்போனான்.
37அம்பு விழுந்த இடத்தில் சிறுவன் தேட,
“அம்புகள் இன்னும் தூரத்தில் உள்ளது”
என்றான். 38மீண்டும் அவன், “சும்மா
நிற்காதே! போய் அம்பைத் தேடு” என்றான்.
சிறுவன் அம்பைத்தேடி தன் எஜமானனிடம்
எடுத்து வந்தான். 39என்ன நடைபெறுகிறது
என்று அந்தப் பையன் அறியாதிருந்தான்.
ஆனால் தாவீதிற்கும் யோனத்தானுக்கும்
அது புரிந்தது. 40யோனத்தான் சிறுவனிடம்,
வில்லையும் அம்பையும் கொடுத்து, “நகரத்
திற்குத் திரும்பிப் போ” என்று அனுப்பி
னான்.
41பையன் போனதும் தாவீது வெளியே
வந்து யோனத்தானைத் தரையில் குனிந்து
3 முறை வணங்கினான். பின் அவர்கள்
ஒருவரை ஒருவர் முத்தமிட்டனர். இருவரும்
சத்தமிட்டு அழ, தாவீது யோனத்தானை
விட மிகுதியாக அழுதான்.
42யோனத்தான் தாவீதிடம், “சமாதான
மாகப் போ, நாம் கர்த்தருடைய நாமத்தால்
நண்பர்களாக இருப்போம் என்று ஆணை
யிட்டோம். அதன்படியே நமக்கும் நமது
சந்ததியினருக்கும் நடுவே உள்ள ஒப்பந்தத்
திற்கு கர்த்தரே என்றென்றைக்கும் சாட்சி
யாக இருப்பார்” என்றான்.

தாவீது ஆசாரியனாகிய அகிமெலேக்கைப் பார்க்கப் போகிறான்

21 பின்பு தாவீது வெளியே போனான்,
யோனத்தான் நகரத்திற்குத் திரும்பிப்
போனான். 2தாவீது நோப் எனும் நகரத்திற்கு
ஆசாரியனான அகிமெலேக்கைப் பார்க்கப்
போனான்.
அகிமெலேக்கு தாவீதைச் சந்திக்க
வெளியே வந்தான், அவன் பயத்தால்
நடுங்கினான். அவன், “ஏன் தனியாக
வந்தீர்கள்? உங்களோடு ஏன் யாரும் வர
வில்லை?” என்று கேட்டான்.
3அதற்கு தாவீது, “அரசன் எனக்கு
விசேஷ கட்டளையை இட்டிருக்கிறான்.
அவர் என்னிடம், ‘எவரும் இதனைப்பற்றித்
தெரிந்துகொள்ளாமல் இருக்கட்டும், நீ செய்ய
வேண்டுமென்று நான் சொன்னதை ஒரு
வரும் தெரிந்துகொள்ளாமல் இருக்கட்டும்’
என்றார். நான் என் ஜனங்களிடம்
என்னைச் சந்திக்கிற இடத்தைப்பற்றி கூறி
யிருக்கிறேன். 4இப்போது உன்னோடு என்ன
உணவை வைத்திருக்கிறாய்? எனக்கு 5
அப்பங்களையோ அல்லது உன்னிடம்
உள்ள எதையேனும் புசிக்கக் கொடு”
என்றான்.
5ஆசாரியன் தாவீதிடம், “என்னிடம் சாதா
ரணமான அப்பங்கள் இல்லை. பரிசுத்த
அப்பங்கள்* மட்டுமே உள்ளன. உங்கள்
ஆட்கள் எந்தப் பெண்ணோடும் பாலின
உறவு கொள்ளாமல் இருந்தால், அவர்கள்
அவற்றை உண்ணலாம்” என்றான்.
6அதற்கு தாவீது, ஆசாரியனிடம்,
“எங்களோடு பெண்கள் இல்லை. எங்கள்
வீரர்கள் போருக்குப் போகும்போது தங்கள்
உடலை பரிசுத்தமாக வைத்திருப்பார்கள்,
எங்கள் வேலை மிகவும் சிறப்பானது.
எனவே, விசேஷமாக இன்று இது உண்மை”
என்றான்.
7பரிசுத்த அப்பங்களைத் தவிர வேறு
அப்பங்கள் இல்லாததால் ஆசாரியன்
அவற்றை தாவீதுக்கு கொடுத்தான். அவை,
கர்த்தருக்கு முன்பு பரிசுத்தமான மேஜையின்
மேல் வைக்கப்பட்டவை. ஒவ்வொரு நாளும்
ஆசாரியர் புதிய அப்பங்களை வைப்பார்கள்.
8சவுலின் அதிகாரிகளில் ஒருவன் அவர்
களோடு இருந்தான். அவன் பெயர்
ஏதோமியனான தோவேக்கு ஆகும். அவன்
சவுலின் ஒற்றர் தலைவனாவான். கர்த்தருக்கு
முன்பாக அவன் காவலில் அடைக்கப்பட்டி
ருந்தான்.
9தாவீது அகிமெலேக்கிடம், “இங்கு ஈட்டி
யாவது பட்டயமாவது உள்ளதா? அரசனது
வேலை முக்கியமானது. அது விரைவாக
நடக்கவேண்டும். நான் சடுதியில் புறப்பட்ட

பரிசுத்த அப்பம் பரிசுத்த கூடாரத்தில் வைக்கப்பட்டுள்ள சமூகத்து அப்பம் ஆகும். ஆசாரியர்கள் மட்டுமே இதை உண்ணவேண்டும்.

தால் பட்டயமாவது எந்தவித ஆயுதங்களை
யாவது எடுத்து வரவில்லை” என்றான்.
10அதற்கு ஆசாரியன், “இங்கே பெலிஸ்
தனாகிய கோலியாத்தின் பட்டயம் மட்டுமே
உள்ளது. அது உன்னால் அவனிடமிருந்து
எடுக்கப்பட்டது. துணியில் சுற்றி ஏபோத்
தின் பின்னால் வைக்கப்பட்டுள்ளது,
உனக்கு விருப்பமானால் எடுத்துக்கொள்ள
லாம்” என்றான்.
தாவீதோ, “அதனை எனக்குக் கொடு.
கோலியாத்தின் வாளைப்போன்று வேறு
நல்ல வாள் இல்லை!” என்றான்.

காத்தில் உள்ள எதிரிகளிடத்தில் தாவீது ஓடுகிறான்

11அன்று தாவீது சவுலிடமிருந்து ஓடி
னான். அவன் காத்தின் அரசனான ஆகீ
ஸிடம் சென்றான். 12ஆகீஸின் வேலைக்காரர்
அவனிடம் சொன்னார்கள், “இவன் இஸ்ர
வேல் நாட்டின் அரசனான தாவீது, இஸ்ர
வேலரால் போற்றப்படுபவன். அவர்கள்
ஆடிக்கொண்டே,

“சவுல் ஆயிரம் வீரர்களைக்
கொன்றிருக்கிறான்.
ஆனால் தாவீதோ பதினாயிரம்
வீரர்களைக் கொன்றிருக்கிறான்!”
என்று பாடுகின்றனர்.

13அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்
பதை தாவீது உற்று கவனித்தான். அவன்
காத்தின் அரசனான ஆகீஸுக்கு மிகவும்
பயந்தான். 14எனவே, அவன் ஆகீஸ்
அதிகாரிகளுக்கு முன்பு பைத்தியக்காரனைப்
போல் நடித்தான். வாசற்படிகளில் கீறிக்
கொண்டான். வாயில் நுரைத் தள்ளி தாடி
யில் ஒழுகவிட்டான்.
15ஆகீஸ் தனது அதிகாரிகளிடம்,
“இவனைப் பாருங்கள்! இவன் பைத்திய
மடைந்தவன்! என்னிடம் ஏன் அழைத்து
வந்தீர்கள்? 16என்னிடம் இப்படிப்பட்டவர்கள்
போதுமானப் பேர் உள்ளனர். இவனை
மீண்டும் என் வீட்டுக்குள் வர அனும
திக்காதீர்கள்!” என்றான்.

பல இடங்களுக்கு தாவீது போகிறான்

22 தாவீது காத்தை விட்டு அதுல்லாம்
குகைக்கு ஓடினான். தாவீது அதுல்லா
மில் இருப்பதாக அவனது சகோ தரர்களும்
உறவினர்களும் அறிந்துகொண்டனர்.
அவனைப் பார்க்க அங்கே சென்றார்கள்.
2பலர் தாவீதோடு சேர்ந்துகொண்டார்கள்.
சிலர் சிலவிதமான பிரச்சனைகளில்
இருந்தனர். சிலர் கடன் பட்டவர்கள். சிலர்
தம் வாழ்வில் விரக்தியடைந்தவர்கள். இவர்
கள் அனைவரும் தாவீதோடு சேர்ந்து,
அவனை தலைவன் ஆக்கினார்கள். இப்
போது அவன் 400 பேர்களோடு இருந்தான்.
3தாவீது அதுல்லாமை விட்டு மோவாப்பி
லுள்ள மிஸ்பாவிற்குச் சென்றான். மோவாப்
பின் அரசனிடம், “எனக்காக தேவன்
என்ன செய்யப்போகிறார் என்று தெரியும்
மட்டும் என் தாயும் தந்தையும் இங்கு
வந்து தங்கி இருக்க தயவுசெய்து அனுமதிக்க
வேண்டும்” என்று கேட்டுக் கொண்டான்.
4அவ்வாறே அவர்களை அங்கே அடைக்கல
மாக இருக்கச் செய்தான். தாவீது கோட்டை
யில் இருக்கும்வரை அவர்களும் இருந்தார்
கள்.
5ஆனால் காத் என்னும் தீர்க்கதரிசி
தாவீதிடம், “கோட்டையில் தங்கவேண்டாம்.
யூதா நாட்டிற்குப் போ” என்று சொன்னான்.
எனவே அவன் விலகி ஏரேத் எனும்
காட்டிற்குச் சென்றான்.

சவுல் அகிமெலேக்கின் குடும்பத்தை அழிக்கிறான்

6ஜனங்கள் தாவீது மற்றும் அவனது
ஆட்கள் மூலம் சேர்ந்து வருவதை சவுல்
கேள்விப்பட்டான். அவன் கிபியா மேட்டில்
ஒரு மரத்தடியில் உட்கார்ந்து கொண்டிருந்
தான். அவனது கையில் ஈட்டி இருந்தது.
அதிகாரிகள் அவனைச் சுற்றிலும் நின்று
கொண்டிருந்தனர். 7அவன் அவர்களிடம்,
“பென்யமீனின் ஜனங்களே! கவனியுங்கள்.
தாவீது உங்களுக்கு வயல்களையும், திராட்
சைத் தோட்டங்களையும் தருவான் என்று
நினைக்கிறீர்களா? அவன் உங்களை 1,000
பேருக்கும் 100 பேருக்கும் அதிகாரிகளாக்கு
வான் என்று எண்ணுகிறீர்களா? 8நீங்கள்
எனக்கு எதிராகச் சூழ்ச்சி செய்கிறீர்கள்!
இரகசியத் திட்டங்களைப் போடுகிறீர்கள்.
என் மகன் யோனத்தானைப் பற்றி எனக்குச்
சொல்லவில்லை. அவன் தாவீதோடு ஒரு
ஒப்பந்தம் செய்திருக்கிறான் என்று யாரும்
சொல்லவில்லை. என் மகன் தாவீதை
உற்சாகப்படுத்தி, அவனிடம் மறைந்திருந்து
என்னைத் தாக்கச் சொல்கிறான் என்பதை
யாரும் எனக்குக் கூறவில்லை. நீங்கள்
யாரும் என் மீது அக்கறை கொள்ளவில்லை!
யோனத்தான் தாவீதுடன் சேர்ந்து அதையே
இப்போது செய்துக் கொண்டிருக்கிறான்!”
என்றான்.
9அப்போது ஏதோமியனாகிய தோவேக்கு,
சவுலின் அதிகாரிகளோடு நின்று கொண்டி
ருந்தான். அவன், “நான் தாவீதை நோப்பில்
பார்த்தேன். அவன் அகிதூபின் மகனான
அகிமெலேக்கைப் பார்க்க வந்தான். 10அகி
மெலேக்கும் தாவீதிற்காக கர்த்தரிடம் ஜெபம்
செய்தான், உணவளித்தான், கோலியாத்தின்
பட்டயத்தைக் கொடுத்தான்” என்றான்.
11பிறகு சவுல் சிலரை அனுப்பி ஆசா
ரியனை அழைத்துவரக் கட்டளையிட்டான்.
நோப்பில் ஆசாரியர்களாக இருந்த அகி
மெலேக்கின் உறவினர்களையும் அழைத்து
வர கட்டளையிட்டான். அகிமெலேக்கின்

உறவினர்களும் நோப்பில் ஆசாரியர்களாக
இருந்தார்கள். அனைவரும் அரசனிடம்
வந்தார்கள். 12சவுல் அகிமெலேக்கிடம்,
“அகிதூபின் மகனே! கவனி” என்றான்.
அவன், “சரி ஐயா” என்றான்.
13சவுல் அகிமெலேக்கிடம், “நீயும் ஈசாயின்
மகனான தாவீதும் சேர்ந்து எனக்கு எதிராக
ஏன் இரகசிய திட்டமிட்டீர்கள்? நீ அவ
னுக்கு அப்பமும் பட்டயமும் கொடுத்தி
ருக்கிறாய்! அவனுக்காக தேவனிடம் ஜெபம்
செய்திருக்கிறாய்? இப்போது, தாவீது என்
னைத் தாக்குவதற்குத் தயாராக இருக்கி
றான்!” என்றான்.
14அதற்கு அகிமெலேக்கு, “உங்களிடம்
தாவீது உண்மையுள்ளவனாக இருக்கிறான்.
உங்கள் அதிகாரிகளில் எவரும் அவனைப்
போன்றவர்கள் இல்லை. அவன் உமது
சொந்த மருமகன். அவன் உமது கட்டளை
களுக்கு விசுவாசத்தோடு அடிபணிகிறான்.
உமது குடும்பம் அவனை மதிக்கிறது.
15நான் தாவீதிற்காக தேவனிடம் ஜெபம்
செய்வது முதல் முறையன்று, இல்லவே
இல்லை. என்னையோ, என் உறவினர்
களையோ இதற்காகப் பழி சுமத்த
வேண்டாம். நாங்கள் உமது சேவகர்கள்,
நீர் சொல்லும் காரியங்கள் நடந்து கொண்
டிருப்பதைப் பற்றி எங்களுக்கு ஒன்றும்
தெரியாது” என்றான்.
16ஆனால் அரசனோ, “அகிமெலேக்கே,
நீயும் உனது உறவினர்களும் மரிக்க
வேண்டும்!” என்றான். 17பிறகு அவன்
தன் காவலர்களைப் பார்த்து, “போய்,
கர்த்தருடைய ஆசாரியர்களைக் கொல்லுங்
கள். ஏனென்றால், அவர்கள் தாவீதின்
பக்கம் இருக்கிறார்கள், அவன் தப்பித்துப்
போனதை அறிந்தும், அவர்கள் என்னிடம்
சொல்லவில்லை!” என்றான்.
ஆனால், கர்த்தருடைய ஆசாரியர்களைக்
கொல்ல அதிகாரிகள் மறுத்து விட்டனர்.
18எனவே, அரசன் தோவேக்கிற்கு கட்ட
ளையிட்டான். “தோவேக், நீ போய்
ஆசாரியர்களைக் கொன்றுவிடு” என்றான்.
எனவே, அவன்போய் ஆசாரியர்களைக்
கொன்றான். அன்று 85 ஆசாரியர்கள்
அவனால் கொல்லப்பட்டனர். 19நோவாப்
ஆசாரியர்களின் நகரமாக இருந்தது. அங்
குள்ள அனைவரையும் கொன்றான். அவன்
ஆண்கள், பெண்கள், குழந்தைகள், கைப்
பிள்ளைகள் என அனைவரையும் வாளால்
கொன்றுப் போட்டான். அதோடு அவன்
பசுக்கள், கழுதைகள், ஆடுகள் ஆகியவற்றை
யும் கொன்றான்.
20ஆனால், அபியத்தார் தப்பித்தான்.
அவன் அகிதூபின் மகனான அகிமெலேக்
கின் மகன். இவன் ஓடிப்போய் தாவீதோடு
சேர்ந்துக் கொண்டான். 21அவன் தாவீதிடம்
சவுல் கர்த்தருடைய ஆசாரியர்களைக்
கொன்றுப் போட்டதைக் கூறினான். 22பின்
தாவீது அவனிடம், “நான் ஏதோமியனாகிய
தோவேக்கை அன்று பார்த்தேன். அவன்
சவுலிடம் சொல்வான் என்றும் தெரியும்!
எனவே உன் தந்தையும் மற்றவர்களும்
மரித்துப்போனதற்கு நானே பொறுப்பு.
23சவுல் உன்னை மட்டுமல்ல என்னையும்
கொல்ல விரும்புகிறான். பயப்படாதே, என்
னோடு பாதுகாப்பாக இருக்கலாம்” என்
றான்.

கேகிலாவில் தாவீது

23 ஜனங்கள் தாவீதிடம், “பாருங்கள்,
பெலிஸ்தியர்கள் கேகிலாவிற்கு எதி
ராகப் போரிடுகிறார்கள். அவர்கள் அறு
வடை களத்திலிருந்து தானியங்களைக்
கொள்ளையிடுகிறார்கள்” என்றனர்.
2உடனே தாவீது கர்த்தரிடம், “நான்
போய் பெலிஸ்தியர்களோடு போரிடட்
டுமா?” என்று கேட்டான்.
கர்த்தர், “ஆமாம், நீ பெலிஸ்தியர்களோடு
போரிட்டு கேகிலாவைக் காப்பாற்று” என்று
பதிலுரைத்தார்.
3ஆனால் தாவீதைச் சேர்ந்தவர்கள்,
“பாருங்கள், யூதாவில் உள்ள நாங்களே
பயந்து போயுள்ளோம். பெலிஸ்தியர்கள்
இருக்கும் இடத்திற்குப் போனால் எவ்வளவு
பயப்படுவோம் என எண்ணிப்பாரும்”
என்றனர்.
4தாவீது மீண்டும் கர்த்தரிடம் கேட்டான்.
கர்த்தர், “கேகிலாவிற்குப் போ. பெலிஸ்தியர்
களை வெல்ல நான் உதவுவேன்” என்றார்.
5எனவே தாவீதும் அவனது ஆட்களும்
கேகிலாவிற்குச் சென்றனர். அவர்கள்
பெலிஸ்தியரோடு சண்டையிட்டுத் தோற்
கடித்து, அவர்களின் மந்தைகளைக்
கவர்ந்துக் கொண்டனர். இவ்வாறு, தாவீது
கேகிலாவைக் காப்பாற்றினான். 6(அபியத்
தார் தாவீதிடம் ஓடிப்போனபோது, அவன்
தன்னோடு ஏபோத்தையும் கொண்டு சென்
றான்.)
7ஜனங்கள் சவுலிடம் வந்து தாவீது
கேகிலாவில் இருப்பதை அறிவித்தனர்.
அதற்குச் சவுல், “தேவன் தாவீதை எனக்குக்
கொடுத்தார்! அவன் தானே வலைக்குள்
விழுந்திருக்கிறான். அவன் பூட்டிப்போடக்
கூடிய கோட்டைக் கதவுகளை உடைய
நகரத்திற்குள் போய்விட்டான்” என்றான்.
8சவுல் தனது படைவீரர்களைப் போரிடு
வதற்காகக் கூட்டினான். அவர்கள் கேகிலா
விற்குச் சென்று தாவீதையும் அவனது
ஆட்களையும் தாக்கத் தயாரானார்கள்.
9தனக்கு எதிரான சவுலின் திட்டங்களைத்
தாவீது அறிந்துக்கொண்டான். பிறகு
ஆசாரியனாகிய அபியத்தாரிடம், “ஏபோத்
தைக் கொண்டு வா” என்றான்.
10தாவீது, “இஸ்ரவேலின் தேவனாகிய
கர்த்தாவே, எனக்காக சவுல் இந்நகரத்திற்கு

வந்து அதை அழிக்கப்போவதாக அறிந்தேன்.
11சவுல் கேகிலாவிற்கு வருவாரா? இங்குள்ள
ஜனங்கள் என்னைச் சவுலிடம் ஒப்படைப்
பார்களா? இஸ்ரவேலரின் தேவனாகிய
கர்த்தாவே! நான் உமது தாசன்! தயவுசெய்து
சொல்லும்!" என்று வேண்டினான்.
"சவுல் வருவான்" என்று கர்த்தர் பதிலு
ரைத்தார்.
12மீண்டும் தாவீது, "என்னையும் எனது
ஆட்களையும் கெய்லா ஜனங்கள் சவுலிடம்
ஒப்படைத்து விடுவார்களா?" என்று
கேட்டான்.
"அவர்கள் செய்வார்கள்" என்று கர்த்தர்
சொன்னார்.
13எனவே தாவீதும் அவனது ஆட்களும்
கேகிலாவை விட்டு விலகினார்கள். அவ
னோடு 600 பேர் சென்றனர். அவர்கள்
ஒவ்வொரு இடமாக நகர்ந்தனர். கேகி
லாவிலிருந்து தாவீது தப்பிவிட்டதை சவுல்
அறிந்தான், எனவே அவன் அந்நகரத்திற்குப்
போகவில்லை.

சவுல் தாவீதைத் துரத்துகிறான்

14பாலைவனத்தின் கோட்டைகளில்
தாவீது மறைந்திருந்தான். அவன் சீப் பாலை
வனத்தில் உள்ள மலை நகரத்திற்குச் சென்
றான். ஒவ்வொரு நாளும் சவுல் தாவீதைத்
தேடினான். ஆனால் சவுல் தாவீதைப்
பிடிக்கும்படி கர்த்தர் அனுமதிக்கவில்லை.
15சீப் பாலைவனத்தில் உள்ள ஓரேஷில்
தாவீது இருந்தான். சவுல் அவனைக் கொல்ல
முயன்றதால் அவன் பயந்தான். 16ஆனால்
சவுலின் மகனான யோனத்தான் ஓரேஷில்
தாவீதைச் சந்தித்தான் தேவனில்உறுதியான
நம்பிக்கையை வைக்கும்படி யோனத்தான்
தாவீதுக்கு உதவினான். 17யோனத்தான்,
"பயப்படாதே என் தந்தையான சவுல்
உன்னைக் கொல்லமாட்டார். நீ இஸ்ர
வேலின் அரசனாவாய். நான் உனக்கு
அடுத்தவனாக இருப்பேன். இதுவும் என்
தந்தைக்குத் தெரியும்" என்றான்.
18யோனத்தானும், தாவீதும் கர்த்தருக்கு
முன்னால் ஒரு ஒப்பந்தம் செய்துக் கொண்ட
னர். யோனத்தான் தன் வீட்டிற்குப் போக,
தாவீது ஓரேஷிலேயே தங்கினான்.

சீப்பிலுள்ள ஜனங்கள் தாவீதைப் பற்றி சவுலிடம் சொல்கின்றனர்

19சீப்பிலுள்ள ஜனங்கள் சவுலைப் பார்க்க
கிபியாவிற்குச் சென்றனர். அவர்கள், "எங்
கள் பகுதியில்தான் தாவீது ஒளிந்திருக்கி
றான். அவன் ஆகிலா மேட்டில் உள்ள,
ஓரேஷ் கோட்டைக்குள் இருக்கிறான். அது
யெஷிமோனின் தெற்கில் உள்ளது. 20இப்
போது அரசே, நீர் விரும்பும் எந்தக்
காலத்திலும் இறங்கி வாரும். தாவீதை
உங்களிடம் ஒப்படைப்பது எங்கள் கடமை"
என்றார்கள்.
21சவுலோ, "எனக்கு உதவினதற்காக
கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார். 22போய்,
அவனைப்பற்றி அதிகமாகத் தெரிந்துக்
கொள்ளுங்கள். தாவீது எங்கே தங்கியிருக்கி
றான்? அவனை யார் யார் வந்து சந்திக்
கின்றனர். 'தாவீது தந்திரக்காரன். அவன்
என்னை ஏமாற்ற விரும்புகிறான்' என்று
நினைத்தான். 23தாவீது ஒளிந்துள்ள எல்லா
இடங்களையும் அறிந்துகொள்ளுங்கள். பின்
என்னிடம் வந்து எல்லாவற்றையும் கூறுங்
கள். பின் நான் உங்களோடு வருவேன்.
தாவீது அந்தப் பகுதியில் இருந்தால் அவ
னைக் கண்டுப் பிடிப்பேன். யூதாவில் உள்ள
அனைத்துக் குடும்பங்களிலும் அவனைத்
தேடிக் கண்டுப் பிடிப்பேன்" என்றான்.
24பின்னர் சீப்பிலுள்ள ஜனங்கள் திரும்பிப்
போனார்கள். சவுல் தாமதமாகப் போனான்.
தாவீதும் அவனது ஆட்களும் மாகோன்
பாலைவனத்தில் இருந்தனர். அவர்கள்
இருந்த பகுதி எஷிமோனின் தென் பகுதியில்
இருந்தது. 25சவுல் தன் ஆட்களோடு தாவீ
தைத் தேடிச் சென்றான். சவுல் தேடுவதாக
ஜனங்கள் தாவீதை எச்சரித்தனர். அதனால்
மாவோனில் உள்ள "கன்மலையில்" தாவீது
இறங்கினான். சவுல் இதனை அறிந்து அங்
கும் தாவீதைத் தேடிப்போனான்.
26சவுல் மலையின் ஒரு பகுதியில் இருந்த
போது தாவீதும் அவனது ஆட்களும் அடுத்த
பகுதியில் இருந்தனர். தாவீது சவுலை
விட்டு விரைவாக விலகினான். சவுலும்
அவனது ஆட்களும் மலையைச் சுற்றிப்
போய் தாவீதையும் அவனது ஆட்களையும்
பிடிக்க முயன்றனர்.
27அப்போது, ஒரு தூதுவன் சவுலிடம்
வந்து, "வேகமாக வாருங்கள்! பெலிஸ்தியர்
நம்மை தாக்கப் போகின்றனர்!" என்றான்.
28எனவே சவுல் தாவீதைத் துரத்துவதை
விட்டு பெலிஸ்தியரோடு சண்டையிடப்
போனான். எனவே ஜனங்கள் இந்த
மலையை "வழுக்கும் பாறை" அல்லது
சேலா "அம்மாலிகோத்" என்று அழைக்கின்
றனர். 29தாவீது அவ்விடத்தைவிட்டு என்கே
தியிலுள்ள கோட்டைகளுக்குச் சென்றான்.

தாவீது முன் சவுலின் அவமானம்

24 சவுல் பெலிஸ்தியரை விரட்டின
பின்பு, "தாவீது என்கேதி அருகி
லுள்ள பாலைவனப் பகுதியில் இருக்கிறான்"
என்று ஜனங்கள் அறிவித்தனர்.
2எனவே, சவுல் இஸ்ரவேலரில் 3,000
பேரைத் தேர்ந்தெடுத்தான். அவர்களை கூட்
டிக்கொண்டு தாவீதையும் அவனது ஆட்
களையும் காட்டு ஆடுகள் உள்ள பாறைப்
பகுதிகளில் தேடினான். 3சவுல் சாலை

யோரத்தில் இருந்த ஆட்டுத் தொழுவத்திற்கு
வந்தான். அதன் அருகில் ஒரு குகை
இருந்தது. சவுல் அதனுள்ளே தீட்டுக்கழிக்கச்
சென்றான். அதன் பின் பகுதியில் தாவீதும்
அவனது ஆட்களும் ஒளிந்திருந்தனர். 4தாவீ
திடம் அவனது ஆட்கள், “கர்த்தர் சொன்ன
நாள் இதுவே! கர்த்தர், ‘நான் உனது
பகைவனை உன்னிடம் தருவேன். நீ
அவனை என்ன வேண்டுமானாலும்
செய்துக்கொள்’ என்று சொல்லியிருக்கி
றார்” என்றார்கள்.

தாவீது சவுலின் அருகில் ஊர்ந்து
சென்றான். சவுலின் சால்வை நுனியை
அறுத்தான். அதனைச் சவுல் கவனிக்க
வில்லை. 5பின்னர் இதற்காக தாவீது
வருத்தப்பட்டான். 6தாவீது தன் ஆட்களிடம்,
“மீண்டும் நான் என் எஜமானனுக்கு
இதுபோல் செய்துவிடாமல் கர்த்தர்தான்
தடுக்கவேண்டும். சவுல் கர்த்தரால் தேர்ந்
தெடுக்கப்பட்ட அரசன். அவருக்கு எதிராக
நான் எதுவும் செய்ய மாட்டேன்!” என்
றான். 7தாவீது தனது ஆட்களையும்
சவுலுக்குத் தீமை செய்துவிடாமல் பார்த்துக்
கொண்டான்.

சவுலும் அந்த குகையை விட்டு
வெளியேறிச் சென்றான். 8தாவீது வெளியே
வந்து சவுலைப் பார்த்து, “என் ஆண்ட
வனாகிய அரசனே!” என்று சத்தமிட்டான்

தாவீது தரையில் முகம் குப்புற
வணங்குவதை சவுல் திரும்பிப் பார்த்தான்.
9தாவீது சவுலிடம், “உமக்குத் தீங்கிழைக்கத்
தாவீது திட்டமிடுகிறான்” என்று ஜனங்கள்
சொல்வதை ஏன் காது கொடுத்துக்
கேட்கிறீர்? 10நான் உமக்குத் தீமை செய்ய
விரும்பவில்லை! இதனை உமது கண்
களாலேயே பார்க்கலாம்! இன்று கர்த்தர்
உம்மைக் குகைக்குள் அனுப்பினார். ஆனால்
நான் உம்மைக் கொல்ல மறுத்து விட்டேன்.
உம் மீது இரக்கம் கொண்டேன். நானோ,
‘நான் என் எஜமானனுக்குத் தீமை செய்ய
மாட்டேன்! சவுல் கர்த்தரால் தேர்ந்தெடுக்கப்
பட்ட அரசன்!’ என்று கூறினேன். 11என்
கையிலுள்ள இந்தத் துண்டுத் துணியைப்
பாரும். இதனை உமது சால்வை நுனியில்
இருந்து வெட்டி எடுத்தேன். நான் உம்மை
கொன்றிருக்கலாம்! நான் அப்படிச் செய்ய
வில்லை! இதனை நீர் புரிந்துக்கொள்ள
வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.
நான் உமக்கு எதிராக எந்த தீமையும்
செய்யவில்லை என்பதை நீங்கள்
புரிந்துகொள்ள வேண்டும்! நான் உமக்கு
எதிராக எதுவும் செய்யவில்லை. ஆனால்
நீர் என்னை வேட்டையாடிக் கொல்லப்
பார்க்கிறீர். 12கர்த்தர் தாமே இதில்
தீர்ப்பளிக்கட்டும்! நீர் எனக்குச் செய்த
தீமைக்குத் தக்கதாக கர்த்தர் உம்மை தண்
டிக்கக் கூடும். ஆனால், நான் உமக்கு
எதிராகச் சண்டையிடமாட்டேன்.

13 ‘கெட்ட ஜனங்களிடமிருந்தே
கெட்டவை வருகின்றன’
என்பது பழமொழி.

நான் எவ்வித தீமையும் செய்யவில்லை!
நான் கெட்டவன் அல்ல! நான் உமக்குத்
தீமை செய்யமாட்டேன்! 14நீர் யாரைத்
தேடுகிறீர்? இஸ்ரவேல் அரசர் யாரோடு
சண்டையிட அலைகிறார்? உமக்குத் தீமை
செய்யும் உமது எதிரியைத் தேடவில்லை!
ஒரு மரித்த நாயை, தெள்ளுப்பூச்சியைத்
தேடி அலைகிறீர்கள். 15கர்த்தர் தாமே
தீர்ப்பளிக்கட்டும். நம் இருவரையும் பற்றி
அவர் முடிவு செய்யட்டும். நான் சொல்வது
சரி என்று கர்த்தருக்குத் தெரியும். அவர்
எனக்கு உதவுவார். கர்த்தர் உம்மிடமிருந்து
என்னைக் காப்பாற்றுவார்” என்றான்.

16தாவீது பேசி முடித்ததும் சவுல், “இது
உன் குரல் தானா என் மகனாகிய தாவீதே?”
என்று சொல்லி கதறி அழுதான். 17அவன்,
“நீ சரியானவன். நான் தவறானவன். நீ
என்னிடம் நல்லபடியாக இருக்க நான்
உன்னிடம் தவறாக நடந்துக் கொண்டேன்.
18நீ எனக்குச் செய்த நன்மைகளைப் பற்றிக்
கூறினாய். கர்த்தர் என்னை உன்னிடம்
ஒப்படைத்தார், நீ என்னைக் கொல்ல
வில்லை. 19இது நான் உன் எதிரி அல்ல
என்பதைக் காட்டும். எவனும் தன் எதி
ரியைப் பிடித்தால் எளிதில் விடமாட்டான்,
இன்று எனக்கு நீ செய்த நன்மைக்காக
கர்த்தர் உனக்குப் பதிலளிப்பார்! 20நீ புதிய
அரசனாவாய் என்பது எனக்குத் தெரியும்.
நீ இஸ்ரவேல் சாம்ராஜ்யத்தை ஆளுவாய்.
21இப்போது எனக்கொரு சத்தியம் செய்துக்
கொடு. எனது சந்ததியாரைக் கொல்ல
மாட்டேன் என்று கர்த்தருடைய பேரில்
சத்தியம் செய். என் தந்தையின் குடும்பத்தி
லிருந்து என் பெயரையும் அழிக்காமல்
இருக்க வேண்டும்” எனக் கேட்டுக்
கொண்டான்.

22எனவே தாவீதும் தான் சவுலின்
குடும்பத்தாரைக் கொல்லமாட்டேன் என்று
சவுலிடம் சத்தியம் செய்தான். சவுல் தன்
வீட்டிற்குத் திரும்பினான். தாவீதும் அவனது
ஆட்களும் கோட்டைக்குப் போனார்கள்.

தாவீதும், நாபால் எனும் முட்டாளும்

25 சாமுவேல் மரித்தான். அவனது
மரணத்திற்காக அனைத்து இஸ்ர
வேலரும் கூடித் தங்கள் வருத்தத்தைத்
தெரிவித்துக் கொண்டனர். ராமாவில் உள்ள
வீட்டில் அவனை அடக்கம் செய்தனர். பின்
பாரான் பாலைவனத்துக்கு தாவீது
போனான்.

2மாகோனில் ஒரு செல்வந்தன் இருந்தான்.
அவனிடம் 3000 ஆடுகளும் 1000 வெள்ளாடு

களும் இருந்தன. அவன் கர்மேலில் இருந்துக்
கொண்டு தன் வியாபாரத்தைக் கவனித்து
வந்தான். அவன் ஆடுகளுக்கு மயிர் கத்தரிக்க
அங்கே போய் வருவான். 3இவனது பெயர்
நாபால்,* இவன் காலேபின் குடும்பத்தவன்.
இவனது மனைவி அபிகாயில் புத்திசாலித்
தனமும் அழகும் கொண்டவள். ஆனால்
நாபால் அற்பனாகவும் கொடூரமானவனாக
வும் இருந்தான்.
4பாலைவனத்தில் நாபால்தன் ஆடுகளுக்கு
மயிர் கத்தரிப்பதாக தாவீது அறிந்து
கொண்டான். 5அவனோடு பேச, தாவீது
10 இளைஞர்களை அனுப்பினான். அவர்
களிடம், “கர்மேலுக்குப் போங்கள்,
நாபாலைக் கண்டு எனக்காக வாழ்த்துச்
சொல்லுங்கள்” என்றான். 6தாவீது
நாபாலுக்கு இந்தச் செய்தியையும் சொல்லி
அனுப்பினான், “நீயும் உனது குடும்பத்தாரும்
நலமென்று நம்புகிறேன். உனக்குரிய
அனைத்தும் நலமென்று நம்புகிறேன். 7நீ
மயிர் கத்தரிப்பதாக அறிந்தேன். கொஞ்ச
நேரம் உனது மேய்ப்பர்கள் எங்களோடு
இருக்கையில், அவர்களுக்கு நாங்கள் தீங்கு
செய்யவில்லை. அவர்கள் கர்மேலில்
இருக்கும்வரை அவர்களிடமிருந்து எதையும்
எடுக்கவில்லை. 8உன் வேலைக்காரரிடம்
கேட்டுப்பார். அவர்கள் உண்மையைக்
கூறுவார்கள். என் இளைஞரிடம் கருணை
யோடு இரு. இந்த மகிழ்ச்சியான நேரத்தில்
உன்னிடம் வந்திருக்கிறோம். உன்னால்
முடிந்ததை இவர்களுக்குக் கொடு. இதை
எனக்காகவும் உனது நண்பன்* தாவீதிற்காக
வும் செய்” என்றான்.
9தாவீதின் ஆட்கள் நாபாலிடம் சென்றனர்.
தாவீதின் செய்தியைச் சொன்னார்கள்.
10ஆனால் நாபால் அவர்களிடம் முரட்டுத்தன
மாக நடந்துக்கொண்டான். அவன், “தாவீது
யார்? இந்த ஈசாயின் மகன் யார்? இந்
நாட்களில் பல அடிமைகள் தம் எஜ
மானர்களை விட்டு ஓடிப்போகிறார்கள்!
11என்னிடம் அப்பமும் தண்ணீரும் உள்ளன.
மயிர் கத்தரித்தவர்களுக்காக, நான் ஆட்டைக்
கொன்று சமையல் செய்திருக்கிறேன்.
ஆனால், அதை எனக்கு முன் பின் அறி
யாதவர்களுக்காக கொடுக்க மாட்டேன்!”
என்றான்.
12தாவீதின் இளைஞர் திரும்பி வந்து
நாபால் சொன்னவற்றை சொன்னார்கள்.
13அதற்கு தாவீது, “உங்கள் பட்டயங்களை
எடுத்துக் கொள்ளுங்கள்!” என்றான். தாவீ
தும் அவனது ஆட்களும் தங்கள்
பட்டயங்களை எடுத்தனர். அவனோடு 400
பேர் சென்றனர். மீதி 200 பேர் தங்கள்
பொருட்களுக்கருகில் அங்கேயே தங்கினார்
கள்.

அபிகாயில் ஆபத்தைத் தவிர்க்கிறாள்

14நாபாலின் வேலைக்காரரில் ஒருவன்
நாபாலின் மனைவியாகிய அபிகாயிலிடம்
பேசி, “நமது எஜமானர் நாபாலைப்
பாராட்டும்படி தாவீது தன் தூதுவர்களை
அனுப்பினார். ஆனால் நாபால் அவர்களிடம்
அற்பமாக நடந்துகொண்டான். 15அவர்கள்
நமக்கு மிகவும் வேண்டியவர்கள். நாம்
வயல்களில் ஊருக்கு வெளியே இருந்தோம்.
தாவீதின் ஆட்கள் எப்போதும் நம்மோடு
தங்கி இருக்கையில். அவர்கள் நமக்குத்
தீமை செய்யவில்லை! அவர்கள் நமக்குரிய
வற்றை ஒருபோதும் திருடவில்லை! 16இரவும்
பகலும் தாவீதின் ஆட்கள் நம்மைக்
காப்பாற்றினார்கள். நம்மைச் சுற்றிலும்
அவர்கள் சுவர்களைப்போன்று காவலாக
இருந்தார்கள். நாம் மந்தைகளை நடத்திச்
செல்லும்போது உதவுவார்கள். 17இப்போது
சிந்தித்துப் பார்த்து நாம் என்ன செய்யலாம்
என்று முடிவு செய்யுங்கள். நாபால் தன்
காரியங்களைப் பேசினது அறிவீனமாய்
இருக்கிறது! இப்போது நமது எஜமான
னுக்கும் அவனது வீட்டில் உள்ளவர்
களுக்கும் ஆபத்து வந்துகொண்டிருக்கிறது”
என்றான்.
18இதைக் கேட்டதும், அபிகாயில் அவசர
மாக 200 அப்பத்துண்டுகளையும், 2
திராட்சைரசப்பைகளையும், 5 சமைத்த
ஆடுகளையும், 5 படி வறுத்த பயிரையும்,
வற்றலான 100 திராட்சைக் குலைகளையும்,
வற்றலான 200 அத்திப்பழ அடைகளையும்
எடுத்துக் கொண்டாள். அவற்றைக் கழுதை
யின் மேல் ஏற்றினாள். 19பின் அவள்
தன் வேலைக்காரனிடம், “நீ போ. நான்
உன்னை பின் தொடர்ந்து வருகிறேன்”
என்றாள். ஆனால் அவளோ கணவனிடம்
அதைச் சொல்லவில்லை.

20அவள் கழுதையின் மேல் சவாரி செய்து
மலையின் அடுத்தப் பகுதிக்கு வந்தாள். எதிர்
திசையிலிருந்து வந்துகொண்டிருந்த
தாவீதையும் அவனது ஆட்களையும் சந்தித்
தாள்.
21தாவீது அபிகாயீலைச் சந்திக்கும் முன்,
“நான் இந்தப் பாலைவனத்தில் நாபாலின்
சொத்துக்களைக் காப்பாற்றினேன். அவனது
ஆடுகள் எதுவும் தவறிப்போகாது என
நான் உறுதி செய்தேன், நான் பிரதிபலனை
எதிர்பார்த்துச் செய்யவில்லை! அவனுக்கு
நன்மைகளைச் செய்தேன் ஆனால் அவன்
என்னிடம் தவறாக நடந்துக் கொண்டான்.
22நாளைக் காலைக்குள் நாபாலின்
குடும்பத்தில் உள்ள ஒருவரையாவது உயி
ரோடு விட்டு வைத்தால் தேவன் என்னைத்
தண்டிப்பார்” என்று சொல்லியிருந்தான்.

நாபால் இந்த பெயருக்கு “முட்டாள்தனம்” என்று பொருள்.

நண்பன் எழுத்தின் பிரகாரமாக, “மகன்” எனப் பொருள்படும்.

23அந்த நேரத்தில் தான் அபிகாயில்
வந்து சேர்ந்தாள். அவள் தாவீதைப் பார்த்த
தும் கழுதையிலிருந்து இறங்கி தரையில்
முகம்படும்படி குனிந்து தாவீதின் முன்பு
நின்றாள். 24அபிகாயீல் அவன் காலில்
விழுந்து, "ஐயா, உங்களோடு பேச
தயவுசெய்து என்னை அனுமதியுங்கள். நான்
சொல்வதை தயவுசெய்து கேளுங்கள்.
நடந்தவற்றிற்கு என்னைப் பழிவாங்குங்கள்.
25நீங்கள் அனுப்பினவர்களை நான்
பார்க்கவில்லை. பயனற்றக் கொடிய மனித
னாகிய நாபாலிடம் கவனம் செலுத்தா
திருங்கள். அவன் தன் பெயரைப்போலவே
'அறிவீனனாக' இருக்கிறான். 26அப்பாவி
ஜனங்களைக் கொல்வதினின்றும் கர்த்தர்
உங்களை விலக்கட்டும். கர்த்தருடைய
ஜீவன் பேரிலும் உங்கள் ஜீவன் பேரிலும்,
உங்களுடைய பகைவர்களும், நாபாலைப்
போன்று உமக்குத் தீமை செய்பவர்களும்
அழிந்துப்போவார்கள் என நம்புகிறேன்.
27இப்போது, உங்களுக்கு இந்த அன்பளிப்பு
களைக் கொண்டு வந்திருக்கிறேன். இவற்றை
உங்கள் மனிதர்களுக்கு கொடுங்கள். 28நான்
தவறு செய்தால் மன்னித்து விடும். உங்கள்
குடும்பத்தை கர்த்தர் பெலப்படுத்துவார்
என்று எனக்குத் தெரியும். உங்கள்
குடும்பத்தில் இருந்து பல அரசர்கள்
புறப்படுவார்கள். நீங்கள் கர்த்தருக்காகப்
போர் செய்து வருவதால் அவர் இதனை
உமக்காகச் செய்வார்! நீங்கள் வாழ்கின்ற
காலம்வரை ஜனங்கள் உங்களிடம் எந்தக்
குறையும் காணமாட்டார்கள். 29எவராவது
உங்களைக் கொல்வதற்குத் தொடர்ந்து
வந்தால் உங்கள் தேவனாகிய கர்த்தர்
உங்களைக் காப்பாற்றுவார்! ஆனால் உங்கள்
பகைவர்களைக் கர்த்தர் கவணில் உள்ள
கல்லைப்போன்று தூர எறிவார்!
30உங்களுக்குப் பல நன்மைகளைச் செய்யப்
போவதாக கர்த்தர் வாக்கு செய்துள்ளார்.
கர்த்தர் தமது வாக்கைக் காப்பாற்றுவார்!
தேவன் உம்மை இஸ்ரவேலரின் தலைவராக்
குவார். 31அப்பாவிகளைக் கொன்றப் பழி
உங்களுக்கு வரக்கூடாது. நீங்கள் அந்த
வலையில் விழக்கூடாது. கர்த்தர் உமக்கு
வெற்றிகளைத் தரும்போது என்னை
நினைத்துக்கொள்ளுங்கள்" என்றாள்.

32தாவீது அபிகாயீலிடம், "இஸ்ரவேலின்
தேவனாகிய கர்த்தரைப் போற்று, என்னிடம்
உன்னை அனுப்பியதற்காக தேவனைப்
போற்று. 33உனது நல்ல தீர்ப்புக்காக தேவன்
உன்னை ஆசீர்வதிக்கட்டும். இன்று அப்
பாவிகளைக் கொன்றுப் போடாமல்
என்னைக் காப்பாற்றினாய். 34இஸ்ரவேலின்
தேவனாகிய கர்த்தருடைய ஜீவனைக்
கொண்டு சத்தியமாகக் கூறுகிறேன், நீ
இவ்வளவு விரைவாக வந்து என்னைச்
சந்திக்காமல் இருந்தால் நாளை விடி
வதற்க்குள் நாபாலின் குடும்பத்தில் ஒருவன்
கூட உயிரோடு இருந்திருக்கமாட்டார்கள்"
என்றான்.

35பிறகு தாவீது, அபிகாயீலின் அன்ப
ளிப்புகளை ஏற்றுக்கொண்டான். அவளிடம்,
"வீட்டிற்குச் சமாதானமாகப் போ. உனது
வேண்டுகோளை ஏற்று உன் விருப்பப்
படியே செய்வேன்" என்றான்.

நாபாலின் மரணம்

36அபிகாயீல் நாபாலிடம் திரும்பிப்
போனாள். அவன் தன் வீட்டில் ஒரு
அரசனைப் போன்று உணவு உண்டு
கொண்டிருந்தான். நன்றாக குடித்து
போதையில் சுகபோகமாக இருந்தான்.
எனவே அபிகாயீல் விடியும்வரை அவ
னிடம் எதுவும் சொல்லவில்லை. 37மறுநாள்
காலையில் நாபால் போதை தெளிந்தபோது.
அவனது மனைவி அவனிடம் நடந்ததைக்
கூறினாள். அவனுக்கு நெஞ்சுவலி ஏற்பட்டு,
அவனது உடல் பாறையாக இறுகியது!
38பத்து நாட்களில் கர்த்தர் அவனை மரிக்கச்
செய்தார்.

39நாபால் மரித்துப்போனதை தாவீது
கேள்விப்பட்டு, "கர்த்தரைப் போற்றுங்கள்!
நாபால் என்னைப்பற்றி அவதூறு சொன்
னான். கர்த்தர் எனக்கு உதவினார். நான்
தீமை செய்யாதப்படி கர்த்தர் என்னை
விலக்கினார். நாபால் கேடு செய்ததால்
கர்த்தர் அவனை மரிக்கச் செய்தார்"
என்றான்.

பிறகு தாவீது அபிகாயீலிடம் தனது
மனைவியாகுமாறு செய்தி அனுப்பினான்.
40தாவீதின் ஆட்கள் கர்மேலுக்குச் சென்று
அபிகாயீலிடம், "உங்களை அழைத்துவர,
தாவீது எங்களை அனுப்பினார். நீங்கள்
அவரது மனைவியாக வேண்டுமென்று
விரும்புகிறார்" என்றார்கள்.

41அபிகாயீல் தன் முகம் தரையில் படும்படி
வணங்கி, "நான் உங்கள் வேலைக்காரி.
உங்களுக்குச் சேவை செய்ய தயார். எனது
எஜமானனாகிய தாவீதின் வேலைக்காரரின்
பாதங்களையும் கழுவ ஆயத்தமாக
இருக்கிறேன்" என்றாள்.

42அவள் உடனே ஒரு கழுதையின் மீது
ஏறித் தாவீதின் ஆட்களுடன் புறப்பட்டாள்.
அவள் தன்னோடு 5 பணிப்பெண்களையும்
அழைத்து வந்து, தாவீதின் மனைவி
ஆனாள்.

43யெஸ்ரயேல் ஊரினவளாகிய அகினோ
வாளையும் தாவீது மணம் செய்து
கொண்டான். அகினோவாளும், அபி
காயீலும் தாவீதின் மனைவிகள். 44தாவீது
ஏற்கனவே சவுலின் மகளான மீகாளையும்
மணந்திருந்தான். ஆனால் சவுல் அவளை
எடுத்து கல்லீம் ஊரானாகிய லாயீசின்
மகனான பல்த்திக்கு மணமுடித்து கொடுத்து
விட்டிருந்தான்.

தாவீதும் அபிசாயும் சவுலின் முகாமிற்குள் நுழைகின்றனர்

26 சீப் ஜனங்கள் சவுலைப் பார்க்க
கிபியாவிற்குச் சென்றார்கள். அவர்
கள் சவுலிடம், "தாவீது ஆகிலா மேட்டில்
ஒளிந்திருக்கிறான். அந்த இடம் எஷிமோனை
அடுத்துள்ளது" என்று சொன்னார்கள்.
2 சவுல் சீப் பாலைவனத்திற்கு இறங்கிப்
போனான். சவுல் இஸ்ரவேல் முழுவதிலும்
இருந்து 3,000 வீரர்களைத் தேர்ந்தெடுத்தான்.
அவர்கள் பாலைவனத்தில் தாவீதைத் தேடி
னார்கள். 3 சவுல் ஆகிலா மேட்டில் தன்
முகாமை அமைத்திருந்தான். இது எஷிமோ
னிலிருந்து வரும் சாலைக்கு அருகில்
இருந்தது.
தாவீது அதே பாலைவனத்தில் தான்
தங்கியிருந்தான். சவுல் தன்னைத் தேடி
வந்திருப்பதை தாவீது அறிந்து கொண்
டான். 4 அவன் ஒற்றர்களை அனுப்பி சவுல்
ஆகிலாவிற்கு வந்து விட்டதையும் தெரிந்து
கொண்டான். 5 பிறகு தாவீது சவுலின்
முகாமிற்குச் சென்றான். அங்கே சவுலும்
அப்னேரும் தூங்குவதைக் கண்டான்.
(அப்னேர் சவுலின் படைத்தலைவனான
நேரின் மகன்) சவுல் முகாமின் மையத்தில்
தூங்கிக் கொண்டிருந்தான். அவனைச்
சுற்றிலும் படைவீரர்கள் இருந்தனர்.
6 ஏத்தியனாகிய அகிமெலேக்கிடமும்,
செருயாவின் மகனும் யோவாபின் சகோதர
னுமான அபிசாயிடமும் தாவீது பேசினான்,
"நான் சவுலின் முகாமிற்குப் போகிறேன்.
என்னோடு யார் வருகிறீர்கள்?" என்று
கேட்டான்.
அபிசாயோ, "நான் உங்களுடன் வருகி
றேன்" என்று பதிலுரைத்தான்.
7 இரவில் அவர்கள் அங்குச் சென்றார்கள்.
முகாமின் மையத்தில் சவுல் தூங்க, அவனது
தலைமாட்டில் அவனது ஈட்டி தரையில்
குத்தி வைக்கப்பட்டிருந்தது. அப்னேரும்
மற்ற வீரர்களும் சவுலைச் சுற்றிலும் தூங்கிக்
கொண்டிருந்தனர். 8 அபிசாய் தாவீதிடம்,
"உங்கள் எதிரியைத் தோல்வியுறச் செய்ய
தேவன் இன்று வாய்ப்பு அளித்துள்ளார்.
தரையோடு இவனை ஈட்டியால் ஒரே
குத்தாக குத்திவிடட்டுமா? ஒரே தடவையில்
அதைச் சாதிக்க என்னால் முடியும்!"
என்றான்.
9 ஆனால் தாவீது அபிசாயிடம், "சவுலைக்
கொல்லவேண்டாம்! கர்த்தரால் தேர்ந்தெடுக்
கப்பட்ட அரசனுக்கு யார் கேடு செய்தாலும்
அவர்கள் தண்டிக்கப்படுவார்கள்! 10 ஜீவிக்
கின்ற கர்த்தர் தாமே இவரைத் தண்டிப்பார்.
இவர் இயற்கையாகவும் மரிக்கலாம், அல்லது
போரில் கொல்லப்படலாம், 11 ஆனால்,
கர்த்தரால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசனுக்கு
என்னால் மரணம் வரும்படி கர்த்தர்
செய்யக்கூடாது! இப்போது ஈட்டியையும்
தண்ணீர் செம்பையும் எடுத்துக்கொண்டு
போவோம்" என்றான்.
12 சவுலின் தலைமாட்டில் இருந்த ஈட்டியை
யும், தண்ணீர்ச் செம்பையும் எடுத்துக்
கொண்டு தாவீது கிளம்பினான். பிறகு
தாவீதும், அபிசாயும் முகாமைவிட்டு வெளி
யேறினார்கள். நடந்தது என்னதென்று
யாருக்கும் தெரியவில்லை! யாரும் இதைப்
பார்க்கவுமில்லை, எழும்பவுமில்லை. கர்த்த
ரால் சவுலும் மற்ற வீரர்களும் நன்றாகத்
தூங்கிக் கொண்டிருந்தனர்.

மீண்டும் சவுலை தாவீது அவமானப் படுத்துகிறான்

13 பள்ளத்தாக்கின் மறு பக்கத்திற்கு தாவீது
கடந்து போனான். மலையின் உச்சியில்
நின்று கொண்டான். 14 அப்னேரிடமும், சவு
லின் வீரர்களிடமும் சத்தமான குரலில்,
"அப்னேர்! எனக்குப் பதில் சொல்"
என்றான்.
அப்னேரும், "நீ யார்? ஏன் அரசனை
அழைக்கிறாய்?" என்று கேட்டான்.
15 தாவீது, "நீ ஒரு மனிதன் தானே?
இஸ்ரவேலில் உள்ள பிற மனிதர்களைவிட
நீ சிறந்தவன் அல்லவா? நான் சொல்வது
சரி என்றால் பின் ஏன் உன் அரசனைக்
காக்கவில்லை? உன் அரசனைக் கொல்ல
ஒரு சாதாரண மனிதன் உன் கூடாரத்திற்கு
வந்தான். 16 நீ பெரிய தவறுச் செய்து
விட்டாய்! நீயும் உன் ஆட்களும் மரித்திருக்க
வேண்டும். கர்த்தரால் தேர்ந்தெடுக்கப்பட்ட
அரசனைப் பாதுகாக்கத் தவறிவிட்டீர்கள்.
உன் அரசனின் தலை மாட்டில் உள்ள
ஈட்டியும் தண்ணீர் செம்பும் எங்கே என்று
பாருங்கள்?" என்றான்.
17 சவுல் தாவீதின் சத்தத்தை அறிந்து
கொண்டான். "என் மகனே! தாவீது, இது
உனது குரலா?" என்று கேட்டான்.
அதற்கு தாவீது, "ஆமாம், என்
அரசனாகிய எஜமானே. என் குரலே தான்"
என்றான். 18 தாவீது மேலும், "ஐயா என்னை
ஏன் தேடுகிறீர்கள்? நான் என்ன தவறு
செய்தேன்? நான் என்ன குற்றவாளியா?
19 எனது எஜமானனாகிய அரசனே! நான்
சொல்வதைக் கவனியும்! என் மீது உமக்கு
கோபம் வரும்படி, கர்த்தர் செய்திருந்தால்
அதற்கு தகுந்த காணிக்கையை அவர்
ஏற்றுக்கொள்வாராக, மனிதர்கள் செய்தி
ருந்தால், அதற்கு கர்த்தர் அவர்களுக்குத்
தண்டனை அளிக்கட்டும். கர்த்தர் எனக்குக்
கொடுத்த நாட்டை விட்டுப் போகும்படி
மனிதர்கள் செய்து விட்டார்களே. 'போய்
அந்நியரோடு வாழு, அவர்களின் தெய்வங்
களுக்குச் சேவைசெய்' என்று மனிதர்கள்
சொல்லியிருக்கிறார்கள். 20 இப்போது கர்த்தரு
டைய சந்நிதிவிட்டு வெகு தூரத்தில் நான்
மரிக்கும்படி நீர் செய்யவேண்டாம். மலை
யில் ஒரு கவுதாரியை வேட்டையாடுவது

போன்று இஸ்ரவேலின் அரசன் ஒரு
தெள்ளுப்பூச்சியை வேட்டையாட வந்தா
ரோ?” என்று கேட்டான்.
21 பிறகு சவுல், “நான் பாவம் செய்து
விட்டேன். திரும்பி வா மகனே, என்
உயிர் உனக்கு முக்கியமானது என்பதை
எனக்குக் காட்டிவிட்டாய். இனிமேல்
உனக்குக் கேடு செய்ய முயலமாட்டேன்.
நான் அறிவீனமாக நடந்துக் கொண்டேன்.
நான் பெருந்தவறு செய்துவிட்டேன்”
என்றான்.
22 தாவீதோ, “இதோ, அரசனின் ஈட்டி
என்னிடம் உள்ளது. யாராவது ஒரு இளை
ஞன் வந்து பெற்றுக்கொள்ளட்டும். 23 கர்த்தர்
ஒவ்வொரு மனிதருக்கும், அவரவரின்
செயலுக்கு தக்க பலன் அளிக்கிறார்.
நீதியான காரியங்களை செய்பவர்களுக்கு
நன்மை தருகிறார், தீமை செய்பவர்களுக்கு
தண்டனையைத் தருகிறார். கர்த்தர் எனக்கு
இன்று உங்களைத் தோற்கடிக்க வாய்ப்பளித்
தார், ஆனால் நான் கர்த்தரால்
தேர்ந்தெடுக்கப்பட்ட அரசனுக்குக் கேடு
செய்யவில்லை. 24 இன்று உங்கள் வாழ்க்கை
எனக்கு முக்கியமானது என்பதைக்
காட்டினேன்! அதேபோல் கர்த்தரும் என்
வாழ்க்கை அவருக்கு முக்கியமானது என்று
காட்டுவார்! கர்த்தர் என்னை அனைத்து
துன்பங்களில் இருந்தும் காப்பார்” என்றான்.
25 பின் சவுல் தாவீதிடம், “தேவன்
உன்னை ஆசீர்வதிப்பார், என் மகனே. நீ
பெரியக் காரியங்களைச் செய்து, வாழ்வில்
பெரும் வெற்றியைப் பெறுவாய்” என்றான்.
தாவீது தன் வழியே போனான். சவுல்
தன் வீட்டிற்குத் திரும்பிப் போனான்.

பெலிஸ்தர்களோடு தாவீது வாழ்கிறான்

27 தாவீது தனக்குள், “என்றாவது சவுல்
என்னைப் பிடித்துக் கொல்லுவான்.
எனவே பெலிஸ்தரின் நாட்டிற்குத் தப்பிச்
செல்வதுதான் நான் இப்போது செய்ய
வேண்டியது. பிறகு சவுல் என்னை
இஸ்ரவேலில் தேடுவதை விட்டு விடுவான்.
இவ்வாறு தான் இவனிடமிருந்து தப்பிக்க
வேண்டும்” என்று நினைத்துக் கொண்
டான்.
2 எனவே தாவீதும், அவனது 600 ஆட்
களும் இஸ்ரவேலை விட்டு மாயோகின்
மகனான ஆகீஸிடம் சென்றனர். ஆகீஸ்
காத்தின் அரசன். 3 தாவீதும் அவனது
குடும்பமும் ஆட்களும் காத்தில் ஆகீஸோடு
வாழ்ந்தனர். தாவீதுடன் அவனது இரு
மனைவியரும் இருந்தனர். அவர்கள் யெஸ்ரே
லின் அகினோவாளும், கர்மேலின் அபிகாயீ
லும் ஆவார்கள். அபிகாயீல் நாபாலின்
விதவை. 4 தாவீது காத்துக்கு ஓடிப்போனதாக
ஜனங்கள் வந்து சவுலிடம் சொல்லவே,
அவனும் தாவீதைத் தேடுவதை விட்டு
விட்டான்.
5 ஆகீஸிடம் தாவீது, “என்னை உங்களுக்கு
பிடிக்குமானால், எனக்கு நாட்டிலுள்ள ஒரு
நகரத்தில் ஓரிடத்தைக் கொடுங்கள். நான்
உங்கள் வேலைக்காரன். நான் அங்கே
வாழ்வேன் உங்களோடு இத்தலைநகரத்தில்
வாழமாட்டேன்” என்றான்.
6 அன்றைதினம் ஆகீஸ் தாவீதிற்கு சிக்லாக்
நகரத்தைக் கொடுத்தான். அன்று முதல்
அந்நகரம்யூதாவின் அரசர்களுக்கு உரியதாய்
இருந்தது. 7 அங்கே தாவீது பெலிஸ்தர்களோடு
ஓராண்டும் நான்கு மாதமும் வாழ்ந்தான்.

அரசனான ஆகீஸை தாவீது ஏமாற்றுகிறான்

8 தாவீதும் அவனது ஆட்களும் கெசூரியர்,
கெர்சியர் மற்றும் அமலேக்கியர் ஆகி
யோர்க்கு எதிராக படையெடுத்தனர். பழங்
காலம் முதல் இவர்கள் தேலீம் அருகிலுள்ள
சூர் முதல் எகிப்துவரை பரந்துள்ள நாட்டில்
வாழ்ந்தனர். அவர்களைத் தோற்கடித்து செல்
வங்களை அபகரித்தான். 9 தாவீது அப்பகு
தியில் உள்ளவர்களையெல்லாம் தோற்கடித்
தான். அவர்களின் ஆடுகள், மாடுகள்,
கழுதைகள், ஒட்டகங்கள், ஆடைகள் போன்ற
வற்றைப் பறித்து ஆகீஸிடம் கொண்டு
வந்தான். யாரையும் அவன் உயிரோடு
விடவில்லை.
10 தாவீது இவ்வாறு பலமுறைச் செய்தான்.
ஆகீஸ் அவனிடம், ‘யாரோடு எங்கே
போரிட்டு இவற்றை எடுத்து வருகிறாய்?’
என்று கேட்டான். அதற்கு தாவீது, “நான்
யூதாவின் தென் பகுதியில் சண்டையிட்டு
வருகிறேன்” என்பான், அல்லது “நான்
யெராமியேலின் தென்பகுதியில் சண்டை
யிட்டேன்” என்பான், அல்லது “நான்
கேனியருடைய தென்பகுதியில் சண்டை
யிட்டேன்” என்பான். 11 தாவீது காத்திலி
ருந்து உயிரோடு ஆண் பெண் யாரையும்
ஒருநாளும் கொண்டு வந்ததில்லை,
“யாரையாவது உயிரோடு கொண்டு வந்தால்
அவர்கள் உண்மையைச் சொல்லிவிடலாம்”
என்று நினைத்தான்.
பெலிஸ்தர்களின் நாட்டில் இருக்கும்வரை
தாவீது இப்படி செய்து வந்தான். 12 ஆகீஸும்
தாவீதை நம்பினான். அவன் தனக்குள்ளே,
“இப்போது தாவீதின் சொந்த ஜனங்கள்
அவனை வெறுப்பார்கள். இஸ்ரவேலரும்
தாவீதை மிகவும் வெறுப்பார்கள். எனவே
தாவீது என்றும் எனக்கே சேவைச்
செய்வான்” என்று நினைத்துக்கொண்
டான்.

பெலிஸ்தர் போருக்குத் தயாராகுதல்

28 பிறகு பெலிஸ்தர்கள் இஸ்ரவேலுக்கு
எதிராகப் போரிட கூடினார்கள்.
ஆகீஸ் தாவீதிடம், “இப்போது நீயும் உனது
ஆட்களும் என்னோடு இஸ்ரவேலுக்கு

எதிராகச் சண்டையிட வரவேண்டும் என்று
அறிவாயா?" என்று கேட்டான்.
2தாவீது, "உறுதியாக! என்னால் என்ன
செய்ய முடியும் என்பதை நீங்களே
பார்ப்பீர்கள்!" என்றான்.
ஆகீஸும், "நல்லது நான் உன்னை எனது
மெய்க்காப்பாளனாக நியமிக்கிறேன். என்
றென்றும் என்னை நீ காப்பாற்றுவாய்"
என்றான்.

சவுலும் எந்தோரின் பெண்ணும்

3சாமுவேல் மரித்ததும், அனைத்து இஸ்ர
வேலரும் தங்கள் துக்கத்தை வெளிப்படுத்தி
னார்கள். சாமுவேலை அவனது தாய்
மண்ணான ராமாவில் அடக்கம் செய்திருந்
தனர். சவுல் மரித்தவர்களின் ஆவிகளோடு
பேசுகிறவர்களையும் ஆரூடம், குறி சொல்
கிறவர்களையும் நகரத்தில் இராதபடித்
துரத்தியிருந்தான்.
4பெலிஸ்தர் போருக்குத் தயாரானார்கள்.
அவர்கள் சூநேமிலே கூடி முகாமிட்டுத்
தங்கினார்கள்.சவுல் இஸ்ரவேலரையெல்லாம்
கூட்டி கில்போவாவில் முகாமிட்டான்.
5சவுல் பெலிஸ்தியரின் படையைப் பார்த்து
பயந்தான். அவன் மனதில் பயம் நிறைந்தது.
6சவுல் கர்த்தரிடம் ஜெபம் செய்தான்,
ஆனால் கர்த்தர் அவனுக்குப் பதில் சொல்ல
வில்லை. சவுலின் கனவிலும் தேவன்
பேசவில்லை. ஊரிம்* மூலமாகவோ,
தீர்க்கத்தரிசிகள் மூலமாகவோ தேவன் பதில்
சொல்லவில்லை. 7கடைசியாக சவுல் தனது
அதிகாரிகளிடம், "குறி பார்க்கிற ஒரு
பெண்ணை* அழைத்து வாருங்கள். போரின்
முடிவை அவள் மூலம் அறிந்துக்
கொள்வேன்" என்றான்.
அவனது அதிகாரிளோ, "எந்தோரிலே
குறி பார்ப்பவள் ஒருவள் இருக்கிறாள்"
என்றனர்.
8சவுல் தன்னை மறைத்து மாறுவேடத்தில்
போனான். அன்று இரவு சவுல் இரண்டு
ஆட்களோடு அந்தப் பெண்ணைச் சந்தித்
தான். அவன் அவளிடம், "நீ ஒரு ஆவியைக்
கூப்பிடு. நான் விரும்பி பேர் சொல்லுகிற
வனின் ஆவியை நீ அழைக்கவேண்டும்"
என்றான்.
9ஆனால் அந்தப் பெண்ணோ சவுலிடம்,
"சவுல் என்ன செய்தான் என்று உனக்குத்
தெரியும்! அவன் குறி பார்ப்பவர்கள்
எல்லாரையும் இஸ்ரவேல் நாட்டை விட்டுத்
துரத்திவிட்டான். நீயும் என்னை சூழ்ச்சி யின்
மூலம் குற்றத்தில் அகப்படுத்தி என்
னைக் கொல்லப் பார்க்கிறாய்" என்றாள்.
10சவுல் கர்த்தருடைய நாமத்தில் ஆணை
யிட்டான். "இதற்காக நீ தண்டிக்
கப்படமாட்டாய். இது கர்த்தருடைய ஜீவன்
மீது ஆணை" என்றான்.
11அப்பெண்ணோ சவுலிடம், "உனக்காக
யாரை வரவழைக்க நீ விரும்புகிறாய்?"
என்று கேட்டாள்.
அதற்கு அவன், "சாமுவேலின் ஆவியை"
என்றான்.
12அப்படியே ஆயிற்று! அப்பெண் சாமு
வேலின் ஆவியைப் பார்த்து மகா சத்தமாய்
கூப்பிட்டு, "நீ சூழ்ச்சி செய்துவிட்டாய்! நீ
தானே சவுல்" என்று கேட்டாள்.
13அரசன் அவளிடம், "பயப்படாதே! நீ
என்ன பார்க்கிறாய்?" எனக் கேட்டான்.
"நான் ஆவியொன்று பூமிக்குள்ளிருந்து*
வெளியே வருவதைப் பார்க்கிறேன்" என்
றாள்.
14சவுல் அவளிடம், "அந்த ஆவி
யாரைப்போல் இருக்கிறது?" என்று கேட்
டான்.
அதற்கு அப்பெண், "அது சிறப்பான
சால்வையைப் போர்த்திக்கொண்டு மிக
வயதான தோற்றத்தில் தெரிகிறது" என்றாள்.
அப்போது சவுலுக்கு அது சாமுவேலின்
ஆவி என்று புரிந்தது. சவுல் குனிந்து
வணங்கினான், அவன் முகம் தரையைத்
தொட்டது. 15சாமுவேலின் ஆவி சவுலிடம்,
"என்னை ஏன் தொந்தரவு செய்கிறாய்?
எதற்காக எழுப்பினாய்?" என்று கேட்டது.
அதற்கு சவுல், "நான் ஆபத்தில் சிக்கி
இருக்கிறேன். பெலிஸ்தியர் எனக்கு எதி
ராகச் சண்டையிட வந்திருக்கிறார்கள்.
தேவன் என்னை கைவிட்டு விலகிவிட்டார்,
தேவன் இனி எனக்குப் பதில் சொல்வ
தில்லை. அவர் தீர்க்கதரிசியையோ, கன
வையோ பயன்படுத்தி பதில் சொல்லு
வதில்லை. அதனால் உங்களை அழைத்தேன்.
நான் செய்யவேண்டியது இன்னது என்று
நீங்கள் சொல்ல விரும்புகிறேன்!" என்றான்.
16சாமுவேலின் ஆவி, "கர்த்தர் உன்னை
விட்டு விலகிவிட்டார். அவர் இப்போது
உனக்கு அருகிலுள்ள தாவீதோடு இருக்
கிறார். அதற்கு என்னை ஏன் தொந்தரவு
செய்கிறாய்? 17கர்த்தர் என்ன செய்ய
இருக்கிறாரோ அதையே என் மூலம் ஏற்
கனவே கூறிவிட்டார்! கர்த்தர் சொன்னதை
இப்போது நிறைவேற்றுகிறார். உனது
கைகளிலிருந்து கர்த்தர் அரசைக் கிழித்
தெடுத்து, உனக்கு அருகிலுள்ள தாவீதுக்குக்
கொடுத்திருக்கிறார். 18நீ கர்த்தருக்குக் கீழ்ப்
படியவில்லை. அமலேக்கியரை நீ முழுமை
யாக அழிக்கவில்லை. கர்த்தர் அவர்கள்
மீது கோபமுடையவராக இருக்கிறார் என்ப
தைக் காட்டவில்லை. அதனால் இன்று
கர்த்தர் உனக்கு இவ்வாறு செய்கிறார்.

ஊரிம் இது ஆசாரியர்கள் தேவனிடமிருந்து பதில் பெறுவதற்காக பயன்படுத்திய கற்கள். எண். 27:20-22.

குறி சொல்கின்ற ஒரு பெண் மரித்துப்போன உயிர்களு டன் பேசுகிறவள்.

பூமி அல்லது, "சீயோல், மரணத்தின் இடம்."

19கர்த்தர் உன்னையும், இஸ்ரவேல் படையை
யும் பெலிஸ்தர்கள் மூலமாகத் தோற்
கடிப்பார். நாளை நீயும், உனது மகன்களும்
இங்கே என்னோடு இருப்பீர்கள்!” என்றது.
20சவுல் உடனே தரையில் விழுந்து
கிடந்தான். சாமுவேல் சொன்னதைக் கேட்டு
மிகவும் பயந்தான். அன்று சவுல் இரவும்
பகலும் உண்ணாமல் இருந்ததால் மிகவும்
பலவீனமாக இருந்தான்.
21அந்தப் பெண் சவுலிடம் வந்து,
உண்மையில் அவன் பயப்படுவதைக் கவ
னித்தாள். அவள், “நான் உங்கள்
வேலைக்காரி, நான் உங்களுக்குக் கீழ்ப்
படிந்து இருக்கிறேன், என் உயிரைப்
பணயம் வைத்து நீங்கள் சொன்னபடி
செய்தேன். 22இப்போது தயவுசெய்து
எனக்குச் செவிகொடுங்கள். உங்களுக்குச்
சிறிது உணவு கொடுக்க அனுமதியுங்கள்,
நீங்கள் அதனை உண்ணவேண்டும், பின்
உங்கள் வழியில் செல்லப் போதுமான பலம்
கிடைக்கும்” என்றாள்.
23ஆனால் சவுல், “நான் உண்ண
மாட்டேன்” என மறுத்துவிட்டான். சவுலின்
அதிகாரிகளும் அந்தப் பெண்ணோடு
சேர்ந்து கெஞ்சினார்கள். இறுதியில் அவள்
சொன்னதைக் கேட்டான். தரையிலிருந்து
எழுந்து படுக்கையில் உட்கார்ந்தான். 24அப்
பெண்ணின் வீட்டில் கொழுத்த கன்றுகுட்டி
இருந்தது. அவள் அதை வேகமாகக்
கொன்று சமைத்தாள். மாவைப் பிசைந்து,
புளிப்பு இல்லாத அப்பம் சுட்டாள். 25சவுல்
மற்றும் அவனது அதிகாரிகளின் முன்னர்
அவள் அந்த உணவை வைத்தாள். அவர்கள்
அதை புசித்தப்பின், அன்று இரவே
புறப்பட்டுச் சென்றார்கள்.

“தாவீது எங்களோடு வரக்கூடாது!”

29 ஆப்பெக்கில் பெலிஸ்திய வீரர்கள்
கூடினார்கள். இஸ்ரவேலர் யெஸ்ரயே
லிலிருக்கிற நீரூற்றுக்கருகில் முகாமிட்டனர்.
2பெலிஸ்திய அரசர்கள் தங்கள் 100 பேர்
குழுவோடும், 1,000 பேர் குழுவோடும்
அணிவகுத்து வந்தனர். தாவீதும் அவனது
ஆட்களும் ஆகீஸோடு கடைசியில் சேர்ந்து
வந்தனர்.
3பெலிஸ்திய தலைவர்கள், “இந்த
எபிரெயர் இங்கே என்ன செய்துக் கொண்டி
ருக்கிறார்கள்?” என்று கேட்டனர்.

அதற்கு ஆகீஸ் பெலிஸ்திய தலைவரிடம்,
“இவன் தாவீது, இவன் முன்பு சவுலின்
அதிகாரிகளுள் ஒருவனாக இருந்தான்.
என்னிடம் இப்போது நீண்ட காலம் இருக்கி
றான். அவன் சவுலை விட்டு என்னிடம்
வந்து சேர்ந்த நாள் முதல் இன்றுவரை
அவனிடம் எந்தக் குறையும் காணவில்லை”
என்றான்.
4ஆனால் பெலிஸ்திய தலைவர்கள்
ஆகீஸின் மீது கோபங்கொண்டு, “தாவீதைத்
திரும்ப அனுப்பிவிடு. நீ கொடுத்த
நகரத்திற்கே அவன் திரும்பிப் போகட்டும்.
அவன் நம்மோடு யுத்தத்துக்கு வரக்கூடாது.
அவன் இங்கே இருப்பதும், எதிரி நமது
முகாமிற்குள் இருப்பதும் ஒன்றே. அவன்
நமது வீரர்களைக் கொல்வதன் மூலம்
அவனது அரசனாகிய சவுலுக்கு ஆதரவாகி
விடுவான். 5தாவீதைப்பற்றி ஏற்கனவே
இஸ்ரவேல் ஜனங்கள் ஆடிப்பாடிக் கொண்டி
ருக்கிறார்கள்.

“சவுல் ஆயிரக்கணக்கான
பகைவர்களைக் கொன்றான்.
ஆனால் தாவீதோ
பத்தாயிரக்கணக்கான
பகைவர்களைக்
கொன்றிருக்கிறான்!” என்றனர்.

6எனவே ஆகீஸ் தாவீதை அழைத்து,
“கர்த்தருடைய ஜீவன்மேல் ஆணையாக,
நீ எனக்கு உண்மையாக இருக்கிறாய். நீ
எனது படையில் இருப்பது எனக்கு மிகவும்
பிடித்தமான ஒன்று. என்னிடம் நீ சேர்ந்த
நாள் முதலாக உன்னிடம் எந்தக் குற்றமும்
காணவில்லை. ஆனால் பெலிஸ்திய
படைத்தலைவர்கள் உன்னை அங்கீகரிக்க
வில்லை. 7என்றாலும் சமாதானமாகத்
திரும்பிப் போ. பெலிஸ்திய அரசர்களுக்கு
எதிராக எதுவும் செய்யாமல் இரு” என்
றான்.
8அதற்கு தாவீது, “நான் என்ன குற்றம்
செய்தேன்? நான் உங்களிடம் சேர்ந்த
நாள்முதல், இன்றுவரை என்னிடம் என்ன
தவறு கண்டீர்கள்? என் அரசனுக்கு
எதிரான பகைவர்களோடுச் சண்டையிட
ஏன் என்னை அனுமதிக்கவில்லை?” என்று
கேட்டான்.
9ஆகீஸோ, “நான் உன்னை விரும்புகி
றேன், அது உனக்குத் தெரியும். நீ தேவனிட
மிருந்து வந்த தூதுவனைப் போன்றவன்.
ஆனால் பெலிஸ்திய அரசர்களோ, ‘நம்மோடு
தாவீது போருக்கு வரக்கூடாது’ என்கின்ற
னர். 10அதிகாலையில், நீயும் உனது
ஆட்களும் திரும்பி, நான் கொடுத்த
நகரத்திற்கே போங்கள். தலைவர்கள் சொன்
னதுபோல் கெட்டக் காரியங்களில் கவனம்
செலுத்தாதீர்கள், நீ நல்லவன். எனவே,
சூரியன் உதிக்கும் முன் புறப்பட்டுப் போ”
என்றான்.
11ஆகவே, தாவீதும் அவனது ஆட்களும்
அதிகாலையில் எழுந்து, பெலிஸ்திய
நகரத்திற்குத் திரும்பினார்கள். பெலிஸ்தர்
களோ யெஸ்ரயேலுக்குச் சென்றனர்.

சிக்லாக் மீது அமலேக்கிய தாக்குதல்

30 மூன்றாவது நாள், தாவீதும் அவனது
ஆட்களும் சிக்லாகை அடைந்தனர்.
அங்கே அமலேக்கியர்கள் அந்நகரைத்

தாக்குவதைக் கண்டனர். அவர்கள் நெகேவ்
பகுதியில் நுழைந்து சிக்லாகைத் தாக்கித்
தீ மூட்டினர். 2சிக்லாகில் உள்ள பெண்
களைச் சிறைப்பிடித்தனர். இளைஞர் முதல்
முதியோர்வரை அனைவரையும் பிடித்தனர்.
ஆனால் யாரையும் கொல்லவில்லை.
அவர்களைப் பிடித்துக் கொண்டுச் சென்று
விட்டார்கள்.
3தாவீதும் அவனது ஆட்களும் சிக்லாகை
அடைந்தபோது, அது எரிந்து கொண்டி
ருந்தது. அவர்களின் மனைவியர், ஆண்
பிள்ளைகள், பெண் பிள்ளைகள் அனை
வரும் அமலேக்கியர்களால் சிறைகொண்டு
போகப்பட்டனர். 4அவர்கள் இதனைக் கண்டு
கதறி அழுதனர். மீறி, அழுது அழ முடியாத
அளவிற்குப் பலவீனம் அடைந்தனர்.
5அமலேக்கியர்கள் தாவீதின் இரு மனைவிய
ரான யெஸ்ரேலின் அகினோவாளையும்,
கர்மேலிலுள்ள நாபாலின் விதவையான
அபிகாயீலையும் பிடித்துச் சென்றி
ருந்தார்கள்.
6படையில் உள்ள அனைவரும் தமது
மகன்களையும் மகள்களையும் பறிகொடுத்த
தால், கடுங்கோபமும் வருத்தமும் கொண்ட
னர். அவர்கள் தாவீதைக் கல்லெறிந்து
கொல்ல எண்ணினார்கள். இந்தச் செய்தி
தாவீதைத் தளரச்செய்தது. எனினும் தேவ
னாகிய கர்த்தருக்குள் தன்னைத் திடப்படுத்தி
னான். 7தாவீது ஆசாரியனும் அகி
மெலேக்கின் மகனுமான அபியத்தாரிடம்,
“ஏபோத்தைக் கொண்டு வா” என்றான்.
அபியத்தார் அவனிடம் ஏபோத்தைக்
கொண்டு போனான்.
8பிறகு தாவீது கர்த்தரிடம் ஜெபம்
செய்தான். “எங்கள் குடும்பத்தைப் பிடித்துக்
கொண்டு போனவர்களைத் துரத்தட்டுமா?
அவர்களைப் பிடிப்போமா?” என்று
கேட்டான்.
அதற்கு கர்த்தர், “அவர்களைத் துரத்து.
நீ பிடிப்பாய். நீ உங்கள் குடும்பங்களைக்
காப்பாற்றுவாய்” என்றார்.

எகிப்திய அடிமையை தாவீதும் அவனது ஆட்களும் காண்கிறார்கள்

9-10தாவீது தன்னோடு 600 வீரர்களை
அழைத்துக் கொண்டுப் பேசோர் ஆற்றருகே
வந்தான், அங்கு 200 பேர்த் தங்கிவிட்டனர்,
காரணம் அவர்கள் மிகவும் பலவீனமாக
இருந்தனர். அமலேக்கியரைத் துரத்திக்
கொண்டு, தாவீது 400 பேரோடு கிளம்
பினான்.
11வயலில் ஒரு எகிப்திய அடிமையை
தாவீதின் ஆட்கள் கண்டனர், அவனை
தாவீதிடம் அழைத்து வந்தனர். அவனுக்கு
உண்ண உணவும் குடிக்க தண்ணீரும்
கொடுத்தனர். 12அவர்கள் அவனுக்கு
அத்திப்பழ அடையின் ஒரு துண்டையும்
வற்றலான இரண்டு திராட்சைக் குலை
களையும் தின்ன கொடுத்தனர். அதை
உண்டு அவன் சிறிது பெலன் பெற்றான்.
அவன் மூன்று நாட்கள் இரவும் பகலும்
உண்ணாமல் இருந்தப்படியால் மிகவும்
பலவீனமாக இருந்தான்.
13தாவீது அந்த அடிமையிடம், “உனது
எஜமானன் யார்? நீ எங்கிருந்து வருகி
றாய்?” எனக்கேட்டான்.
அதற்கு அவன், “நான் ஒரு எகிப்தியன்,
நான் அமலேக்கியனின் அடிமை. மூன்று
நாட்களுக்கு முன் நான் சுகமில்லாமல்
போனதால் என்னை இங்கேயே விட்டு
விட்டுப் போய்விட்டனர். 14நாங்கள் கிரேத்
தியர்கள்* வாழும் நெகேவ் பகுதியைத்
தாக்கினோம். யூதா நாட்டையும் காலேப்
பகுதியையும் தாக்கினோம். சிக்லாகையும்
தீ மூட்டி எரித்தோம்” என்று பதிலுரைத்
தான்.
15தாவீது அவனிடம், “எங்கள் குடும்பத்
தைப் பிடித்துப் போனவர்கள் இருக்கும்
இடத்திற்கு எங்களை அழைத்துப்
போவாயா?” எனக்கேட்டான்.
அதற்கு அந்த எகிப்தியன், “தேவன்
முன்னிலையில் சிறப்பு ஆணை செய்து
தந்தால் நான் உங்களுக்கு உதவுவேன்,
அதன்படி நீங்கள் என்னைக் கொல்லக்
கூடாது. அதோடு என் எஜமானனிடமும்
என்னைத் திரும்ப அனுப்பக்கூடாது” என்
றான்.

தாவீது அமலேக்கியரைத் தோற்கடிக்கிறான்

16அந்த எகிப்தியன் அமலேக்கியர்
இருக்கும் இடத்திற்கு தாவீதை அழைத்துப்
போனான். அங்கே அவர்கள் தரையில்
புரண்டு, குடித்து வெறித்துகொண்டும்,
சாப்பிட்டுக் கொண்டும் இருந்தனர்.
பெலிஸ்தர்களின் நகரங்களில் இருந்தும்
யூதாவிலிருந்தும் கொண்டுவந்த பொருட்
களால் மகிழ்ச்சியோடு அனுபவித்துக்
கொண்டிருந்தனர். 17தாவீது அவர்களைத்
தாக்கிக் கொன்றான். அவர்கள் காலைமுதல்
மறுநாள் மாலைவரை சண்டையிட்டனர்
அமலேக்கியரில் 400 இளைஞர்கள் மட்டும்
ஒட்டகத்தின் மூலம் தப்பித்துப் போனார்கள்,
மற்றவர் எவரும் பிழைக்கவில்லை.
18அமலேக்கியர்கள் கைப்பற்றிய அனைத்
தையும் தாவீது திரும்பப் பெற்றான். இரண்டு
மனைவியரையும் பெற்றுக்கொண்டான்,
19எதுவும் தவறவில்லை. சிறுவர்களும்,
முதியவர்களும் கிடைத்தனர். மகன்களையும்,
மகள்களையும் திரும்பப் பெற்றனர். விலை
மதிப்புள்ள பொருட்களையும் பெற்றனர்.
20அனைத்து ஆடுகளையும், வெள்ளாடுகளை

கிரேத்தியர்கள் அல்லது “கிரேத்திலுள்ள ஜனங்கள்.” இவர்கள் சொல்லப்போனால் பெலிஸ்தியர்களே, ஆனால் தாவீதின் சில சிறந்த வீரர்கள் கிரேத்தியர்களே.

யும் தாவீதுக் கைப்பற்றினான். அவைகளை
தங்களுக்கு முன்னால் ஓட்டினார்கள். தாவீ
தின் ஆட்கள், "அவை தாவீதின் பரிசுகள்"
என்றனர்.

அனைவருக்கும் சம பங்கீடு

21 தனது 200 ஆட்கள் இருக்கும் பேசோர்
ஆற்றங்கரைக்கு தாவீது வந்துச் சேர்ந்தான்.
அங்கு களைப்பாகவும், பலவீனமாகவும்
இருந்தவர்கள் தாவீதைக் கண்டதும் மகிழ்ச்சி
யோடு ஆரவாரம் செய்தனர். 22 தாவீதைப்
பின் தொடர்ந்தவர்களில் சிலர் கெட்டவர்
களாகவும், குழப்பம் செய்பவர்களாகவும்
இருந்தனர். அவர்கள், "இந்த 200 பேரும்
எங்களோடு வரவில்லை. எனவே நாங்கள்
கைப்பற்றியவற்றில் இவர்களுக்குப் பங்கு
கொடுக்க மாட்டோம். இவர்களுக்கு இவர்க
ளது மனைவி ஜனங்கள் மட்டுமே உரியவரா
வார்கள்" என்றனர்.
23 தாவீதோ, "அவ்வாறில்லை, என்
சகோதரரே அப்படிச் செய்யக்கூடாது! நாம்
மீட்டதை, கர்த்தர் நமக்குக் கொடுத்ததைப்
பாருங்கள்! நம்மை தாக்கியவர்களை கர்த்தர்
தான் தோல்வியுறச் செய்தார்! 24 உங்கள்
பேச்சுக்கு யாரும் சம்மதம் தெரிவிக்க
முடியாது! இங்கே தங்கியவர்களாயினும்
சரி, சண்டைக்கு போனவர்களாயினும் சரி,
அனைவருக்கும் சமபங்கு உண்டு" என்று
பதில் சொன்னான். 25 தாவீது இதனை இஸ்ர
வேலருக்கு ஒரு விதியாக்கினான். இது
இன்றும் தொடர்ந்து வருகிறது.
26 தாவீது சிக்லாகை வந்தடைந்தான்.
யூதாவின் தலைவர்களுக்கும் அவனது நண்
பர்களுக்கும் அமலேக்கியரிடம் அபகரித்தப்
பொருட்களில் சிலவற்றை அன்பளிப்பாகக்
கொடுத்தான். அவன், "கர்த்தருடைய பகை
வரிடமிருந்து வென்று எடுத்தப் பொருட்
களை உங்களுக்குத் தருகிறோம்" என்றான்.
27 அவன் மேலும் பெத்தேல் நெகெவி
லுள்ள ராமோத், யாத்தீர், 28 ஆரோவேர்,
சிப்மோத், எஸ்கேமோவா, 29 ராக்கால்,
யெராமித்தீயரின் கேனிய நகரங்கள், 30 ஓர்மா,
கொராசீன், ஆற்றாகில், 31 எப்ரோன் ஆகிய
நகரங்களில் உள்ளவர்களுக்கும் தாவீது தன்
ஆட்களுடன் எங்கெங்கே தங்கினானோ,
அங்கே உள்ள தலைவர்களுக்கும் அன்ப
ளிப்பைக் கொடுத்து அனுப்பினான்.

சவுலின் மரணம்

31 பெலிஸ்தியர் இஸ்ரவேலுக்கு எதி
ராகப் போரிட்டனர், இஸ்ரவேலர்
தோற்று ஓடினார்கள். கில்போவா மலைப்
பகுதியில் பல இஸ்ரவேலர் கொல்லப்
பட்டனர். 2 சவுலுக்கும் அவனது மகன்க
ளுக்கும் எதிராகக் கடுமையாய் பெலிஸ்தியர்
போரிட்டனர். அவர்கள் சவுலின் மகன்
களான யோனத்தான், அபினதாப், மற்றும்
மல்கிசூகா ஆகியோரைக் கொன்றனர்.
3 சவுலுக்கு எதிராக போரானது மேலும்
மேலும் வலுத்தது. வில் வீரர்கள் சவுலின்
மீது அம்பு எய்ததால், சவுல் பயங்கரமாக
காயப்பட்டான். 4 தன்னோடு ஆயுதம் தூக்கி
வருபவனிடம் சவுல், "உனது பட்டயத்தை
எடுத்து என்னைக் கொன்று போடு.
அதனால் அந்நியர் என்னை காயப்படுத்தி
கேலிச் செய்யாமல் இருப்பார்கள்" என்றான்.
அவன் பயந்து அவ்வாறு செய்ய மறுத்து
விட்டான்.
எனவே சவுல் தனது வாளை உருவி
தற்கொலை செய்து கொண்டான். 5 சவுல்
மரித்துப்போனதை, ஆயுதங்களை எடுத்து
வரும் அவனது உதவியாளன் அறிந்து,
தனது வாளால் தானும் மடிந்தான். 6 எனவே
சவுலும் அவனது மூன்று மகன்களும்,
சவுலின் ஆயுதம் தாங்கும் வீரனும்
அனைத்துப் படைவீரர்களும் அதே நாளில்
மரித்தார்கள்.

சவுலின் மரணத்தால் பெலிஸ்தியர் மகிழ்ச்சியடைகின்றனர்

7 பள்ளத்தாக்கின் மறு பக்கத்தில் இருந்த
இஸ்ரவேலர் தங்கள் சேனை பயந்து
ஓடுவதைக் கண்டனர். சவுலும் அவனது
மகன்களும் மரித்துப்போனதை அறிந்தனர்.
எனவே அவர்கள் தங்கள் நகரங்களை
விட்டு ஓடிப்போனார்கள். பெலிஸ்தியர் அந்ந
கரங்களை ஆக்கிரமித்துக் கொண்டனர்.
8 மறுநாள், பெலிஸ்தியர் பிணங்களின்
மேலுள்ள பொருட்களை கவரச் சென்றனர்.
கில்போவா மலையில் சவுலும், அவனது
மூன்று மகன்களும் மரித்துக் கிடப்பதைக்
கண்டனர். 9 அவர்கள் சவுலின் தலையை
வெட்டி, அவனது ஆயுதங்களையும் எடுத்துக்
கொண்டனர். அவர்கள் இச்செய்தியைப்
பெலிஸ்தருக்கும், தங்கள் விக்கிரகங்களின்
ஆலயத்திற்கும் எடுத்துச் சென்றனர்.
10 சவுலின் ஆயுதங்களை அவர்கள் அஸ்த
ரோத் கோவிலில் வைத்தனர். சவுலின்
உடலை அவர்கள் பெத்ஸானின் சுவரில்
தொங்கவிட்டனர்.
11 இது குறித்து யாபேஸ் கீலேயாத்
நகரத்தார் கேள்விப்பட்டனர்! 12 எனவே,
எல்லா வீரர்களும் பெத்ஸானுக்கு இரவு
முழுவதும் பயணம் செய்து, சவுலின்
உடலையும், அவனது மகன்களின் பிணங்
களையும் எடுத்து வந்தனர், அவற்றை
யாபேசில் எரித்தனர். 13 பின்பு சவுல் மற்றும்
அவனது மகன்களின் எலும்புகளை எடுத்து
யாபேசில் பெரிய மரத்தடியில் புதைத்தனர்.
யாபேஸின் குடிகள் 7 நாட்களுக்கு உணவு
உண்ணாமல் துக்கம் கொண்டாடினர்.

License Agreement for Bible Texts

World Bible Translation Center
Last Updated: September 21, 2006

Copyright © 2006 by World Bible Translation Center
All rights reserved.

These Scriptures:
- Are copyrighted by World Bible Translation Center.
- Are not public domain.
- May not be altered or modified in any form.
- May not be sold or offered for sale in any form.
- May not be used for commercial purposes (including, but not limited to, use in advertising or Web banners used for the purpose of selling online add space).
- May be distributed without modification in electronic form for non-commercial use. However, they may not be hosted on any kind of server (including a Web or ftp server) without written permission. A copy of this license (without modification) must also be included.
- May be quoted for any purpose, up to 1,000 verses, without written permission. However, the extent of quotation must not comprise a complete book nor should it amount to more than 50% of the work in which it is quoted. A copyright notice must appear on the title or copyright page using this pattern: "Taken from the HOLY BIBLE: EASY-TO-READ VERSION™ © 2006 by World Bible Translation Center, Inc. and used by permission." If the text quoted is from one of WBTC's non-English versions, the printed title of the actual text quoted will be substituted for "HOLY BIBLE: EASY-TO-READ VERSION™." The copyright notice must appear in English or be translated into another language. When quotations from WBTC's text are used in non-saleable media, such as church bulletins, orders of service, posters, transparencies or similar media, a complete copyright notice is not required, but the initials of the version (such as "ERV" for the Easy-to-Read Version™ in English) must appear at the end of each quotation.

Any use of these Scriptures other than those listed above is prohibited. For additional rights and permission for usage, such as the use of WBTC's text on a Web site, or for clarification of any of the above, please contact World Bible Translation Center in writing or by email at distribution@wbtc.com.

World Bible Translation Center
P.O. Box 820648
Fort Worth, Texas 76182, USA
Telephone: 1-817-595-1664
Toll-Free in US: 1-888-54-BIBLE
E-mail: info@wbtc.com

WBTC's web site – World Bible Translation Center's web site: http://www.wbtc.org

Order online – To order a copy of our texts online, go to: http://www.wbtc.org

Current license agreement – *This license is subject to change without notice. The current license can be found at:* http://www.wbtc.org/downloads/biblelicense.htm

Trouble viewing this file – If the text in this document does not display correctly, use Adobe Acrobat Reader 5.0 or higher. Download Adobe Acrobat Reader from:
http://www.adobe.com/products/acrobat/readstep2.html

Viewing Chinese or Korean PDFs – To view the Chinese or Korean PDFs, it may be necessary to download the Chinese Simplified or Korean font pack from Adobe. Download the font packs from:
http://www.adobe.com/products/acrobat/acrrasianfontpack.html